OFFICE OF THE REGISTRAR OF BOOKS
30 MAR 1940
MADRAS

ஸ்ரீராமஜெயம.

# ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு.

—திருவள்ளுவர்.

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி ! மனத்தைச் சார்ந்து.

—ஸ்ரீ வீரராகவ கவி.



| மலர் 16 | பிரமாதி ௵ கார்த்திகை ௴<br>டிசம்பர் 1939 | இதழ் 12 |
| --- | --- | --- |



## திருமால் துதி

பரவிப் பணிந்தக்கால் பாழ்பிறவித் துன்பம்
விரவ விடமுண்டோ வேறு—கரவுடைய
உள்ள முடைய வுரோமஞ் சிலிர்ப்பெய்த
வெள்ளத் தணையானை வேண்டு. 1

நறவார் துளவணியு நாரா யணனை
மறவா திருக்கின் மனனே—பிறவாத
பேரின்ப நன்னிலையைப் பெற்றுய்நீ யற்றிடுவாய்
பாரின்பப் பாழ்வலையின் பற்று. 2

ஆழிப்படை கொண்ட அச்சுதா வன்றமரில்
சூழிக்களிற் றைத்துடைத் திட்டாய்—கோழிக்
கொடியான்றன் தந்தை குளிர்சடைமேல் கொள்ளும்
அடியாய் அடியேற்(கு) அருள். 3

நெஞ்சமே நீதளரேல் நேமிப் பொருபடைதான்
கஞ்சத் திருக்கரத்துக் காத்திருப்பப்—பஞ்சவர்க்குத்
தூதுசெலும் தாளும் துணையிருப்ப வெவ்வினைதான்
ஏதுசெயும் சொல்லா யினி. 4

மனத்தின் மயக்கன்றி மாறுண்டோ மாயன்
இனத்தி னடியார் இரங்கார்—கனத்தின்
நிறத்தவனை நெஞ்சில் நினைக்குங்கா லுண்டோ!
செறுத்த வினையின் திறல். 5

—திரு. ராகவாசாரியர்.

# வெளிநாட்டுச் செய்திகள்

## சாம்ராஜ்ய விமானப் பயிற்சி திட்டம்

விமானப் பயிற்சி திட்டம் சம்பந்தமாக, பிரிட்டன், ஆஸ்டிரேலியா, நியூஜீலந்து, கானடா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளிடையே நடைபெற்று வந்த விவாதங்கள் முடிந்து விட்டனவென்றும், இவர்களுடைய முடிவு அந்தந்த சர்க்கார்களுக்கு அனுப்பப்பட்டிருப்பதாகவும் ஸ்ரீ. மாக்கென்ஸி கிங் தெரிவித்தார்.

## ஜெர்மன் ஏற்றுமதிகளைக் கைப்பற்ற உத்தரவு

ஜெர்மன் ஏற்றுமதிகளைக் கைப் பற்றுவதை அனுமதிக்கும் ஒரு கவுன்சில் உத்தரவில், ஜார்ஜ் மன்னர் கையெழுத்து செய்துவிட்டார். நடுநிலைமை நாடுகளின் க்ஷேமலாபத்தில் நெருங்கிய கவனம் செலுத்தப்படு மென்று கூறும் விளக்கமான ஒரு அறிக்கையும் அதனுடன் கூடப் பிரசுரமாகும். ஜெர்மனி ரொக்கம் கொடுத்துத்தான் பண்டங்களை வாங்கவேண்டியிருக்கிறது. ரொக்கம் குறைவா யிருக்கிறது. எனவே ஏற்றுமதிகளைக் கைப்பற்றுவதன் மூலம் துரிதமான பலன்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

## பின்லாந்தை ரஷ்யா பயமுறுத்துகிறது

லெனின்கிராடெங்கும் மக்கள் கோபமும் ஆத்திரமும் அடைந்திருப்பதாக மாஸ்கோ ரேடியோ கூறுகிறது. பின்னிஷ் யுத்த வெறியர்கள் திமிருடன் ஆத்திர மூட்டுவதை அநேக இடங்களில் ஜனங்கள் தாங்களாகவே கூடிக் கண்டித்தனர் என்று அது கூறுகிறது. பின்னிஷ் எல்லையை அடுத்தாற்போலுள்ள செஞ்சேனைத் துருப்புகளின் கூட்டங்களில் நிறைவேறிய தீர்மானங்களையும் மாஸ்கோ ரேடியோ ஒலிபரப்பியது.

## கடற் கண்ணிகள் அபாயம்

### சென்ற வாரத்தில் 17 கப்பல்கள் பலி

'ராய்ஸ்டன் கிரேஞ்ச்' என்ற பிரிட்டிஷ் கப்பல் (5114 டன்கள்) அட்லாண்டிக்கில் மூழ்கடிக்கப்பட்டு விட்டதாக இன்று செய்தி கிடைத்திருக்கிறது. உயிர்ச்சேதம் எதுவும் இல்லை. சென்ற வாரத்தில் மொத்தம் 25,787 டன்கள் மொத்த எடையுள்ள 11 பிரிட்டிஷ் கப்பல்களும் 23,949 டன்கள் மொத்த எடையுள்ள 4 நடுநிலைமை நாட்டுக் கப்பல்களும், 3,000 டன் எடையுள்ள, 2 பிரெஞ்சு கப்பல்களும் மூழ்கடிக்கப்பட்டிருக்கின்றன.

## டச்சு கப்பல் பிரயாணம் ரத்து

நவம்பர் 25வ யன்று ராட்டர்டாமிலிருந்து டச்சு இந்தீஸுக்குப் புறப்பட்டிருக்க வேண்டிய 'ஸிபாஜக்' என்ற டச்சுக்கப்பல், கடலிலுள்ள அபாயத்தை முன்னிட்டு, இப்போதைக்குப் புறப்படாதென்று ஆம்ஸ்டர்டாம் செய்தியொன்று கூறுகிறது.

## பிடிபட்ட ஜெர்மன் கப்பலின் கதி

'போர்க்கம்' என்ற ஒரு ஜெர்மன் வர்த்தகக் கப்பலை, ஒரு பிரிட்டிஷ் யுத்தக் கப்பல் பிடித்து, அதில் பறி முதல் அதிகாரிகளை ஏற்றி, துறை முகத்திற்கு அழைத்துச் சென்று கொண்டிருந்தது. வழியில் ஒரு ஸப்மரைன் வந்து ஜெர்மன் கப்பலைத் தாக்கி அதற்குத் தீ வைத்துவிட்டது. பறிமுதல் அதிகாரிகளுக்குச் சேதமில்லை. ஆனால், ஜெர்மன் கப்பலிலிருந்த 4 மாலுமிகள் கொல்லப்பட்டனர். 'போர்க்கம்' கப்பல் வடகடலில் பிடிக்கப்பட்டது.

133

# உள்நாட்டுச் செய்திகள்

## ராஜாக்களுக்கு நகரசபை வரவேற்பு

### சர்க்கார் அனுமதி அவசியம்

சமஸ்தானாதிபதிகளுக்கு வரவேற்பு அளிக்கத் தீர்மானிக்கும் நகரசபைகள் இது சம்பந்தமான செலவை மேற்கொள்ளுமுன்னர் சர்க்காரிடம் அனுமதி பெற வேண்டியது அவசியமெனச் சர்க்கார் ஸ்தல ஸ்தாபனங்களுக்கு உத்திரவிட்டுள்ளனர்.

## எலிகளின் படையெடுப்பு

மியான் வாலியில் உள்ள சர்க்கார் கஜானாவிற்குள் எலிகள் பல படையெடுத்தன! அங்கு வைத்திருந்த நூறு ரூபாய் நோட்டுகள் கட்டில் பெரும்பாலானவற்றை "டிபன்" செய்தன! காலையில் கஜானாதிகாரி மரப்பெட்டியைத் திறக்கையில் நோட்டுகள், எலிகள் கோலாகலத்தின் விளைவாகச் சின்னாபின்னமாகிக் கிடப்பதைக் கண்டார். அந்த அதிகாரிக்கு எலிகள் ஒருவிஷயத்தில் ஆறுதலைத் தந்தன. நல்லவேளையாக நோட்டுகளின் நம்பர்களை அவை உண்ணவில்லை!

## வங்காளக்குடாக் கடலில் ஜெர்மன் கப்பல் இல்லை!

### புரளிகளுக்குப் பர்மா சர்க்கார் மறுப்பு

வங்காளக் குடாக் கடலில் ஒரு ஜெர்மன் யுத்தக் கப்பல் இருப்பதாகவும் இரு கப்பல்கள் பலியாகிவிட்டதெனவும் கிளம்பிய புரளியை மறுத்து பர்மா சர்க்கார் விடுத்திருக்கும் அறிக்கையொன்றில் ஜெர்மன் கப்பல் எதுவும் வங்காளக்குடாக் கடலில் நடமாடவில்லையெனக் கூறியுள்ளனர்.

## காந்திஜி பர்தோலியில் ஒருமாத வாசம்

காந்திஜி வழக்கம்போல ஜனவரி 15ந் தேதியிலிருந்து பிப்ரவரி 15ந் தேதி வரை பர்தோலியில் ஒரு மாதத்திற்குத் தங்குவாரெனத் தெரிகிறது. அதற்குப்பின் ஆமதாபாத் விஜயம் செய்து, சபர்மதி ஆச்ரமத்தில் 3 நாட்களுக்கு நடக்கப் போகும் அகில இந்திய ஹரிஜன சேவா சங்க நிர்வாக கவுன்ஸில் கூட்டத்தில் கலந்துகொள்வார்.

## ராம்கார் காங்கிரஸ்

### தேதி விவரம்பற்றிக் காரியக் கமிட்டி தீர்மானம்

1940ஆம் வருஷம் மார்ச்சு மாதத்திய ராம்கார் காங்கிரஸின் தேதி முதலிய விவரங்களைப்பற்றிக் காங்கிரஸ் காரியக் கமிட்டி பின்வருமாறு தீர்மானம் செய்திருக்கிறது:—

1. பிரதிநிதிகள் தேர்தல் 28-1-40 வரை நடைபெறும். 2. அக்ராசனர் பொறுக்கி எடுத்தல் 4 2-40வரை நடைபெறும். 3. அ. இ. கா. கமிட்டி மெம்பர்களையும்; அக்ராசனரையும் தெரிந்தெடுக்கப் பிரதிநிதிகளின் (டெலிகேட்களின்) கூட்டம் 15-2-40ல் அன்று நடைபெறும். 4. அக்ராசனர் தேர்தல் முடிவு 19-2.40-ல் அறிவிக்கப்படும். 5. காங்கிரஸ் மகாசபையின் கூட்டம் 1940 வருஷம் மார்ச்சு மாதம் 3வது வாரத்தில் கூடும்.

183039

# மதிப்புரை

**ஸ்ரீ. M. C. ஸ்ரீநிவாசன், M. A., B. L.**

## சகுந்தலா நாடகம்

வித்வான் அ. குமாரகுருபர ஆதித்தர் : சென்னை கிறிஸ்டியன் காலேஜ் ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதர் எழுதியது. விலை ரூ. 1—4. கிடைக்குமிடம் "வித்வா பீடம்" 90, பார்பர்ஸ் பிரிட்ஜ், மைலாப்பூர், சென்னை.

மகாகவி காளிதாஸனின் சாகுந்தல நாடகத்தை அறியாதவர்கள் உலகத்திலேயே இருக்கமாட்டார்களென்று சொல்லலாம். இந்தியாவில் எத்தனை பாஷைகள் இருக்கின்றனவோ அத்தனையிலும் சாகுந்தலத்தை மொழிபெயர்த்திருக்கிறார்கள். ஆனால், புத்தகங்கள் எழுதுவதும் வெளிவருவதும் ஒரு விஷயம்; அவைகளைப் படிப்பது வேறு விஷயம். படிப்பில் ஆசையுள்ளவர்களுக்குப் புத்தகத்தைப் பார்த்தவுடன் படிக்கவேண்டுமென்ற ஆசை உதிக்கவேண்டும். இந்தப் புத்தகத்தைப் பார்க்கும்பொழுதே வாங்கவேண்டும், படிக்கவேண்டும், பின்பு புத்தக அலமாரியில் பத்ரமாக வைத்து அலமாரியை அழகு படுத்தவேண்டுமென்ற ஆவா உண்டாகிறது. சம்ஸ்கிருத சாகுந்தலத்திற்கு மொழிபெயர்ப்புடன் படிக்க ஆசைப்படுபவர்களும், புதிதாகத் தமிழிலேயே அதைப் படிக்க ஆசைப்படுபவர்களும் எளிதில் கிரகிக்கக்கூடிய தெள்ளிய நடையிலுள்ள இது மேலான வெளியீடு என்பதில் சந்தேகமில்லை. தமிழர்கள் தமிழில் வெளிவந்துள்ள இந்த அழகிய நூலை வாங்கி ஆதரிப்பார்களென நம்புகிறோம்.

---

## படுகளத்தில் பாரத தேவி

ஆசிரியர் : ஸ்ரீ. ஐ. மாயாண்டி பாரதி. லோகசக்தி பிரசுராலயம், சௌத்கூவம்ரோட் மௌண்ட்ரோட், P. O., சென்னை. அணா 4.

அரசியலில் இலக்கிய மணமும் கமழவேண்டுமென்ற நோக்கத்துடன் இச் சிறு புத்தகம் (D/C. 84 பக்கங்கொண்டது) வரையப்பட்டுள்ளது. தற்காலத்தில் நமது தேச நிலைமையையும், உலக நிலைமையையும், நமது கடமையையும்பற்றித் தேசபக்தி ஊட்டத்தக்கவாறு மிகவும் ஸ்வாரஸ்யமான நடையில் எழுதப்பட்டுள்ளது. இடையிடையே தேசியப் பாடல்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இது, ஒவ்வொரு தேசபக்தரும் படிக்கக்கூடியது.

## பாரதமாதா—தீபச்சுடர்

தனிப்பிரதி உள்நாடு அணா 2. வெளிநாடு அணா 4. ஆசிரியர் : ஸ்ரீ. E. S. ரெட்டியார். ரெட்டியார்பாளையம், புதுச்சேரி. P. O.

இதில் பல ஸ்வாரஸ்யமான கட்டுரைகளும், சிறு கதைகளும் 2 கலர் ஆர்ட்படங்களும் அடங்கியிருக்கின்றன.

# மகாத்மாவின் மணிவாக்கு

## காங்கிரஸ்காரருக்கு உபதேசம்

'காங்கிரஸ்காரர்கள் அவர்கள் காங்கிரஸ்காரர்களென முத்திரை சூட்டிக் கொண்டிருந்தவர்களானாலும் சரி, அப்படி அல்லாதவராயினும் சரி நான் 'ஹரிஜன்' கட்டுரைகளில் கூறியுள்ள அஹிம்சா தர்மக் கொள்கையை ஏற்றுக்கொள்ளாவிட்டால், ராஷ்டிரபதி சமீபத்தில் வெளியிட்ட கட்டளைகளைப் போற்றிப் பணிய இஷ்டப்படாவிட்டால், நான் இந்தக் கட்டுரையில் கூறியுள்ள ஆலோசனைகளை ஏற்கத் தயாரில்லையென்றால், அவர்கள் இவ்விஷயமாகத் தங்களுக்குள்ள அதிருப்தியை ராஜேந்திர பாபுவிற்கு எழுத்து மூலமாகத் தெரிவித்துவிட வேண்டும்.

அப்படி அவர்கள் எழுத்து மூலமாகத் தெரிவிக்கும்போது அவர்கள் எவ்விதம் செய்தால் தாங்கள் விரும்புவார்கள் என்று தெரிவிக்கவேண்டும். அப்படி இவர்களது (கடிதம் எழுதுகிற காங்கிரஸ்காரர்களது) விருப்பத்திற்கு ராஜேந்திர பிரசாத் இணங்கவில்லையென்றால், தாங்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்பதையும் தெரிவித்துவிட வேண்டும்.

காங்கிரஸ் ஒரு விஷயத்தைக் கண்டிப்பாகத் தெளிவாக உணர்ந்து கொள்ளவேண்டும். கட்டளைகளுக்கு அரைகுறையான மனதுடன் கீழ்ப்படிவது, ஒரு வழியும் தீர்மானமாக இல்லாமலிருப்பது, தனித்தனி ஆலோசனைகள் செய்து கொண்டிருப்பது ஆகியவைகளுக்கு இது சமயமல்ல. தீர்மானமான நடவடிக்கை எடுக்க, காங்கிரஸ் பூராவும் பூரண நம்பிக்கையுடன் ஏக மனதுடன் முன்னோக்கி நகர வேண்டும்.

## காங்கிரஸ்காரர் நிலைமை

"காங்கிரஸ்காரர்கள் தெளிவாகத் தெரியக்கூடிய ஒரு தனி ரகமாகி விட்டார்கள் எனத் தோன்றுகிறது. காங்கிரஸில் உள்ள நானாவித கோஷ்டிகளுக்கெல்லாம் பொதுவாக ஒரு விஷயம் இருக்கிறது. அடியிலிருந்து நுனிவரையில் அவர்கள் தேசிய வாதிகள். இந்தியா சுதந்திர மடைய வேண்டுமென எவ்வளவு ஆதுரமாக அவர்கள் ஜீவனை வைத்துக்கொண்டிருக்கிறார்களோ அதே ஆதுரத்துடன் இது சித்தி பெறுவதற்காக உயிரை விடவும் தயாராக இருக்கிறார்கள்.

### தேசீய உணர்ச்சி

இந்தத் தேச பக்தர்கள்—அவர்கள் ஹிந்துக்களோ, முஸ்லிம்களோ, கிருஸ்துவர்களோ அல்லது வேறு எவராயினும் சரி—தேசியத்தை இவர்கள் தங்கள் மதத்தின் ஒரு அம்சமாகக் கொண்டுவிட்டனர்.

'காங்கிரஸ்காரன்' என்ற முத்திரை மட்டும் இருந்தால் போதும், வேறு முத்திரை வேண்டியதில்லை என்பவர்கள் தவிர, இப்போது காங்கிரஸ் மகாசபையில் சோஷலிஸ்டுகள்; பொதுவுடைமைக் கட்சியினர், கிஸான் சபைக்காரர்கள், தொழிலாளர்கள், காங்கிரஸ் தேசிய வாதிகள், ராயிஸ்டுகள், மாஜி-பயங்கர இயக்கக் கைதிகள், காந்தீயர்கள் என்று கூறப்

படுகிறவர்கள் ஆகியவர்கள் இருக்கின்றனர். வேண்டுமென்றே நான் எந்தக் கோஷ்டியினரையும் சொல்லாமல் விட்டுவிட வில்லை. இந்தக் கோஷ்டிகளுக்குள்ளேயே பல உட் பிரிவுகள் இருக்கின்றன. இதில் "பார்வர்டு பிளாக்" (உதிரிக் கட்சி) என்பது ஒரு 'அவியல்' (கதம்ப) கோஷ்டி. இதனுடைய இன்னொரு பெயர் இடதுசாரிக்காரர்கள் என்பதே. காங்கிரஸ் இயக்கம் பெருகிப் பரவப் பரவ, அது இன்னும் பல கோஷ்டிகளை உண்டாக்கலாம். ஆயினும் இத்தனை கோஷ்டியினருக்கும் பொதுவாக இருக்கும் ஒரு விஷயம் இதுதான். ஸ்வதந்திரம் வேண்டுமென்று கொழுந்து விட்டெரியும் ஒரு ஆசையும், அதற்காக ஆவியை அர்ப்பணம் செய்யவும் தயார் என்பதும்.

## 'காங்கிரஸ் ஹிந்துக்களே' ஒரு தனி ரகம்

காங்கிரஸ்காரர்களில் பெருவாரியானவர்கள் ஹிந்துக்கள் என்பது வாஸ்தவமே. ஆனால் இவர்கள் மற்ற ஹிந்துக்களினின்று தனித்திலங்குகிறார்கள். தென்னிந்தியாவில் ஆலயப்பிரவேச சுற்றுப் பிரயாணத்தின்போது இதனை நாங்கள் கண்டோம். சனாதனிகள்—அவர்கள் ஒரு சின்ன கோஷ்டியினர் எனக் கருதுகிறேன். பெரும்பாலும் காங்கிரஸ்காரர்களான சீர்திருத்த வாதிகளை எதிர்த்துப் போராடியிருக்கின்றனர். காங்கிரஸ்காரர்கள் மதத் துரோகிகள் என இவர்கள் கூறியிருக்கின்றனர்.

## ஹிந்து மகா சபையும் காங்கிரசும்

ஹிந்து மகா சபை வரவர காங்கிரஸை ஆட்சேபித்து வருகிறது. காங்கிரஸைப் பற்றி, சில ஹிந்து மகா சபை மெம்பர்கள், இதனிடம் வெறுப்பு தட்டும்படியான பாஷையை உபயோகித்து வருகின்றனர். காங்கிரஸில் சேர்ந்த ஹிந்துக்களை ஹிந்து மதத்தின் விரோதிகள் போல இவர்கள் பாவிக்கிறார்கள். காங்கிரசில் சேர்ந்துள்ள முஸ்லிம்கள் அநேகமாக ஜாதிப் பிரஷ்டம் செய்யப்பட்டவர்களாகி விட்டார்கள்.

## காங்கிரஸின் தொண்டு

இந்தத் தேசம் பரிபூர்ண சுதந்திரம் அடையச் செய்வதும் துணிகரமான சமூக சீர்திருத்தங்களைச் செய்வது பரந்த சகிப்புத்தன்மை நிலவச் செய்வது ஆகியவைகளுக்காக காங்கிரஸ்காரர்கள் பாடுப்படுகிறார்கள். இந்த விஷயத்தில் துயரம் மேற்கொண்டதிலும் தியாகம் செய்ததிலும் காங்கிரஸ் காரர்களுக்கு ஒரு அருமையான பெயர் இருக்கிறது என்பது நியாயமாக திருப்திபட வேண்டிய விஷயமே.

## புது கோஷ்டிகள் வளர்ச்சியின் அறிகுறியா ?

காங்கிரஸ் போன்ற ஒரு பரந்த பாமர மக்கள் ஸ்தாபனத்தில், நானாவித கோஷ்டிகள் அமைவது தவிர்க்க முடியாததாகும். இது முன்னேற்றத்தின் வளர்ச்சியின் கண்கூடான அறிகுறியாகவும் இருக்கலாம். சரி, இது இப்படித்தானென்றால் ஜாதிப் பூசல்கள் ஏன் இருக்கின்றன? மகா சபைக்காரர்கள் காங்கிரஸ் ஹிந்துக்கள்மீது ஏன் அவநம்பிக்கை கொள்கிறார்கள் ? எல்லா மதத்தையும் சேர்ந்த ஆண்களும் பெண்களும், காங்கிரஸ் கொடியின் கீழ் ஏன் சேரவில்லை. கடைசியாக நான் மேலே குறிப்பிட்ட காங்கிரஸுக்குள்ளிருக்கும் கோஷ்டிகளிடையேயாவது யாவும் சரியாக இருக்கிறதோ ? இவர்கள் நிலைமையைப் பரிசீலனை செய்வோம். இவைகள் மத்தியில் சக்தியைச் சேர்க்கிறதா அல்லது சேர்ந்திருக்கும் சக்தியைப் பிரிக்

கிறதா? இவர்கள் பதவிக்கும், அதிகாரத்திற்கும் போட்டி போடவில்லையா? ஒருவர்மீது ஒருவர் அவநம்பிக்கை கொள்ள வில்லையா? இவர்கள் கட்டுப் பாட்டிற்கு அடங்கி நடக்கிறார்களா?

அந்தக் கேள்விகளுக் கெல்லாம் பெருமைபடக் கூடிய பதிலை யளிப்பது என்னாலில்லை. காங்கிரஸ் சிதைவுக்கான வித்துக்கள் காங்கிரஸிற்குள் இருக்கும் இந்தக் கோஷ்டிகளிடத்திலேயே இருக்கிறதென நான் கவலைப் படுகிறேன். காங்கிரஸ் பலஹீனத்திற்கு எது காரணமோ அதுதான் காங்கிரஸ் தன்னிடம் எல்லா வகுப்பினரையும் கவர்ந்து கொள்ளாததற்கும் காரணமாகும். அந்தக் காரணம் யாது? அதுதான் அஹிம்சா தர்மத்தில் ஒரு பற்றுள்ள நம்பிக்கையில்லா திருப்பது. மனதிலும், செய்கையிலும் வார்த்தையிலும் அஹிம்சை இல்லா திருப்பதே இதற்குக் காரணம்.

அஹிம்சாதர்மம் சக்தியும், திறமையும் உள்ளதா? இல்லாததா? என்பதைச் சோதிக்க நம்மெல்லோருக்கும் இதுதான் தருணம். காங்கிரஸ் இப்போதிருக்கும் அதனுடைய இந்தப் பருவத்தில் ஒரு அடி தவறாக எடுத்து வைக்குமானால் தேசம் அதனுடைய லக்ஷியத்தையடையச் செய்யமுடியாதபடி அது பின்னுக்குத் தள்ளி விடும்.

இது காங்கிரஸ்காரர்களுக்கு விசித்திரமாகத் தோன்றலாம். ஆயினும் இதோ இதை நான் துணிவாகச் சொல்கிறேன். வகுப்பு வாத சந்தேகங்கள், பயங்களைப் போக்க ஒரே வழி, ஸ்வராஜ்ய மடைவதற்காக சட்ட மறுப்பியக்கம் ஆரம்பிப்பதல்ல வென்பதைத் துணிவாகக் கூறுகிறேன். தேசத்தின்முன் ஏற்படக்கூடிய ஒரு நிலைமை இதுதான். மைனாரிட்டிகள் என்று சொல்லப்படுபவர்களுடன் பிரிட்டிஷ் சர்க்கார் சேர்ந்துகொண்டு, ஒண்டியாக நிற்கும் காங்கிரஸை எதிர்த்து நிற்கும். இந்தச் சேர்க்கையை எதிர்த்துச் சட்ட மறுப்பியக்கம் ஆரம்பிப்பதானது நோக்கத்திற்கே முரணானதாக இருக்கும். இது உள்நாட்டுக் கலகமாக மட்டுமல்லாது, பழி பாதக போராட்டமாக இருக்கும்.''

---

## பிரிட்டிஷாருக்குச் செய்தி

"பிரிட்டனுக்கும் இந்தியாவுக்கும் தகராறுக்கு இடமான முக்கிய பிரச்னை பிரிட்டிஷ்பத்திரிகைகளில் குழப்பப்படுவதை நான் கவனிக்கிறேன்.

பிரிட்டன் இந்தியாவை ஒரு சுயேச்சை நாடாக அங்கீகரிக்க உத்தேசித்திருக்கிறதா அல்லது இந்தியா பிரிட்டனிடம் அடிமைப்பட்டிருக்க வேண்டுமா? பிரிட்டன்மீது அநுகூலம்பெற காங்கிரஸ் இந்தப் பிரச்னையை எழுப்பவில்லை. ஆனால், உலக நெருக்கடியின்போது தாங்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டு மென்பதற்காகவே இந்திய சுதந்திர பிரச்னை எழுப்பப்பட்டது.

இந்தப் பிரச்னை முற்றிலும் நியாயத்தைத் தழுவியதாகும். இந்தியாவின் பொருளாதார, ராணுவ நிர்வாகம் பிரிட்டன் கைவச மிருப்பதால், பிரிட்டிஷ் சர்க்கார் தங்கள் இஷ்டப்படி இந்திய துருப்புக்களையும் இந்தியாவின் செல்வத்தையும் உபயோகித்துக் கொள்கிறார்கள்.

இந்த யுத்தத்தால் இதா காரியங்களோடு இந்தியாவின் பூரண சுதந்திரமும் ஏற்படு மென்பது நிச்சயப்படுத்தப் படாவிட்டால், யுத்தத்தில்

கலந்துகொள்ள முடியாதென்று பதினொரு மாகாணங்களில் எட்டு மாகாணங்கள் வற்புறுத்திக் கூறிவிட்டன.''

“சுதந்திர பிரச்னையைத் தவிர, இதர எல்லா பிரச்னைகளும் பிரதானமானதல்ல. சிறுபான்மையோர் பிரச்னை இந்தியரைப் பொறுத்ததாகும். அப் பிரச்னை பெரும்பான்மையோரும் சிறுபான்மையோரும் தீர்த்துக் கொள்ள வேண்டியதாகும். அரசியல் நிர்ணய சபையால் மட்டுந்தான் சரியானதும் நீடிப்பதுமான பரிகாரம் தேடக்கூடும். இதர எந்த ஸ்தாபனமும் ஜனங்களின் ஆதரவு இல்லாமல் தற்காலிகமான ஏற்பாடே செய்யக்கூடும். மைனாரிட்டி பிரச்னையை இந்தியாவின் முகத்தில் வீசுவது பிரச்னைகளைக் குழப்புவதே யாகும்.

சமஸ்தானாதிபதிகளின் பிரச்னையை எழுப்புவது அதைவிட ஆட்சேபகரமான விஷயமாகும். சமஸ்தானாதிபதிகள் ஆதிபத்ய அதிகாரத்தின் ஒரு பாகமாக விருக்கிறார்கள். பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் கோடிக் கணக்கிலிருக்கும் சமஸ்தான பிரஜைகளைக் குறிப்பிடாம லிருப்பதை நினைக்கவும் துக்கமாக விருக்கிறது. சமஸ்தான பிரஜைகளுக்குத் தங்கள் சர்க்காரில் பங்கு கிடையாதா? இப்பொழுது சமஸ்தான பிரஜைகள் அடிமைகளாக விருப்பதுபோலவே அவர்கள் இருக்க வேண்டுமா? அவர்களை யுத்தத்தில் இழுத்திருந்தும் அவர்களின் நிலைமை மாறாதா?

ஹிட்லர் சொன்னது சரி

இந்தியாவை ஒரு சுதந்திர நாடாக அங்கீகரித்துத் தங்கள் உண்மைத் தன்மையை நிரூபிக்கும்படி பிரிட்டிஷ் சர்க்காரை ஹெர் ஹிட்லர் அறைகூவியதில் ஆச்சரியமில்லை. ஹிட்லரின் நோக்கம் என்னவாக விருந்த போதிலும், அவரது இந்த அறைகூவல் நியாயமானதென்பதை மறுக்கமுடியாது.

காங்கிரஸ் கோரிக்கை தெளிவானதாகு மென்பதையும், ஏகாதிபத்யத்தை உதறிவிட பிரிட்டனுக்கு மனம் இருக்குமானால் அக் கோரிக்கை திருப்தி செய்யக்கூடியதே யாகுமென்பதையும், பிரிட்டிஷ் மக்கள் அறிந்து கொள்ளட்டும்.

## அரசியல் நிர்ணய சபை அவசியம்

அரசியல் நிர்ணய சபை மூலம் நமது வகுப்புவாத பிரச்னைக்கும் இதர தகராறுகளுக்கும் பரிகாரம் தேடலா மென்றும், அதோடு ஜனங்களிடை அரசியல் கல்வியும் இதர கல்வியும் பரப்ப அச்சபை சாதனமாகுமென்றும் நான் கருதுகிறேன். இத்திட்டத்திற்கு எவ்வளவுக் கெவ்வளவு குறைகளும் குணங்களும் கூறப்படுகின்றனவோ அவ்வளவுக் கவ்வளவு எனக்கு இதன் மீது பற்றுதல் அதிகரிக்கிறது. அரசியல் நிர்ணயத்திற்காகக் கூட்டப்படும் ஜனப் பிரதிநிதிகளின் சபை ஜனங்களின் உணர்ச்சியின் நிச்சயமான பிரதிபிம்பமாக விருக்கும். அது நம்மிடமுள்ள உயர்ந்த குணங்களையும் கெட்ட குணங்களையும் வெளிப்படுத்திவிடும். பெரும்பான்மையான ஜனங்கள், எழுத்து வாசனை இல்லாமலிருப்பதால், நான் கவலைப்படவில்லை. வயது வந்த ஆடவர் ஸ்திரீகள் அனைவரையும் நான் ஓட்டர்கள் ரிஜிஸ்டரில் சேர்ப்பேன். அவர்கள் இஷ்டப்படாவிட்டால், ஓட்டுரிமையை உபயோகிக்காமல் போகட்டும். முஸ்லிம்களுக்குத் தனி ஓட்டு அளிப்பது எனக்கு இஷ்டமே. ஆனால், ஒவ்வொரு உண்மையான மைனாரிட்டியும் கேட்டால் அதற்கு அதன் ஜனத்தொகைக்கு ஏற்றபடி ஸ்தானங்களை ஒதுக்குவேன்.

## பரிகாரம் தேட சுலபமான முறை

இந்த அரசியல் நிர்ணய சபை வகுப்புவாத பிரச்னைக்கு நியாயமான பரிகாரம் தேட மிக்க சுலபமான முறையாக விருக்கிறது. இன்று யார் யாருக்குப் பிரதிநிதி என்பதைக் கணக்கு விவரங்களுடன் கூறமுடியாது. காங்கிரஸ் மிக்க பழையதும் மிகப் பெரியதும் ஜனப் பிரதிநிதித்துவம் வாய்ந்ததுமான ஸ்தாபனமென்பது ஒத்துக்கொள்ளப்பட்ட விஷயம். காங்கிரஸ் தேசமுழுவதற்கும் பிரதிநிதியல்லவென்பதை ஆட்சேபிக்கும் அரசியல் ஸ்தாபனங்கள் இருக்கின்றன. முஸ்லிம் லீக் பெரிய முஸ்லிம் ஸ்தாபனமே. ஆனால், இதர பல முஸ்லிம் ஸ்தாபனங்கள் அந்த லீக் தங்களுக்குப் பிரதிநிதியல்ல வென்று ஆட்சேபிக்கின்றன.

ஆனால், அரசியல் நிர்ணய சபையில் தக்க அளவில் எல்லா வகுப்புகளின் பிரதிநிதிகளும் இருப்பார்கள். இச்சபை அல்லாமல் இதர முறையில் போட்டா போட்டி உரிமைகளைத் திருப்தி செய்ய முடியாது. இச்சபை மூலம் அல்லது இதர முறையில் வகுப்புவாத உரிமைகளுக்கும் இதர உரிமைகளுக்கும் முடிவே இருக்காது.

அரசியல் நிர்ணய சபையே இத் தேசத்துக்குச் சுயமானதும் ஜனங்களின் விருப்பத்திற்கு ஏற்றதுமான ஒரு அரசியலை நிறுவக்கூடும். இவ்விதம் நிறுவப்படும் அரசியல் உன்னத முறையில் சிறந்ததாக விருக்காது. ஆனால் நிபுணர்களின் உயர்வான மதிப்புக்கு பாத்திரமாகா விட்டாலும் அந்த அரசியல் உண்மையானதாக விருக்கும். சுயஆட்சி உண்மையானதாக விருக்க வேண்டுமானால் அது தங்களைத் தாங்களே ஆட்சி புரிய வேண்டிய ஜனங்களின் இஷ்டத்தின் பிரதிபிம்பமாக விருக்கவேண்டும்.

ஒரு தேசத்தார், பரீட்சைசெய்து பார்த்துப் பார்த்து தவறித் தவறி, சரியான சர்க்காருக்குத் தங்களை அருகதை உடையவர்களாக்கிக்கொள்வது சாத்தியமே. ஆனால், மூன்றுவது மனிதரால் சுமத்தப்பட்ட ஒரு அரசியல் மூலம் ஒரு தேசத்தார் தங்களைத் தாமே சரியாக ஆட்சி புரிவது சாத்யமல்ல. மயிலைப் பார்த்து வான்கோழி தன் சிறகை விரித்தாடுவது போலத் தான் முடியும். சுயமாக ஏற்படாததை கடன் வாங்கினாலும் பிரயோஜனப்படாது. ஒரு நோயாளி தமது சொந்த முயற்சியால் குணமடையக் கூடும். அவர் மற்றவர்களிடமிருந்து ஆரோக்கியத்தைக் கடன் வாங்க முடியாது.

## அபாயங்கள் உண்டு

இந்த ஏற்பாட்டில் அபாயங்கள் ஏற்படலாம். போலி ஆசாமிகள் பிரதிநிதிகளாகி விடலாம். விஷமிகள் எழுத்து வாசனை அறியாத ஜனங்களைத் தவறான நபர்களுக்கு ஓட்டுப் போடும்படிச் செய்யக்கூடும். மகத்தானதும் உண்மையானதுமான காரியத்தைச் செய்ய வேண்டுமானால், இந்தக் கஷ்டங்களை நிர்வகித்துத்தான் ஆகவேண்டும். நமக்கும் பிரிட்டிஷ் மக்களுக்கும் கௌரவமான சமரசம் ஏற்படுவதன் மூலம் அரசியல் நிர்ணய சபை ஏற்படுமென்று நம்புகிறேன். அதனால் அச்சபை இருதேசங்களின் மேதாவிகளின் நன் முயற்சியால் இந்தியாவின் அறிவாளிகள் நிறைந்ததாக விருக்கும். ஆகவே இந்தியாவின் சரித்திரத்தின் இன்றைய நிலையில் செய்யும் இந்தப் பரீக்ஷித்த வேலையின் வெற்றி பிரிட்டிஷ் ராஜதந்திரிகளின் நோக்கத்தைப் பொறுத்திருக்கிறது. இந்தியர் போராட வேண்டுவதில்லாமல் பிரிட்டிஷார் அதிகாரத்தைக் கொடுத்து விட வேண்டும். இந்தியா பொறுமை இழந்து விட்டது.

## ஒரே வழி

பிரம்மாண்டமான அளவில் அஹிம்சா முறையில் சட்ட மறுப்புக்கு இந்தியா இன்னும் தயாராகவிருக்கவில்லையென்பதை நான் வருத்தத்துடன் உணர்ந்திருக்கிறேன். அஹிம்சா முறையில் போராட்டம் சாத்யமாகும் காலம் வரும் வரையில் காத்திருக்கும்படி காங்கிரஸை நான் தூண்ட முடியாவிட்டால், ஹிந்துக்களும் முஸ்லிம்களும் சண்டை போடுவதைப் பார்க்க நான் உயிருடனிருக்க, விரும்பவில்லை. காங்கிரஸிற்குத் திருப்தி ஏற்படுமாறு அஹிம்சை முறையில் வேலைத் திட்டமொன்றை நான் கண்டு பிடிக்க முடியாவிட்டாலும் வகுப்பு சமரசம் ஏற்படாவிட்டாலும் பலாத்காரமும் அராஜரீகமும் ஏற்பட்டு விடுமென்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும். அவ்விதக் கோரநிகழ்ச்சி ஏற்படுவதைத் தடுக்க வேண்டுவது எல்லா வகுப்பார் இங்கிலீஷ்காரர்கள் இவர்களின் கடமையாகுமென்று நான் கருதுகிறேன்.

அரசியல் நிர்ணய சபையைக் கூட்டுவதுதான் ஒரே வழி. அரசியல் நிர்ணய சபையால் நிறுவப்படும் பூர்ண சுயேச்சை அரசியலே வேண்டுமென்று எல்லா வகுப்புகளும் விரும்புகிறதென்பது நிச்சயமாகி விட்டால், விவரங்களை நிச்சயிப்பது மிகவும் சுலபம்.

வேறு முறை என்னவென்றால் பிரிட்டிஷ் சர்க்கார் ஜனநாயகத்திற்கு மாறுபாடான அரசியலைத் திணிப்பதேயாகும். அதனால் ஏகாதிபத்ய ஆட்சி காலவரையின்றி நீடிக்கும். அரசியல் நிர்ணய சபை முறையை ஏற்றுக் கொள்ளாதவர் ஏகாதிபத்ய ஆட்சி நிலைபெற உதவியாக விருப்பார்கள்.

### பிரிட்டிஷ் சர்க்கார்தான் தடை

முக்கிய தடையாக விருப்பது பிரிட்டிஷ் சர்க்காரே. யுத்தம் முடிந்ததும் வட்ட மேஜை மகாநாடு கூட்ட உத்தேசித்திருப்பதற்குப் பதிலாக பிரிட்டிஷ் சர்க்கார் மைனுரிட்டிகளுக்குத் திருப்திகரமான பாதுகாப்புகளுடன் ஒரு அரசியல் நிர்ணய சபையையே கூட்டக்கூடும். மைனுரிட்டிகளுக்குத் திருப்தி செய்வதை ஓர் ஒப்பந்தம் மூலம் செய்துவிடலாம்.

பிரிட்டிஷ் சர்க்கார் அதிகாரத்தை இந்தியரிடம் கொடுக்க விரும்பி தங்கள் சொந்த சரித்திரத்திலேயே ஒரு புதிய அத்தியாயத்தை ஏற்படுத்துவார்களாவென்பதே முக்கியப் பிரச்னையாகிறது. சமஸ்தானுதிபதிகளின் பிரச்னையை ஒரு முட்டுக்கட்டையாக்கவே கூடாது. வெள்ளைக்காரர்களின் நன்மைகள் இந்தியாவின் நன்மைகளுக்கு முரண்பாடானதாக விராவிட்டால் அந்நன்மைகள் பத்திரமாகவே இருக்கும். இந்தியாவின் நன்மைகள் என்ற வார்த்தைகள் இர்வின் - காந்தி ஒப்பந்தத்திலும் இருப்பதாக நான் நினைக்கிறேன்.

ஜனநாயக சுயராஜ்யத்திற்கு வழி அரசியல் நிர்ணய சபை மூலமே அச் சபையின் பெயரை என்னவாக வேண்டுமானுலும் மாற்றலாம். சட்டமறுப்பு போன்ற நடவடிக்கைபற்றிச் சிந்திக்கும் முன்பு அரசியல் நிர்ணய சபையைக் கூட்ட எல்லாவித முயற்சிகளும் செய்ய வேண்டும். அச் சபை கூட்டப்படுவதற்குமுன் சத்யாக்ரஹம் அவசியமாகும்படி ஒரு நிலைமை ஏற்படலாம். அந் நிலைமை இன்னும் வரவில்லை.

## 'நிபந்தனையற்ற உதவி' என்றால் என்ன?

பல பிரிட்டிஷ் ஸ்நேகிதர்கள் பிரமித்துப்போய், "நீங்கள் கிரேட் பிரிட்டனுக்கு நிபந்தனையற்ற உதவி யளிப்பதாய்ச் சொன்னதாகச் செய்தி வந்திருக்கிறதே! நீங்கள் வாஸ்தவத்திலேயே அப்படிச் சொன்னீர்களா?" என்று கேட்கிறார்கள். நான் வைசிராயுடன் பேசியபின் வெளியிட்ட முதல் அறிக்கையினால்தான் அச் செய்தி போயிருக்கிறது. 'நிபந்தனையற்ற உதவி' என்ற பதம் அந்த அறிக்கையிலில்லை. ஆனால், காங்கிரஸ் தான் மேற்கொண்ட நிலையை நன்கு உணர்ந்திருக்குமானால்; பிரிட்டனின் யுத்த லக்ஷியங்களை விளக்குமாறு காங்கிரஸ் கேட்டிருக்காது என்ற அர்த்தத்தில் காங்கிரஸின் உதவி நிபந்தனையற்றதாக இருந்திருக்கும். ஆனால், காரியக் கமிட்டி மனச்சாட்சிக்கு விரோதமின்றி அந்த நிலையை மேற்கொள்ளமுடியவில்லை. எனவே கமிட்டி, அதற்கு உரிமையும், நியாயமும் உள்ளபடி, யுத்த தீர்மானத்தை நிறைவேற்றியது.

காரியக் கமிட்டி பின்பற்றிய வழி புத்திசாலித்தனமானது என்பதை அதற்குப் பின் நடந்துள்ளவைகள் நிரூபித்து விட்டன. ஆனால், கமிட்டி யுத்த லக்ஷிய அறிவிப்பை கோரி இல்லாமலிருந்தால் உதவி நிபந்தனை யற்றதாயிருக்கும். காங்கிரஸின் சட்ட திட்டப்படி, அது ஒரு சாத்வீக ஸ்தாபனமென்பது ஞாபகமிருக்கட்டும். எனவே, அதன் உதவி, கலப்பற்ற அனுதாப ஆதரவாகத் தான் இருக்க முடியும். சப்ளை செய்ய அதனிடம் சோல்ஜர்களில்லை. கொடுக்கப் பணமில்லை. ஆனால், அதனிடம் நல் ஆசிகள் இருக்கின்றன.

### நல் ஆசியின் சக்தி

நல் ஆசிகளுக்கு பல பட்டாளத்தைக் காட்டிலும் அதிக சக்தி யிருப்பதாக நான் அபிப்பிராயப் படுகிறேன். காங்கிரஸின் உதவி பிரிட்டிஷ் சர்க்கார் கக்ஷியை எதிர்க்க முடியாத தர்ம நீதி நிலையில் வைத்திருக்கும். அது பிரிட்டிஷ் சர்க்காரின் கக்ஷியை நியாயமானதாகச் செய்திருக்கும். உலகிலுள்ள அடிமை ஜாதிகளெல்லாம் வர்ணிக்க முடியாத சுதந்திர ஒளியைக் கண்டிருப்பார்கள். பிரிட்டிஷ் நியாய தர்மம் ஒரே தாவாக வானையளாவி வியாபித்திருக்கும். காங்கிரஸ் நிபந்தனையற்ற உதவியளித்திருந்தால் அதுதான் நடத்தியிருக்கும்.

ஆனால், ஆண்டவன் வேறு விதமாக இஷ்டப்பட்டார். காங்கிரஸ் அஹிம்ஸையைப் பின்பற்றுவதாகச் சொல்வதில் பிரிட்டிஷ் ராஜ தந்திரிகளுக்குப் போதிய நம்பிக்கையில்லை. நியாயமாக பரீட்சை நடத்துகிறவராயிருந்த போதிலும் கராராகக் கவனிக்கும் ஒருவர் திருப்தியடையும் விதத்தில் பரீட்சையில் காங்கிரஸ் தேற முடியாதென்பதை நான் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

### என் நிலை

எப்படியிருந்தாலும் என் நிலையைப் புரிந்து கொள்வதில் பிரிட்டிஷ் சிநேகிதர்கள் சிரமப்பட வேண்டியதில்லை. நான் யுத்த எதிர்ப்பாளனுகையால் அநுதாப ஆதரவைக்கூட கொடுக்கக் கூடாதே என்று அவர்கள் வாதஞ் செய்யலாம். நான் இதைப்போல அபிப்பிராயம் கொள்ளவில்லையென ஏற்கனவே 'ஹரிஜனி'ல் கூறியிருக்கிறேன்.

சண்டை போடும் இருவரின் தார தம்யத்தைப் பார்த்து, நியாயம் யார் பக்கம் இருக்கிறதோ அவருக்கு ஆசி கூற யுத்த எதிர்ப்பாளருக்கு உரிமையுண்டு. சும்மா வாயைப்பொத்திக்கொண்டு உட்கார்ந்திருப்பதை விட இப்படி நிறைபோடுவதன் மூலம் அவர், சண்டை போடுகிறவர்களுக்குள் சமாதானம் ஏற்படும்படிச் செய்யக்கூடும்.

## ராஜ்கோட் சீர்திருத்தம்

சமஸ்தான பிரஜைகள் ஏற்கனவேயே பெற்றிருந்த அதிகாரங்கள் பிடுங்கப் பட்டதோடு ஜனங்களின் அதிகாரங்கள் சாத்யமான வரையில் குறைக்கப் பட்டிருக்கின்றன. ராஜ்கோட்டில் நான் அஹிம்சையைப் பூரணமாக அநுசரித்நடக்காததன் கடைசிபலனே இந்தச் சீர்திருத்தங்கள் என்பது எனக்குத் தெரியவில்லை. முடிவில் ராஜ்கோட்வாசிகள் பூரண அதிகாரங்களைப் பெற்று விடுவார்களென்பதே எனது நம்பிக்கை. ஆனால், இந்தச் சீர்திருத்தங்களை அமுலுக்குக்கொண்டுவருவதில் ஒத்துழைக்க மறுக்கும்படி நான் ராஜ்கோட் பிரஜைகளை வேண்டுகிறேன். நான் இதுவரையில் அந்தச் சமஸ்தான தர்பாரின் நடவடிக்கைகளைக் குறைகூறாமலிருந்து வந்தேன். ஆனால், மிக்க கட்டுப்பாட்டுணர்ச்சியுடன் நடந்துகொண்ட ராஜ்கோட் மக்களுக்கு எனது கடமை உண்டு. ஆகவே இச் சீர்திருத்தங்கள் பற்றி ஒரு வார்த்தை நான் கூறுகிறேன். காலஞ் சென்ற தாகூர் சாகிப் வயது வந்தவர்களுக்கெல்லாம் ஓட்டுரிமை அளித்தார். இந்த வரப்பிரசாதம் இச் சீர்திருத்தங்களால் பாழானது.

வயது வந்தவர் ஓட்டுக்குப் பதிலாகச் சொத்து யோக்கியதாம்சமும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. தெரிந்தெடுக்கப்பட்ட தலைவருக்குப் பதிலாக திவான் சாஸ்வதமான தலைவராகிறார். பழைய சபையில் தெரிந்தெடுக்கப் பட்ட மெம்பர்களே இருந்தார்கள். இப்பொழுது 40 தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பர்களும் 20 நியமன மெம்பர்களும் அந்தச் சபையிலிருப்பார்கள். தெரிந்தெடுக்கப்பட்ட ஸ்தாபனங்களும் பல மைனாரிட்டிகளுக்கு வினியோகம் செய்யப்பட்ட டிருக்கின்றன. அதனால் மெஜாரிட்டி மைனாரிட்டியாகிறது. சமஸ்தானதிபதியின் செலவு ஒரு வரையறைக்குள் நிச்சயிக்கப்படுமென்று திட்டமாக முன்பு அறிவிக்கப்பட்டது. ஆனால் இச் சீர்திருத்தங்கள் மன்னர் செலவுபற்றி அந்த அறிக்கையைப் புறக்கணித்துவிட்டது.

## இந்தியாவெங்கும் சர்க்கா சுற்றவேண்டும்

### சத்யாக்ரஹத்துக்கு அதுவே ஆயத்தம்

நான் தலைமை வகிக்க வேண்டுமென்று நீங்கள் விரும்பினால், நீங்கள் சர்க்காவில் உண்மையான கவனம் செலுத்தவேண்டும். 20வருஷ அனுபவங்களுக்குப் பிறகு, எனக்குச் சர்க்காவிலுள்ள நம்பிக்கை இன்னும் அதிகரித்திருக்கிறது. சர்க்காவினால்தான் நமக்கு விமோசனம் பிறக்குமென்று நான் உறுதியாக நம்புகிறேன். காங்கிரஸ்காரர்கள் 'சர்க்கா' விஷயத்தில் அவ்வளவு கவனம் செலுத்தவில்லையென்று தெரிந்ததால்தான், நான் எனது காங்கிரஸ் மெம்பர் பதவியை ராஜிநாமாச் செய்தேன்.''

நாடு முழுதிலும் சர்க்கா சுற்றிக்கொண்டிருக்கவேண்டும். இது ஏற்படாத வரை, சத்யாக்ரஹம் ஆரம்பிப்பதற்குப் பூர்ண ஏற்பாடு செய்யப் பட்டுவிட்டதாகக் கருதமுடியாது.

# ஐக்கிய இந்திய சுதந்தரம் வேண்டாமா?

## அரசியல் நிர்ணய சபை

ஹிந்துக்கள், முஸ்லிம்கள், இதரர்கள் ஆகிய நாமெல்லோரும் ஒரு ஜன நாயக அரசியலை நிர்ணயிப்பதாயின் அதைச் செய்வதற்கு ஒரே ஒரு வழி தான்; அதாவது தேசம் முழுதும், பிரிட்டிஷ் சர்க்காரின் நல்லெண்ணத் துடனே அல்லது அவர்களது எதிர்ப்பைச் சமாளித்தோ, மிக விரிவான வோட்டுரிமை மூலம் தேர்ந்தெடுக்கும் பிரதிநிதிகள் மூலம் தேசம் முழு வதன் கருத்தையும் உருவகப்படுத்த வேண்டும். (அதாவது அரசியல் நிர் ணய சபையாகக் கூடி முடிவு செய்யவேண்டும்).

## பிரிட்டிஷ் நல்லெண்ணம் இல்லை.

பிரிட்டிஷ் சர்க்காரின் சார்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கைகளில் இவ் விஷயத்தில் பிரிட்டன் தன் நல்லெண்ணத்தைக் கொடுத்து உதவ முன்வர வில்லை. பிரிட்டிஷ் ஏகாதிபத்யப் போக்கு இன்னும் விருவிருப் பாகவே இருக்கிறது. ஏகாதிபத்யக் கொள்கை பிரிட்டனுக்கு இல்லை யென்று சர். சாமுவேல் ஹோர் சொன்னாலும் பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் விருவிருப்பாக இருந்து தான் வருகிறது.

## துண்டுபடுத்தும் போக்கின் பயன் என்னாகும்?

இந்தியாவைச் சின்ன பின்னமாகப் பிரிக்கும் பிரேரணைகள் பிரிட்டிஷ் ஏகாதிபத்ய வளர்ச்சிக்கு ஒத்தாசையே. ஏனென்றால், இவ்வாறு இந்தி யாவைத் துண்டு துண்டாகப் பிளக்கும் காரியம், பிரிட்டிஷ் ஆயுதபலத்தின் மூலமோ அல்லது பெரிய உள்நாட்டு யுத்தத்தின் மூலமோதான் நிறை வேற முடியும். இந்த இரண்டிலும் காங்கிரஸ் சம்பந்தப் படாது என்று நான் நம்புகிறேன். இந்தியா சம்பந்தமாக பிரிட்டன் தன் யுத்த லக்ஷி யத்தை அறிவிக்க முடியாதென்று மறுத்து விட்டது கூட ஒரு வகையில் நமக்கு நல்லதிர்ஷ்டமென்றே தோன்றுகிறது.

## லீக் நிதானித்து முடிவு செய்யட்டும்

ஏனென்றால், பிரிட்டனின் பிடிவாதம், காங்கிரஸை ஒதுங்கி நின்று 8 மாகாணங்களில் காங்கிரஸ் நிர்வாகத்தின் இடையூறு இல்லாமல் முஸ்லிம் லீக் தன்னுடைய உத்தேசமென்ன வென்பதை நிர்ணயித்துக்கொள்ள சந் தர்ப்பம் அளிக்கிறது. இந்தியாவைச் சின்ன பின்னமாகப் பிளந்து, பிரிவினை செய்து பிரிட்டிஷ் ஆதிக்கத்தைத் தம்மீது சுமத்தவேண்டுமா, அல்லது பிரி வினை செய்யப்படாத ஒரு இந்தியாவுக்குப் பூரண சுதந்திரம் கிடைக்க முயற் சிக்க வேண்டுமா என்பதை முஸ்லிம் லீக் தீர்மானித்துக் கொள்ளலாம்.

## எனது நம்பிக்கை

முஸ்லிம் லீக் இந்தியாவைத் துண்டு துண்டாக உடைக்க விரும்ப வில்லை யென்றே நான் நம்புகிறேன்.

# செய்தித் திரட்டு

## முதல் இந்திய பிரதம காரியதரிசி

பீஹார் கவர்னர் ஆலோசனை சபைக்கு ஸ்ரீ. ரஸ்ஸல் நியமிக்கப்பட்டதால், ஸ்ரீ. குட்போல் பீஹார் சர்க்காரின் பிரதம கார்யதரிசியாக நியமிக்கப்பட்டுள்ளார். இப்பதவிக்கு நியமிக்கப்படும் முதல் இந்தியர் இவர்தான்.

## இந்து முஸ்லீம் ஒற்றுமைக்குப் புதிய யோசனை

"ஒரு இடத்தில் 800 ஹிந்துக்களும் 200 முஸ்லிம்களும் இருப்பதாக வைத்துக்கொள்வோம். இந்த இடத்தில் 10 மந்திரிகள் ஏற்படுத்த வேண்டியதாகவும் வைத்துக் கொள்வோம். அந்த 200 முஸ்லிம்களும் சேர்ந்து 8 ஹிந்து மந்திரிகளையும், 800 ஹிந்துக்கள் சேர்ந்து 2 முஸ்லிம் மந்திரிகளையும் பொறுக்கி எடுத்தால் இப்பொழுதுள்ள தகராறுகள் தீர்ந்து விடுமென்பதே எனது யோசனை.

இதனுல் முஸ்லிம்களும் ஹிந்துக்களும், ஜாதி உணர்ச்சியை விட்டு, பொது ஜன நலனுக்காகப் பாடுபடும் மனப்பான்மை உள்ளவர்களையே தெரிந்தெடுப்பார்கள். மந்திரிகளும் தங்கள் ஒட்டர்களுக்கு நியாயம் வழங்கும் முறையில் நடந்து கொள்வார்கள்.

—ஸ்ரீ. போதன் ஜோசப்.

## பேசும்படக் கருவிகள் இந்தியாவில் தயாரிக்க திட்டம்

இந்தியாவிலேயே பேசும் படம் காட்டும் கருவிகள் தயார் செய்ய ஸ்ரீ. ஹரி. ஜி. கோவில் என்ற ஒரு இந்தியர் ஒரு திட்டம் தயாரித்துள்ளார். இவர், தேவநாகரி, மற்ற இந்திய பாஷைகள் லினோ டைப் செய்யும் திட்டத்தையும் கண்டு பிடித்தவர். இந்திய ஸினிமாத் தொழிலின் தேவையை உத்தேசித்து இப்போது இது கண்டு பிடித்துள்ளார்.

பல சோதனைகள் செய்த பின்னர், ஸ்ரீ. கோவில் பல பேசும் பட செட்கள் தயாரித்தார். இவ் விஷயத்தில் இவருக்குப் பல பிரபல அமெரிக்க இஞ்சினீயர்கள், இந்திய நிபுணர்கள் உதவி இருந்தது.

இந்தியாவில் ஸினிமா புரஜக்டர்கள் (படம் காட்டும் இயந்திரம்) தயாரிப்பது பற்றிப் பம்பாய்க் கருகில் ஸ்ரீ. கோவில் ஒரு நடுத்தர கம்பெனி ஏற்படுத்த உத்தேசித்துள்ளார். இங்குத் தயாரிக்கப்படும் பேசும் படக் கருவி அமெரிக்காவில் உற்பத்தியாகும் தரத்தில் தயாரிக்கப்படும். இதற்குப் பல அமெரிக்க நிபுணர்களின் ஒத்துழைப்பு கிடைத்துளது. வெளிநாட்டிலிருந்து வரும் இயந்திரங்களின் தரத்திற்குச் சமமாகவும், மட்டமில்லாமலும் உற்பத்திசெய்ய இவர்களின் ஒத்துழைப்புப் பெறப்பட்டுள்ளது. இவர் ஏற்படுத்த உத்தேசித்துள்ள கம்பெனி விஷயமாக முடிவான ஏற்பாடு செய்ய ஸ்ரீ கோவில் சமீபத்தில் அமெரிக்கா செல்வார்.

## ஜனநாயகம் என்பது என்ன?

ஜனநாயகம் என்பது பொறுக்கி யெடுக்கப்பட்ட சிலரின் எதேச்சாதிகாரமே யென்றும், ஆகவே அதன் திறமை ஜனங்களின் பொறுக்கி எடுக்கும் சக்தியைப் பொறுத்தே இருக்கிறது.

### பழய வேலே பலிக்காது

"மேல்நாட்டுப் பேரம் கீழ்நாட்டுப் பேரத்தைவிடப் படுமோசமாயிருப்பதாய்த் தெரிகிறது. வாங்க வந்திருப்பவருக்கு, திருப்தியாக எதுவும் சொல்லப்படவில்லை; 'கிடையாதையா போ' என்ற பேச்சுமில்லை. பிரிட்டிஷாரின் தாராளத் தன்மை மறைந்துவிட்டது; கடைக்கார புத்திமாத்திரம் விடாதிருக்கிறது. அவன் பகிரங்கமாக வந்து கைவரிசையைக் காட்டவேண்டுமெனக் காங்கிரஸ் விரும்புகின்றது. ஆனல் பிரிட்டிஷ்காரன் கண்ணு மூச்சு விளையாடுகிருன். காங்கிரஸ், தான் கேட்பதையும், மனதிலுள்ளதையும் தெளிவாகக் கூறிவிட்டது. ஆனல் வெள்ளைக்காரன் ரகசியமாகவும், பிறர் மீது சந்தேகத்துடனும் நடந்து கொள்கிருன். காங்கிரஸ், சுய நிர்ணய உரிமை கோருகிறது; ஆனல் பிரிட்டனே இன்னெருவரின் பிடிவாதத்தைத் திணிக்கிறது. காங்கிரஸ், சமஸ்தானங்களும், மாகாணங்களும் உள்ள பெடரேஷன் வேண்டுகிறது; பிரிட்டன், பல கோஷ்டிகளின் சம்மேளனம் தருவதாய்க் கூறுகிறது. காங்கிரஸ், பிரிட்டனின் சரிசம அந்தஸ்தில் பேசும் ஒரு அகில இந்திய கக்ஷிக்காக பாடுபட்டுவருகிறது; ஆனல் பிரிட்டன், சர்வ கக்ஷிகளின் ஆட்சிக்காக சூழ்ச்சி செய்துகொண்டிருக்கிறது. மத்திய ஆட்சியிலும் சரி, மாகாண ஆட்சிகளிலும் சரி, ஒற்றுமையின் விளைவாக ஏற்படும் ஒருமுக கோஷ்டியிருக்கக் காங்கிரஸ் பாடுபடுகிறது. பிரிட்டன் பல்வேறு கோஷ்டிகளை நிரந்தரமாக்க முயற்சிக்கிறது. லார்ட் ஜெட்லண்டு கடைசியாக லார்ட் சபையில் செய்த அறிவிப்பைப் பற்றிக் காமன்ஸ் சபையில் யார் என்ன சொன்னுலும் சரி, அதன் ஒரே அர்த்தம் இதுதான்.

காங்கிரஸ் 1939-ம் வருஷத்திற்கேற்ற ஒப்பந்தம் ஏற்பட வேண்டுமெனக் கேட்கிறது. பிரிட்டனே, கிரீஸ் 1839-ம் வருஷம் இருந்த அளவுக்கும், அமெரிக்கா 1861-65-ம் வருஷ உள்நாட்டு யுத்தத்திற்கு முன் இருந்த அளவுக்கும், 1864-க்கு முன் இத்தாலி இருந்த அளவுக்கும், பின்னுக்குச் செல்கிறது. உலகம் முன்னேறிச் செல்கையில், இந்தியாவைப் பின்னுக்கு இழுக்க முயற்சிக்கப்படுகிறது."

—டாக்டர் பட்டாபி.

## தனித்தொகுதி தேர்தல்முறைவேண்டாம்

### இந்தியாவின் ஒற்றுமைக்கு அதுவே இடையூறு

" இந்திய மாதர்கள் தங்களுடைய சக்தி பூராவையும், அறிவையும் தேச ஒற்றுமைப் பிரச்னையைத் தீர்ப்பதில் செலவழிக்கவேண்டும். அந்த லக்ஷியத்தை யடைய பெரிய இடையூருக இருப்பவை, ஒதுக்கப்பட்ட ஸ்தானங்களும், தனித்தொகுதி தேர்தல் முறையும்தான். இந்த இரண்டு வோட்டுரிமை நிபந்தனைகளும் இந்தியாமீது திணிக்கப்பட்டிருக்கின்றன. அதை எவ்வளவோ ஆட்சேபித்தும் பயனில்லாமற்போய் விட்டது. தனித்தொகுதி தேர்தல் முறைகள் நம்மை எங்குகொண்டுபோய்விடுமென்று நமக்குத் தெரியும். ஆனல், தேசத்தைக் கவ்விக்கொண்ட அந்தப் பெரிய ஆபத்தைத் தடுக்க சக்தி யற்றவர்களா யிருந்தோம். இப்பொழுது நம்மிடம் ஒரே ஒரு எண்ணம்தான் விடப்பட்டிருக்கிறது. அதாவது, "இந்தக் கெடுதலுக்குப் பரிகாரம் தேடவேண்டும். தனித்தொகுதி தேர்தல் முறை ஒழியவேண்டும்."

—பேகம் ஹமீத் அலி,

# இன்பக் கவி

ஸ்ரீ. வீரராகவ கவி.

நல்லோரை நல்லோர் நயப்பர் : நலமற்ற
புல்லோரைப் புல்லோர் புகழ்வரால் :—வில்லார்
நுதலாய் ! இனமறியா நொய்யர்க்கு முண்டோ
இதமாரும் நற்செயலு மிங்கு. 1

உண்மை யுணரா தொளித்தற்குக் காரணமென் ?
திண்மை யிதன்றிறத்தைச் செப்புமின்—வண்மை
உடையம் யாமென்னு முயர்ச்சி யுறலால்
கடையமே யாவோங் கணித்து. 2

செருக்(கு)என்னும் பாவி சிறந்தமைந்த மெய்யை
வெருக்கொள்ள வோட்டி விடுமால்—திருக்கிளரும்
செல்வர்கள் தம்மிற் செருக்கடைந்து நிற்பரோ
நல்குரவர் நிற்பர் நயந்து. 3

செருக்கினு லுய்வர் சிறியார் : செருக்கின்
பெருக்கினு லுய்யார் பெரியார் :—உருக்கும்
அருளினால் வாழ்வார் அறிஞர் : அருளில்
மருளினால் வாழ்வரோ மண். 4

பிறர்பொருளைக் கொள்ளப் பெரியார் நினையார் :
பிறர்பால் குறைகூறும் பேதை—நிறையின்றிப்
பல்லோர் தமைப்பழிக்கும் பண்பினர்க் குண்டாமோ ?
நல்லோர் தமைப்புகழும் நா. 5

நல்குரவே யென்னை நணுகா திருப்பாயேல்
பல்குறைவு நீங்கிப் பயனடைவேன்—தொல்புவியில்
எங்கும் புகழடைவேன் ஏதம்பல நீங்கும்
தங்குஞ் சுகமெனக்குத் தான். 6

தன்னை யறிந்தால் தடையற்று வானந்தம்
துன்னுமெனச் சுருதி சொல்லுமேல்—பின்னும்
அவிச்சையிற் சென்றுழலும் அஞ்ஞான நெஞ்சே !
சுவிச்சையை யேன்மறந்தாய் சொல் ? 7

# 7

படகோட்டி பிரயாணிகளை இறக்கவேண்டிய இடத்தில் இறக்கி விட்டு, இரவு தன் ஊர் வந்து சேர்ந்தான். என்னதான் இருப்பினும் அவன் கண் முன்பு, ஆற்றங்கரையில் கண்ட பெரிய வியாதிக்காரனின் புலம்பலும் அவன் மனம் பதறியதும் அப்படியே காக்ஷி கொடுத்து அவன் மனமே அவனைக் குத்துவதுபோல் தோன்றும் ஒரு தோற்றம் திடும் திடும் என்று உண்டாகியது.

படகைக் கட்டிவிட்டு, குளித்துச் சுத்தமாக உடையணிந்து பஜனை கோவிலுக்குச்சென்று வணங்கிவிட்டு, சாப்பாட்டை முடித் துக்கொண்டு வழக்கம்போல் கோவிலுக்கு முன்புள்ள மைதா னத்தில் வந்து அமர்ந்தான். நாட்டாண்மைக்காரனும் தாம்பூல சகிதம் அங்கு வந்து உட்கார்ந்தான்.

நாட் :—என்னப்பா ஒருமாதிரியாயிருக்கியே ! ஒடம்பு கிடம்பு ஒண்ணுமில்லையே !

பட :—ஒண்ணுமில்லே அண்ணே ! என் மனம் என்னமோ சரியில்லே. நான் தெரிந்தும் அறியாமையினுல், ஒரு தப்பு செய்து விட்டேன். அது என்னை என்னமோ பண்றது.

நாட் :—என்ன ! நீயா தப்பு பண்ணிட்டே ! அதென்ன தப்பப்பா !

பட :—என்னமோ அண்ணு ! அன்னம்பாடி துறைமுகத்தில் ஒரு பெரியவியாதிக்காரன் படகிலேற வந்தான். கல்யாணத் திற்குப் போகும் குடும்ப பிரயாணிகளை, கல்யாணப்பெண் உள்பட ஏற்றிக்கொண்டு வந்தேன். அந்த நோயாளியைப் பார்த்தால், மிகவும் அருவருக்கத்தக்க விதமாக விருந்தது. அவனை ஏற்றுவ தற்குப் படகிலிருந்தோரும் மறுத்தார்கள். நானும் மறுத்து விட்டேன். அவன் மிகவும் ஆத்திரப்பட்டு ஏதேதோ திட்டினுன் ; அழுதான்.

நாட் :—அடாடா ! பசுபதி ! நீயா இந்தக் காரியம் செய்தாய் ? இந்தக் கிராமத்து ஜனங்களுக்கு எல்லாம் நல்ல புத்தியும், நீதியும் போதித்து அவர்களைச் சீர்திருத்திய உனக்குமா புத்தி பிசகி விட்டது ? வியாதி வருவதும் போவதும் அவரவர்களின் கர்மபலன் அல்லவா ?—என்று கூறும்போது, பசுபதியின் தாயார் அங்கு வழக்கம்போல் வருகையில் இதைக் கேட்டாள்.

பார்:—தம்பீ! நீயா இப்படிச் செய்தாய்? ஐயோ! வியாதிக்குப் பயந்து நீ அவனை நிராகரித்துவிட்டால், கடவுள் நம்மை நிராகரித்து விடுவாரல்லவா! நான் ஒன்றும் தெரியாத அறிவிலி. நானு இதை உனக்குச் சொல்லவேண்டும்? உனக்குப் பிடிக்காவிட்டால், அவனைத் தொட்டுக்கொள்ளாமலிருக்கலாம். அவன் உட்கார்ந்திருந்த இடத்தை வேண்டுமாயினும் அலம்பிச் சுத்தம் செய்யலாம். அதை விட்டு உபகாரமே செய்யாது அவன் மனத்தை அவ்வாறு நோகச் செய்யலாமா?

நாட்:—பசுபதி! உலகத்தில் எல்லா தர்மத்தையும்விடச் சிறந்த தர்மம் பிறர்க்கு உபகாரம் செய்வதல்லவா! நீயே அதை எத்தனையோதரம் எடுத்து உரைத்திருக்கையில், உனக்கு அது எப்படி மறந்து போய்விட்டது?

பட:—போதாதகாலத்தின் கொடுமையினுல்தான் என் புத்தியும் கெட்டுப்போய்விட்டது. அந்த வியாதிக்காரன் இருந்த கோராமையைக் கண்டதும் தர்ம குணமெல்லாம் மறைந்து வெறுப்பும் முரட்டுத்தனமுந்தான் முன்னே தோன்றியது. முதலில் நிர்த்தாக்ஷிண்யமாய்ச் சொல்லிவிட்டேன். பிறகு என் மனம் என்னையே இடித்துக் காட்டித் தத்தளிக்கிறது. என்ன செய்வேன்? பிராணுபத்திலிருக்கும் சகோதரியைப் பார்க்க வேண்டுமென்று அவன் கண்ணீர் விட்டான்.

பார்:—ஐயோ பாவம்! தம்பீ! இச் சமயம் வெகு நாட்களாக உனக்குச் சொல்லாதிருந்த ரகஸ்யத்தைச் சொல்லும்படியாய் இருக்கிறது. உன் தகப்பனுரின் சகோதரர் ஒருவர் இதே கொடிய வியாதியால் பலமாகப் பீடிக்கப்பட்டு இன்னும் அவர் அவஸ்தைப் பட்டுக்கொண்டுதான் கிடக்கிருர். அவரைப் பார்த்தால் நீ என்ன சொல்வாயோ?

பசு:—(ஆத்திரத்துடன் பதறியவாறு) என்ன! என் சித்தப்பாவுக்கு இக் கொடிய வியாதியா? ஐயோ! என்னைச் சார்ந்த மனிதருக்கே இவ்வாறு இருப்பதை அறியாமலா நான் பிறரை ஏளனமாயும் துச்சமாயும் துடுக்காயும் பேசிவிட்டேன். எனக்கு ஏன் இதுபரியந்தம் நீ சொல்லவில்லையம்மா? நான் எத்தனைதான் தெரிந்தவனுக விருந்தும் முக்கியமான விஷயத்தில் மதிசூன்யமாகிவிட்டேனே! என்ன செய்வேன்? அந்த மனிதன் வயிறெரிந்து 'இது போல் கர்ம வியாதி உனக்கு வர வெகு நேரமாகுமோ?' என்று கேட்டது, சாபமிட்டதுபோல் தோன்றி எனக்குக் கோபத்தை அல்லவா கிளறிவிட்டது. ஹா! மோசம் போய்விட்டேன்... அம்மா! அவர் இப்போது எங்கிருக்கிருர்? ஏன் நாம் அவரை இது வரையில் பார்க்கவே இல்லை?

பார் :—அப்பா! அவர் ஒரு மனிதரின் கண்ணிலும் படுவது கூடாதென்று மனம் வெறுத்து, பழனியாண்டவன்மலைக்குப் போய் விட்டார். யார் எத்தனை அழைத்தும் வர மறுத்துவிட்டார். இப்போதும் அங்குதான் இருப்பார் என்று நினைக்கிறேன். தம்பீ! ஏதோ, மனிதன் என்றால் தவறி நடப்பது இயற்கையானதுதான். எந்த மனிதனுமே எல்லாவிதத்திலும் பரிசுத்தமாயிருக்க முடியாதல்லவா? அப்படி இருப்பவர்கள் இக் கலியில் மகாத்மா காந்தி அடிகளைத் தவிர வேறு ஒருவரையும் காணமுடியாதென்று நீயே எத்தனைதரம் சொல்லி இருக்கிறாய். இது ஏதோ சோதனையினால் இம்மாதிரி நேர்ந்துவிட்டது. இனி எப்போதும் இம்மாதிரி நிர்த்தாக்ஷிண்யமாகப் பேசாதே! பிறர் மனத்தை நோகச் செய்யாதே. அந்த மனிதனை எங்காவது பார்த்தால், அவருக்கு நமஸ்காரத்தைச் செய்து வணங்கி, மன்னிப்புப் பெற்றுக்கொள்.

பட :—உம்...செய்த காரியம் செய்தாயிற்று. அந்த மனிதன் தன் சகோதரியைச் சந்தித்தானோ, இல்லையோ? அவள் பிராணன் போயிருக்குமாயின், அந்தப் பாவம் என்னைத்தானே சேரும் என்று நினைக்க நினைக்கத்தான் என் மனம் நான் செய்துவிட்ட பெருந் தவறுதலை எண்ணித் தவிக்கிறது. இனி, நான் மன்னிப்புக் கேட்டால் என்ன, கேட்காவிட்டால் என்ன? எல்லாம் ஒன்றுதான்— என்று பேசிக்கொண்டிருக்கையில், மழை ஆரம்பித்துவிட்டதால் எல்லோரும் கலைந்து போய்விட்டார்கள்.

பசுபதிக்கு மனம் நிம்மதி கொள்ளவே இல்லை. ஏதேதோ எண்ணி எண்ணிப் பெருமூச்சுடன் தவித்தான். "இனிமேல் எத்தகைய மனிதர்களாயினும்—கொடிய பகைவனாயினும் சரி—உபகாரஞ் செய்யாம விருப்பதில்லை. வாய் துடுக்காகவும் பேசுவதில்லை. பாரதியாரின் பாடல்களைத் தண்ணீர் குடிப்பதுபோல் படித்துக் குடித்திருந்தும் அவரது அருமையான,

பகைவனுக் கருள்வாய்—நன்னெஞ்சே
பகைவனுக் கருள்வாய்.

சிப்பியிலே நல்லமுத்து விளைந்திடுஞ்
செய்தி யறியாயோ?—நன்னெஞ்சே
குப்பையிலே மலர் கொஞ்சுங் குருக்கத்திக்
கொடி வளராதோ?—நன்னெஞ்சே. (பகை)

வாழ்வை நினைத்தபின் தாழ்வை நினைப்பது
வாழ்வுக்கு நேராமோ?—நன்னெஞ்சே
தாழ்வு பிறர்க்கெண்ணத் தானழிவானென்ற
சாத்திரங் கேளாயோ?—நன்னெஞ்சே. (பகை)

என்கிற பாட்டை அடியோடு மறந்து, நிரபராதியைப் பகைத்துக்கொண்டோமே! அந்த மனிதன் கூறியதுபோல் கர்மவியாதி பீடிக்குமோ? யார் தலையில் எப்படி எழுதியிருக்கிறதென்று யார் கண்டது? என் சித்தப்பாவுக்கே இம்மாதிரியிருக்கையில், நான் பிறரை நிந்தித்து வீராப்புப் பேசியது பாவத்திலும் பாவமல்லவா?" என்றெல்லாம் எண்ணி, இரவைக் கழித்தான்.

சில தினங்கள் சென்றன. பசுபதி எத்தனையோ தரம் பல துறைகளில் பார்த்தும் அந்த மனிதன் அகப்படவே இல்லை. அதுவே அவனுக்குப் பெரிய விசனமாகிவிட்டது. முன்பு சென்ற நளினியைப் பற்றியும் ஒரு தகவலும் கிடைக்கவில்லை. அவளைப் பார்ப்பதற்கும் பஞ்சமாகிவிட்டதானது, சதா மனத்திற்குள் வேதனையாகவே இருந்தது. ஆனால் அதை அவன் யாரிடம் சொல்லமுடியும்?

பார்வதிக்கு, தன் மகனுக்கு விவாகம் செய்வித்துப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் அடித்துக் கொள்கிறது. எத்தனை தரம் அதைப்பற்றிக் கூறியும் பசுபதி அதை மறுத்தே பேசி அடக்கி விடுவதால், பாவம் பார்வதி பயந்து பயந்து ஏங்கிக்கொண்டே இருந்தாள். பசுபதிக்குத் தன்னால் கடன் ஏற்பட்ட பிறகு கல்யாணப் பேச்சைப் பற்றி எடுப்பதையே நிறுத்திவிட்டாள். அவன் காலணு கடன்கூட இல்லாது சந்தோஷமா யிருந்து, தானே இசைந்து கல்யாணப் பேச்சை எடுத்தால் பார்த்துக்கொள்வோம் என்று தனக்குள் எண்ணிப் பேசாதிருந்து விட்டாள்.

நாட்டாண்மைக்காரக் கிழவனுக்கு மட்டும் பசுபதியினிடத்தில் இருக்கும் அளப்பரிய பிரீதியும் நன்மதிப்பும் தினே தினே விருத்தியாகிக் கொண்டுவந்ததால், அவனது கடைசி மகள் கமலத்தை எப்படியாவது பசுபதிக்குக் கல்யாணம் செய்து கொடுத்துவிட வேண்டுமென்ற ஆவல் பரிபூர்ணமாக இருந்தது. அதைப் பார்வதியிடம் தெரிவிக்க ஒரு தினம் பசுபதி இல்லாத சமயம் அவன் வீட்டிற்கு வந்தான்.

நாட் :—என்ன பார்வதியம்மா! என்ன செய்துகொண்டிருக்கிறாய்?

பார் :—உம். செய்வதற்கென்ன இருக்கு அண்ணு! அவன் வெளியே போய்விட்டால், திரும்பி வரும்வரையில் ஆகாயத்தைப் பார்த்துக்கொண்டு எப்போது வருவான் என்று ஏங்கிக் கிடப்பதும் பிறகு தூங்குவதுந்தான். வேறு வேலையா, வெட்டியா! வீட்டில் குழந்தையா குட்டியா! ஒன்றுமில்லாத தடிமரம்போன்ற எனக்கு வேறென்ன இருக்கு?

நாட் :—நீ சொல்வது வாஸ்வதந்தான். எத்தனை நாளைக்குத் தான் நீ தனியாக இருப்பது? உனக்கு மருமகள் வரவேண்டு

மென்ற ஆசை இருக்காதா பாவம்! எம்மா நீ கல்யாணப் பேச்சை எடுப்பதே இல்லையா? இப்போது கல்யாணம் செய்ய உனக்கு சம்மதந்தானே!

பார் :—அண்ணு! அதைக் கேட்கவும் வேணுமா? அவனுக்குக் கல்யாணத்தைச் செய்து கண்ணுல் பார்ப்பதைவிட எனக்கு வேறு என்னவேண்டும்? அவனிடம் அந்தப் பேச்சை எடுப்பதற்கே பயமாய் இருக்கிறதே! என்ன செய்வேன்?

நாட் :—இதோ பாரு, பார்வதி! நான் அதைப்பற்றிப் பேசத் தான் இங்கே வந்தேன். என் மகள் கமலத்தை உன் மகனுக்குக் கட்டிக்க ஒனக்குச் சம்மதந்தானே! நீ அதைச் சொல்லு. நான் உன் பையன்கிட்டே வார்த்தெயே எடுத்துக் காரியத்தெ முடிச்சு வெக்கறேன்.

பார் :—(சந்தோஷத்தினுல் உள்ளம் பூரித்தவளாய் அவ் வேகத்துடன்) அண்ணு! இந்தமாதிரியான தைரியம் எனக்குச் சொல்வதற்கு இந்த ஜென்மத்தில் யார் இருக்கிருர்கள்? ஒரு கோடி சேனையில் பிறந்தேன். ஒரு கோடி சேனையில்தான் புகுந்தேன். கடைசியில் ஒண்டிக் கட்டையாகி நிற்கிறேன். ஏதோ கடவுள் பிச்சையாக அவன் ஒருவன் நன்ருய் இருந்தால்போதும் என்ற நிலைமையில் இருக்கிறேன். இச் சமயம் என் தகப்பனுரைப்போல் தாங்கள் முன் நின்று இந்தக் காரியத்தைச் செய்து வைத்தால், இதைவிட சந்தோஷம் எனக்கு வேறு உண்டா? கமலத்திற்கு என்ன குறைவு? அழகும் அறிவும் பரிபூர்ணமாய் இருக்கிறது. பையனும் கட்டாயம் சம்மதப்படுவான். இதை முடித்து வைத்தால், உங்களுக்குக் கோடி புண்ணியமுண்டு—என்று தன் மனத்தைத் திறந்து கூறினுள்.

நாட் :—பார்வதி! நீ இதைப்பற்றிக் கவலைப்படாதே! உன்னுடைய ஆவலை நான் தினம் தெரிந்துகொண்டிருப்பதாலும், பையனுக்கும் வயதாகிவிட்டதால் சீக்கிரம் விவாகத்தைச் செய்துவிட வேண்டுமென்றும் தோன்றியதாலுந்தான் நானுக உன்னைக் கேட்டேன். பையனை எனக்கே மருமகனுக்கிக்கொள்ள வேண்டுமென்கிற ஆசை அதிகமாயிருப்பதால், நான் இதை முடித்தே தீருவேன். என் பேச்சுக்குப் பையனும் பதில் சொல்லமாட்டான் என்று நம்புகிறேன். நான் போய்விட்டு ராத்திரி வருகிறேன்—என்று கூறிவிட்டு எழுந்தான்.

இவர்கள் பேசிக்கொண்டிருந்த சமயந்தான் பசுபதி படகைக் கட்டிவிட்டு வீட்டிற்கு வந்தான். உள்ளே இருவரும் பேசும் குரல் கேட்டதும் தூக்கிவாரிப் போட்டது. "ஐயோ! நாட்டாண்மைக்

காரரே இம்மாதிரி வலுவில் வரும்போது நான் என்னசெய்வேன் ? தர்ம சங்கடமாகிவிட்டதே ! என் தாயாரின் ஆவல் எத்தனை உச்சியிலிருக்கிறது என்பதை யறிந்தும் என் சுய நலத்தினுல் அதைக் கவனிக்காது இருந்துவிட்ட என்னை இனி அவளும் விட மாட்டாளே !" என்று தனக்குள் எண்ணி இடிந்துவிட்ட சமயம் நாட்டாண்மைக்காரர் வார்த்தையை முடித்துக்கொண்டு எழுந்து வருவதை அறிந்ததும் தடதடவென்று துறைக்கே போய்விட்டான். நாட்டாண்மைக்காரரும் பசுபதியைத் தேடிக்கொண்டு துறைக்குச் சென்றுர். பார்வதியின் சந்தோஷமும், ஆனந்த உணர்ச்சியும் கூறத் திறமில்லை. மகனுடைய வரவை வெகு ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

## 8

இடிவிழப் பெற்றவள்போல் தவிக்கும் சீதாலக்ஷ்மிக்கு ஆகாயமும் பூமியும் ஒன்றுகச் சுற்றுகின்றதுபோன்ற வேதனை செய்கிறது. "என்ன சொன்னீர்கள் ? நளினியை நீங்கள் மணக்க வேண்டுமா ? இது நீங்கள் சுய உணர்வுடன் பேசும் வார்த்தையா அல்லது உங்களுக்கு மூளைக் கலக்கமா ?" என்று முடிப்பதற்குள் ரகுநாதன், "சீதா ! அவ்வாறு ஒன்றும் கலக்கமில்லை. உண்மையில் என் இதய பூர்வமாக நான் பேசும் வார்த்தைதான். நளினியின் மீதுள்ள என் காதல் தீ என்னை எப்படித் தகிக்கின்றது என்பதை என்னுல் கூறவே முடியாது. என் உயிரே துடிக்கின்றது. சீதா !" என்று பதட்டத்துடன் சீதாவின் கையைப் பிடித்துக்கொண்டு கூறினுன்.

அவன் கை நெருப்பைப்போன்று சுட்டது. அதைவிடக் கொடிய தீயைப்போன்ற கோபம் சீதாலக்ஷ்மியின் இதயத்தில் பொங்கி எழுந்தது. "என்ன சொன்னீர்கள் ? நாக்கை அடக்கிப் பேசுங்கள். காதலாம். கல்லெடுப்பாம். பெத்த பெண் மீதுகூட இத்தகைய எண்ணங் கொள்வதற்கு உங்கள் மனம் துணிந்ததா ? காட்டில் திரியும் மிருகங்கள்கூட இம்மாதிரி நினைப்பது சந்தேகமாயிற்றே ! நீங்கள் மிருகத்திலும் கேடு கெட்டவர்களா ? இது தெய்வத்திற்கு அடுக்குமா ? அம்மாதிரி கூறிய வாய்க்குப் போஜனம் கிடைக்குமா ? இவ்வாறு எண்ணிய நெஞ்சில் ஈரமிருக்குமா ? என் இத்தகைய விபரீதபுத்தி தங்களுக்கு உண்டாகியது ? என் வயிற்றில் பிறந்தால் என்ன ? என் சகோதரியின் வயிற்றில் பிறந்தால் என்ன ? அது உங்கள் பெண்ணுக்குச் சமம் அல்லவா ?

மாசி லாத குடிப்பிறப்பு மானங் கீர்த்தி யிவைமாய
வாசை நோயா னதுபெருக வனங்க சரத்தா லேவுண்டு
கூச வின்றிக் குலத்தவரைக் குலையச் செய்தார் குலத்தோடு
நாச மெய்திப் பழியோடு நரக முறுவ ரெனவுரைத்தான்.

என்கிற ராமாயணத்தின் பாட்டைச் சற்று நினைத்துப்பாரும்" என்று கண்கள் சிவக்கக் கூறினாள்.

ரகு:—சீதா ! வீணாக ஏதேதோ பேசி காலத்தை ஏன் கடத்துகிறாய் ? இக் காலம் கெட்டிருக்கும் விதம் உனக்குத் தெரியாதா ? கலி முற்ற முற்ற, உலகில் அக்கிரமங்களும் அநீதிகளுமல்லவா நீதி போல் விளங்குமென்று கூறுகிறார்கள். அவள் என்ன உனது உடன் பிறந்த சகோதரியின் மகளா ? மூத்தாள் பெண்ணின் மகள்தானே ! அதற்கென்ன தோஷம் ? பெண்ணாவது பேயாவது ? இதெல்லாம் இந்த இருபதாவது நூற்றாண்டில் கூறும் வார்த்தையா ? வீணாக என்னை வருத்தாதே. சீதா! நீ மனம் வைத்தால் காரியம் நடந்துவிடும். நமது மத வழக்கப்படி நடக்கவேண்டுமென்பதில்லை. மதம்விட்டு மாறி, கிறிஸ்தவர்களாக ஆகி, ரிஜிஸ்தர் விவாகம் செய்துகொண்டு விடத்தான் தீர்மானித்திருக்கிறேன். உன்னிடம் சொல்லாமல் இக் காரியத்தைச் செய்யக் கூடாதென்றுதான் இங்கு வந்தேன் சீதா !

சீதா:—ஐயோ ! உங்கள் வார்த்தை என் காதில் சாதாரண சப்தமாக விழவில்லை. ஈயத்தைக் காய்ச்சி ஊற்றுவதுபோல் இருக்கிறது. இந்த அக்கிரமத்தை எந்த ஜாதியும், எந்த மதமும், எந்தத் தேசமும், எந்த மனிதப் பிறவியும் ஏற்காது. இதற்கு இடங் கொடுக்காது. பெற்ற பெண்ணைவிட பதின் மடங்கு அதிகரித்த பாசத்துடன் வளர்த்த குழந்தையின் மீது இத்தகைய துரோக எண்ணங் கொண்டதே மிகவும் தவறு. அவ் வெண்ணத்தை வளர்த்து வந்தது தவறிலும் தவறு. அதற்காக தன் சுஜாதியையும் தன் மதிப்பையும்விட்டு, மதம் மாறுவதாகத் தீர்மானிப்பது கொடுமையிலும் கொடுமை.

கடவுள் கொடுத்த ஆறறிவும் இத்தகைய துரோக வழியில் பிரவேசிக்கத்தான் உதவியதா ? அந்தோ ! குழந்தையின் காதில் இந்த வார்த்தைகள் விழுமாயின் அவள் உயிர் துடிக்குமே ! உடனே தற்கொலை செய்துகொண்டல்லவா பிராணனை விட்டுவிடுவாள் ? உங்களைப் பெற்ற தந்தை என்று குழந்தை நம்பியிருக்கிறதற்கு நீங்கள் இத்தகைய பாதக துரோகம் செய்வது தகுமா ? முறையா ? அப்படிப்பட்ட எண்ணங் கூட ஒன்று பரிசுத்த மனத்தில் உதிக்குமா ?

ரகு :—சீதா ! நீ என்ன வேதாந்தம் சொல்லியபோதிலும் இப்போது என் காதில் விழவே விழாது. என்னை மிருகமென்று கூறு.

மிலேச்சனென்று சொல்லு. சண்டாளன் என்று திட்டு. என்ன செய்தாலும் சரி; சொன்னாலும் சரி. என் மனம் மற்றொருவனுக்கு இனி இடங்கொடுக்காது. நளினியின் 12 வயதில் நானும் அவளைக் குழந்தை என்றுதான் எண்ணினேன். நாளாக ஆக அவளது வளர்ச்சியும் பருவகாலத்துக் கவர்ச்சியும் என்னைச் சுத்தப் பயித்தியக்காரனாகச் செய்துவிட்டன. இந்த வேதனையைச் சகிக்காமல்தான் நான் இங்கு வந்து உன்னையும் அவளையும் பார்க்காமலேயே திரிந்தேன். இனி என் உயிர் நிற்காதுபோலாகிவிட்டதால்தான் நான் இங்கு வந்தேன். சீதா! காதலின் வேகத்தையும் வேதனையையும் நீ அறியமாட்டாய்.

சீதா :—(ஆத்திரத்துடன் இடைமறுத்து) சேச்சே! போதும். வெட்கங்கூட மலை ஏறிப் போய்விட்டதுபோல் இருக்கிறது. வாயை மூடுங்கள். நாவல்களைப் படித்துவிட்டும், சினிமாக்களைப் பார்த்துவிட்டும் அதிலிருந்து காதல், மூக்கல் என்று மானங்கெட்டுப் பேச வந்துவிட்டீர்களா?

கொலையஞ்சார் பொய்நாணார் மானமு மோம்பார்
களவொன்றோ வேனையவுஞ் செய்வார்—பழியோடு
பாவமிஃ தென்னார் பிறிதுமற் றென்செய்யார்
காமங் கதுவப்பட் டார்.

—நீதிநெறிவிளக்கம்.

என்பது பெரியார் வாக்கல்லவா?

மனிதன் தன்னடக்கம் அழிந்துபோகும்படியான நிலைமைக்கு வந்துவிட்டால், அவனுக்கு வீடுகளில் இடமே கிடையாது. பயித்தியக்கார ஆஸ்பத்திரியில்தான் இடம் தரவேண்டும்.

உங்கள் மனத்தையே சற்று தொட்டுப் பாருங்கள். உங்களை மணந்துகொண்டு நான் அடைந்த பலன், நான் கிடக்கும் சிறைவாஸத்தினால், உலகப் பற்றற்று சந்நியாசினியைப்போல் வாழ்க்கை நடத்தும் முறையில் இத்தனை சிறிய பிராயத்தில் என் மனம் பக்குவமடையவில்லையா? நீங்களென்ன குழந்தையா? கடவுள் சரியாக வைத்திருந்து முதலில் பிறந்த குழந்தை உயிருடன் இருந்தால் இந்த வயதில் நான்கு பேரனும் பேத்தியும் காலைச் சுற்றி வருமே! உங்களுக்கு வெட்கமில்லை, மானமில்லை, நீதியில்லை! இந்த மிருகத்தனமான பேச்சை இனி வாயில் வைத்தும் பேசவேண்டாம். துறவு கொள்ளும் நாளில் காதல் லீலையா!

பிறந்தோ ருறுவது பெருகிய துன்பம்
பிறவா ருறுவது பெரும்பே ரின்பம்
பற்றின் வருவது முன்னது பின்னது
அற்றோ ருறுவ தறிகென் றருளி.

—மணிமேகலை.

இதுகாறும் இதுபோன்ற விஷயங்களைப் படிக்காது குருடாயிருப்பீ ராகுல், இனியாவது படித்து நல்ல அறிவு பெற்று வாழும்.

நம்மை நம்பி இங்கே விட்டு விட்டுச் சென்ற குழந்தையின் க்ஷேமத்தைக் கோரி அவளுக்கு நல்ல இடத்தில் கல்யாணத்தைச் செய்து வைத்துச் சந்தோஷப்பட்டு அந்த விதத்திலாவது ஆனந் தத்தை அடைய முயற்சிக்காமல், குழந்தையின் உயிரை நீங்களே எமன்போல் உரிஞ்ச வருகிறேன் என்று கூறுவதைக் கேட்க என் சரீரமே பற்றி எரிகிறது. என் காதில் இம்மாதிரி பேச்சை இனிமேல் போடவேண்டாம். என் உயிர் இக் கட்டையில் இருக்கிறவரையில் நீர் எண்ணியுள்ள எண்ணம் கனவில்கூடப் பலிக்கவே பலிக்காது. மறு ஜென்மத்தில்கூடப் பலிக்காது. இதற்குத்தான ஒருநாளும் இல்லாது திருநாளைப்போல் பாதி இரவில் கொள்ளைக்காரன் மாதிரி இங்கு வந்து என் குழந்தையைக் கொள்ளை அடிக்கப் பார்க் கிறீர்கள்? போய் வாருங்கள்...

ரகு :—சீதா! நான் இன்னும் சாந்தத்தை இழக்காமல் உன் கொடிய வார்த்தைகளைப் பொறுத்துக்கொண்டு பேசுகிறேன். நீ ஆத்திரப்படுகிறாய். நீ முதலில் எனக்குக் கொடுத்த வாக்கை மறந்து இப்படிப் பேசுகிறாயா?

சீதா :—வாக்கா! ஆம். மறக்காமல்தான் நான் பேசுகிறேன். நியாயத்திற்கு நீர் கேட்ட பொருளாயின் நானும் வாக்குத் தவறாது கொடுத்திருப்பேன். அநியாயமாய்—அக்கிரமமாய்—முறை தவறி நீர் கொடிய அரக்கன்போல் கேட்டதற்குத் தர்ம நியாயத்துடன் வாக்குப் பரிபாலனம் வேறு வேண்டுமா? நீர் என் உயிரைக் கேட் டிருந்தாலும் கொடுத்துத் தக்ஷணமே என் வாக்கை நிறைவேற்றி யிருப்பேன். என் உயிரினும் இனிய பொருளைக் கேட்க உமக்கு வெட்கமில்லை? நீர் எண்ணிய எண்ணம் வெறும் கொடிய எண்ணம் மட்டுமல்ல. உம்மையே, உமது குடும்பத்தையே, உமது ஏழு தலை முறைகளையும் எரிக்கும் செந்தணலைவிடக் கொடியது தெரியுமா?

லோகமாதாவை இச்சித்த ராவணன் கதி என்னவாயிற்று? மஹா பதிவ்ருதையான அநுசூயையைச் சோதித்த திருமூர்த்தி களின் கதி என்னவாயிற்று? அகலிகையை ஆசித்த இந்திரனின் கதி எப்படி வெட்கக்கேட்டிலும் வெட்கக்கேடாய் முடிந்தது? தமயந்தியின்மீது கண்வைத்த வேடன் எப்படி எரிந்து சாம்ப லானான்? கற்பரசியாகிய கபீர்தாஸரின் மனைவியின்மீது மோகங் கொண்ட ஸேட்டின் முடிவு என்னவாயிற்று? சாக்ஷாத் எம்பெரு மானாகிய கண்ணனையே தன் பக்கபலமாகக்கொண்ட த்ரௌபதி யைத் துச்சமாக எண்ணிய துர்யோதனாதியர்களின் வம்சமே பூண்

டற்ற கதையை மறந்தீரா? இதுபோல் இன்னும் எத்தனை உதாரணங்கள் உமக்கு வேண்டும்?

உம்மைப்போன்ற காமப்பித்துப் பிடித்துக் குடியைக் கெடுக்கும் பாதகர்களுக்குப் புத்தி வருவதற்காகவன்றோ இம்மாதிரி புராணங்களெல்லாம், சரித்திரங்களெல்லாம் பெரியார் வகுத்திருக்கிறார்கள். அதைப் படித்தும் புத்தி வரவில்லையென்றால் அவர்கள் மனிதர்களே யல்ல. கேவலம் பூச்சி, புழுவுக்குச் சமானந்தான். இனிமேல் வீண் பேச்சுக்கு இங்கு இடமில்லை...

என்று முடிப்பதற்குள், ரகுநாதன் சற்று ஆத்திரத்துடன், "சீதா! அதிகம் உளறுதே! நீ படித்திருக்கும் பெருமையை, பாண்டித்தியத்தை என்னிடம் காட்டாதே! நீ என் கைக்குள் அடங்கிய அடிமை என்பது ஞாபகமிருக்கட்டும். சமாதானமான வழிக்கு வராவிட்டால், காரியம் எப்படி யாகும் தெரியுமா? நளினியைக் கெடுத்துக் குட்டிச்சுவரடிக்க வெகு நேரமாகாது! பிறகு அவள் வாழ்வே பாழாகிவிடும். வீண் ரஸாபாஸமில்லாது காரியம் ஒழுங்காக....

சீதா :—சேச்சே! புத்திக்கெட்ட மனிதரே! இதுவரையில் நான் உமது மனைவி என்கிற எண்ணத்துடன் அந்த எல்லைக்குள்ளிருந்தேன். என்னை நீர் அம்மாதிரி நினைக்காது அடிமையைப்போல் நசுக்குவதை என்றோ உமது செய்கை அறிவித்துவிட்டது. இனி, புதிதாக நான் ஒன்றும் தெரிந்துகொள்ளவேண்டாம்.

'தலைக்கு மிஞ்சிய ஆக்ஞை இல்லை. கோவணத்திற்கு மிஞ்சிய தரித்திரமில்லை' என்றபடி என்னைக் கொலை செய்வதற்கு மிஞ்சி உமக்கு ஒரு காரியமும் இல்லை என்பதை நான் அறிவேன். நான் எந்தக் கடவுள்மீது வேண்டுமாயினும் சத்தியம் செய்கிறேன். உம்முடைய எண்ணம் ஒருபோதும் ஈடேறாது. இது நிச்சயம். இது சத்தியம். அப்படி மூர்க்கத்தனமாய் மிருகத்தனமாய் நடப்பதற்குள் எங்கள் இருவருடைய உயிரும் எமலோகத்தில் இருக்கும். வீண் மனப்பால் குடிக்கவேண்டாம்—

என்று கடுங்கோபத்துடன் கூறி முடிப்பதற்குள், அதுவரையில் கதவின் பக்கத்திலிருந்தே விஷயத்தைக் கேட்டு மனங் குமுறிக் கொண்டிருந்த நளினி தலைவிரி கோலமாக ஓர் காளிகா தேவியைப்போல இவர்கள் முன்பு திடீரென்று வந்து "சண்டாளா! நீ மனிதனென்று பேசிக்கொண்டு உலாவ உனக்கு வெட்கமில்லையா? தூத்து! காமப் பிண்டமே! பெற்ற மகளைப் பெண்டாள நினைக்கும் சண்டாளா! நீ எண்ணியபடி என்னைக் கெடுத்துக் குட்டிச் சுவராக்குவதற்கு நான் அத்தனை ஏமாந்த சோணகிரி

என்றும் அல்லது உனக்கு உடன்பட்டுவிடும் ஒரு கொடும்பாவி யென்றும் எண்ணினுயா? இதற்காகத்தான் ரயிலடிக்கு மிகவும் ஒழுங்காக பசுத்தோல் போர்த்த புலியைப்போல் வந்தாயா? சீச்சீ! மரியாதையாக வெளியே போகிருயா, இந்த இரும்புத் தடிக் கம் பால் உன் மண்டையை உடைத்துவிடட்டுமா!...மங்களம்! மங் களம்! எழுந்து வா. உன் எஜமானரின் அபாரமான புகழ்ச்சியைப் பாரு" என்று கத்தியவாறு, "தோட்டக்காரா! நீயும் வா. பெண்டு களைக் களவாடும் திருடன் வந்திருக்கிருன். பிடி, பிடி" என்று ஆவேசத்துடன் கத்திவிட்டாள்.

உண்மையில் திருடனிலும் கொடிய திருடனுக வந்திருக்கும் ரகுநாதன் இம்மாதிரி எதிர்பாராதபடி நளினி வருவாள் என்று கன விலும் நினைக்கவில்லையாதலால், முதலில் அசந்துபோய்விட்டான். அவள், கையில் இரும்புக் கம்பியை ஓங்கிக்கொண்டு வீராங்கனை யைப்போல் கர்ஜித்ததும், மூலைக்கொருவராக தோட்டத்திலிருந்த வர்களும், அசந்து தூங்கிக்கொண்டிருந்த மங்களமும் ஓடிவந்து விட்டார்கள்.

திருடனுக்குத் தேள் கொட்டியதுபோல் ரகுநாதன் அகப்பட் டுக்கொண்டு விழித்தபடியே கமா சிமா என்று வாய் திறக்காமல் மற்றொரு வழியால் மெல்ல நழுவ எத்தனித்ததைக் கவனித்துவிட்ட நளினி, ஆத்திரத்துடன் இரும்புக் கம்பியால் "காதல் பிரஸாதம் இந்தா! பரிசு இந்தா!" என்று கூறிக்கொண்டே அவன் முதுகில் ஒரு அடி கொடுத்தாள்.

நளினியின் மேலுள்ள ஆத்திரமும் கோபமும், சீதாவின்மீதுள்ள கடும் க்ஷாத்திரமும் ஒன்று கூடிய ரகு, முன் வைத்த காலைப் பின்வைத்து, சீதாவின் மென்னியை இறுகப்பிடிக்க வந்து, பிடித் தான். நளினி மீண்டும் இரும்புக் கம்பியால் அவன் தலையில் பலமாக இரண்டடி வைத்தவாறு, "கொலை! கொலை!" என்று கத்தினுள்.

இதற்குள் 'திருடன் எங்கே! எங்கே?' என்று கேட்டுக் கொண்டே வேலைக்காரர்களும், ரகுவின் சகோதரிகளும் அங்கு வந்து சூழ்ந்துகொண்டார்கள். ரகுவின் கதி என்னவாக விருக்கும்? அவனது உள்ளம் ஒரு வழியிலும் நிற்காது துள்ளியது.

# 9

நாட்டாண்மைக்காரன் பசுபதியைத் தேடிக்கொண்டு ஆற்றங்கரைக்கு வந்தான். ஆற்றங்கரை மரத்தடியில் பசுபதி முன் சொல்லியபடி யோசனையுடன் ஓடிவந்து படுத்துக்கொண்டு, ஏதோ பாடுபவன்போல் பாடிக்கொண்டிருந்தான்.

நாட்டாண்மைக்காரன் வழக்கம்போல் வாஞ்சையுடன் வந்து பசுபதியின் பக்கலில் உட்கார்ந்துகொண்டு, "என்னப்பா பாடிக் கொண்டிருக்கிருய்?" என்ருன். நம்ப படகோட்டிக்கு விஷயம் தெரியுமாதலால் 'ஒன்றுமில்லை அண்ணு! இன்று வேலை யொன்றும் கிடைக்காததால் சீக்கிரம் வந்துவிட்டேன்' என்று கூறினன்.

நாட் :—பசுபதி! எனக்கு வெகு நாட்களாக ஒரு ஆசை இருந்துவருகிறது. அந்த ஆசையை உன்னல்தான் நிவர்த்தி செய்ய முடியும். எனக்கு வயதாகிவிட்டது. நீ என் வேண்டுகோளைத் தட்டாமல் பூர்த்தி செய்வாயா?

பசு :—என்ன அண்ணு பெரிதாக பீடிகை போடுகிறீர்கள்! நீங்கள் எனக்குச் செய்திருக்கும் உபகாரத்திற் கெல்லாம் நான் என்னதான் பிரதி செய்வேன் என்று தினமும் எண்ணிக்கொண் டிருக்கிறேன். நான் பணத்தால் செய்வதற்கு அசக்தனுக விருப் பினும் சரீரத்தினலாகிய வேலையைச் செய்வதற்குக்கூட என்னைக் கேட்கவேண்டுமா? என்ன வேலை சொல்லுங்கள்.

நாட் :—அப்படி கஷ்டமான வேலை ஒன்றுமில்லை. நீ என் கமலாவை மணந்து எனக்கு மருமகப்பிள்ளையாக ஆகிவிட வேண் டும். இதுதான் என் பிரார்த்தனை—என்ருன். எற்கெனவே விஷயம் தெரிந்திருப்பதால், அதிகமான அதிர்ச்சி உண்டாகவில்லை எனினும், திடுக்கிட்டவன்போல நடித்து "அடாடா! இதென்ன! பிள்ளையார் பிடிக்கக் குரங்காக மாறியதுபோல் ஏதோ காரியம் என்றும், ஆவல் என்றும் கூறிவிட்டு, கல்யாணத்தில்கொண்டு மாட்டிவிட்டீர்களே! என்னை மன்னிக்கவேண்டும். கல்யாணத்தைப்பற்றி எனக்கு இப் போது அக்கரையே இல்லை அண்ணு! அது விஷயத்தில்......

நாட் :—என்ன! அக்கரை இல்லையா? ஏதோ கேட்டவுடனே செய்வதாக வாக்கு மட்டும் கொடுத்துவிட்டு, உடனே மறுக் கிருயே! உன் கல்யாணத்தில் உனக்கு அக்கரை இல்லையென்ருல், மற்ற எதில் உனக்கு அக்கரையுண்டு?

பசு :—அண்ணு ! என்னைப்பற்றியவரையில் எனக்கு எதுவுமே பிரதானமில்லை. எனக்கு என் தாயார்தான் முதல் பிரதானம். இரண்டாவது எனது படகு. மூன்ருவதுதான் மற்றது. என் தாயார் பசித்து வாடாமல் நான் அவளைக் காப்பாற்றிக் கரை சேர்த்துவிட்டால் போதும்.

நாட்டாண்மைக்காரர் போவதைப் பார்த்துக்கொண்டிருந்த பார்வதியும் சற்றுநேரங்கழித்ததும் மன வேகத்தில் கூடவே அங்கு வந்தாள். பசுபதி இம்மாதிரி கூறும்போது அவள் மரத்தின் மறைவிலிருந்து வெளியே வந்து ஆவலே வடிவாய் "தம்பி ! கோபிக்காதே. உன் தாயாரைப்பற்றி நீ எத்தனை உயர்வாகவும், மதிப்பாகவும் நினைத்திருக்கிருய் என்பதை நான் அறிவேன். என்னுடைய சாண் வயிற்றுப் பசியை மட்டும் தீர்த்து என்னை முடித்துவிடுவதுதான் உன் லக்ஷ்யம் என்று நீ நினைத்திருப்பது சற்றும் பொருந்தவே பொருந்தாது. அது தர்மமு மில்லை.

தம்பி ! என் வயிற்றுப் பசியைவிட என் மனத்தின் ஆவல் பசி இரவு பகலாக என்னைக் கொல்கிறது. அந்தப் பசியை ஆற்றி, என் ஆவலைப் பூர்த்தி செய்து, எனக்கு மாமியார் என்ற பட்டத்தை முதலிலும், பாட்டியார் என்கிற பட்டத்தை இரண்டாவதாகவும் சூட்டி மகிழ்வித்தால், என் ஜென்மம் சாபல்யமாகிவிடும். நம்ப நாட்டாண்மைக்கார அண்ணனே தன் மகளையுங்கொடுத்து, சகலத்தையும் பார்த்துக்கொள்வதாக முன்னே வந்திருக்கையில், உனக்கு என்ன குறைவு ? தம்பி ! பசுபதி ! நீ வீணுக இதையும் மறுக்காதே !

இதோ பாரு. நாம் அனுதரவாயிருந்த காலத்தில் நமக்கு உதவி புரிந்து நம்மைக் காப்பாற்றி, இடம் முதற்கொண்டு கொடுத்து உதவிய பெரியவரின் விருப்பத்தை நீ தடுக்கலாமா ?" என்று பலத்த அஸ்திவாரங்களுடன் கூறினுள்.

நாட்டாண்மைக்காரரும் தன் விருப்பத்தைப் பலமாக எடுத்துச் சொல்லி வேண்டினுர். அதற்குமேல் அவன் என்னதான் செய்வான் பாவம் ! தாயாருக்கும் எதிர்த்துப் பதில் சொல்ல முடியவில்லை. அவளுடைய ஆசை எவ்வளவு உச்சஸ்தாயியில் இருக்கிறதென்பது அவள் தொனியிலும், கண்களிலும் ஜ்வலிக்கிறதை அவன் உள்ளம் அறியாமலில்லை. பசுபதியின் பிதாவோ இருப்பிடமே தெரியாததால் தனக்குப் பிதா ஸ்தானத்திலிருந்து ஆதிமுதல் காத்துவரும்—பலவிதத்திலும் உதவி செய்துவரும்—நாட்டாண்மைக்காரரைத் துவேஷித்துக்கொள்வதும் த்ரோகமாகும். ஆகையால் பாக்குவெட்டியில் அகப்பட்டுக்கொண்டதுபோல் அவன் கதியாயிற்று.

அவன் இருவரையும் நோக்கி, "அம்மா !...பெரியவரே !... இரண்டு பேரும் என்னை மன்னிக்கவேண்டும். நான் உங்கள் கேள்

விக்கு நாளைய இரவு பதில் சொல்கிறேன். இப்போது என்னை விட்டுவிடுங்கள்" என்று தாழ்மையுடன் கேட்டுக்கொண்டான். இருவரும் அதற்குச் சம்மதித்துப் பேசாது போய்விட்டார்கள்.

பசுபதியும் எத்தனையோ விதத்தில் யோசனை செய்தான். மனம் குழம்பிப் போயிற்றே யன்றி, ஒருவகையிலும் நிலை நிற்கவில்லை. தன் மனம் நாடும் மங்கையைப்பற்றிச் சொல்வதற்கே அவனுக்கு வாயில்லை. "அவள் யாரோ! என்னவோ! எங்கிருப்பவளோ! ஒரு விதமான தகவலும் அறியாமல் மனத்தை மட்டும் பறி கொடுத்து விட்டு நாவல்களில் கூறுவதுபோல் தவித்தால் அதற்கு வழியுண்டா? இதைப் பிறரிடம் சொன்னல் சிரிப்பார்களே! என்ன செய்வது?

தன் மனத்தைத் திருப்தி செய்வதற்காக அந்த மாதரசியைப் பற்றி விசாரிப்பதா? அன்றி, அவள்பால் தான் கொண்ட காதலைத் தியாகம் செய்வதா? அல்லது பெற்ற தாயையும் உதவி புரிந்த பெரியவரையும் திருப்தி செய்யும் பொருட்டுக் காதலைக் களைந்து எறிந்துவிட்டு நியாயத்திற்கும் கடமைக்கும் கட்டுப்பட்டு, இந்தக் கல்யாணத்திற்கு இசைவதா? எனக்கு ஒன்றுமே தோன்றவில்லையே! என்னை ஏன் கடவுள் இம்மாதிரி சோதனை செய்து வேடிக்கை பார்க்கவேண்டும்" என்கிற பெரிய குழப்பத்தில் மூழ்கிப் போய் விட்டான்.

வெகு நேரமாகி இருள் சூழ்ந்து கொண்டதுகூட அவனுக்குத் தெரியவில்லை. அவன் வாய், பாரதியாரின் குயில் காதல் பாட்டைத் தானே முணுமுணுத்துக்கொண்டிருந்தது. ஆற்றங்கரையில் ஒரு அடர்ந்த மாந்தோப்பு உண்டு. அந்தத் தோப்பின் பக்கமாகத்தான் அவன் வீட்டிற்குப் போகவேண்டும்.

ஆகாயத்தில் நக்ஷத்திரங்கள் பிரகாசிப்பதைப் பார்த்தபிறகே வெகு நேரமாகிவிட்டதை அவன் அறிந்தான். தன் தாயார் மீண்டும் எங்கே தன்னைத் தேடிக்கொண்டு வந்துவிடுவாளோ என்ற நினைவு வந்ததும், உடனே எழுந்து வீட்டை நோக்கி நடந்தான். வழியில் வரும்போது முன்பு தெரிவித்த மாந்தோப்பில் ஒரு பெண்ணின் குரல் —விம்மி விம்மி அழுங்குரல்—கேட்டுத் திடுக்கிட்டுத் திகைத்து நின்றுவிட்டான். இப்படியும் கடவுள் சோதிப்பாரா என்று அவன் வியப்புடன் நின்று கேட்கத் தொடங்கினன்.

அலமு :—ஆமாம்; கமலா! நீ அந்தப் படகோட்டியின்மீது அன்பு கொண்டு இரவு பகலாகத் துடிக்கிருயே! அவனைப் பார்த்தால், இந்த உலக இச்சையே இல்லாதவன்போலல்லவா தோன்றுகிறது. இந்த விஷயம் உன் தகப்பனருக்குத் தெரியுமா?

கமலா :—என் தகப்பனருக்கு நான் நேரில் எப்படி வெட்கத்தைவிட்டுக் கூறுவது? ஆனல், அவர் இதை ஒருவாறு தெரிந்து

கொண்டு விட்டார் என்பது மட்டும் எனக்குத் தெரிந்தது. அவர் நேரில் இன்று படகோட்டியையும் அவர் தாயாரையும் இது விஷயமாகக் கேட்பதாக வீட்டில் அம்மாவுடன் பேசிக்கொண்டிருந்தார். கடவுள் என் பங்கிலிருந்து ஜெயத்தைக் கொடுக்கவேண்டுமே என்று பிரார்த்திக்கிறேன். அலமூ! ஜெயமாகுமா சொல்லேன்.

அலமு :—எனக்கென்ன ஜோஸியமா தெரியும்? ஆனல், ஒன்னு சொல்லுறேன் கமலா! கவலைப்படாதே; கோபிக்காதே. எங்க மாமனும் படகோட்டி தானே! பசுபதியும் ஒரு அழகான பொண்ணும் ஏதோ ஒரு துறையில் அடிக்கடி சந்தித்துப் பேசுவதைப் பார்த்திருக்கிறதாக மாமன் சொன்னன். படகோட்டியும் நல்ல அழகு. படித்தவன். தொழில் முறையில் எதுவும் சமந்தானனுயமில்லை என்பதை நிலை நாட்ட அவன் படகு விடுகிறுனேயன்றி வேறில்லை. என் மாமன் பார்த்த பெண்ணை அவன் காதலித்திருந்தால், நீ கொண்டுள்ள எண்ணம் வீணுகத்தானே போய் விடும்.

கமலா :—ஐயையோ! இதென்னடீ அலமூ! புதியதாய் வெடிகுண்டு ஒன்று போடுகிறுயே! அவரைப் பார்த்தால், அம்மாதிரியொரு வியாபாரம் இருப்பதாகவே தெரியவில்லையே! கடவுள் எனக்கு ஏமாற்றத்தைக் கொடுக்கமாட்டார் என்றல்லவா எண்ணியிருக்கிறேன். ஐயோ! இந்த விஷயம் உண்மையாயின், யாருக்குப் பாக்கியம் கிட்டுமோ! யாருக்குத் தௌர்பாக்கியம் சூழுமோ? என்ன செய்வேன், அலமு?

அலமு :—கமலா! நீ பேசுவதெல்லாம் பார்த்தால் நாவல் கதைகளில் கூறுவது போலிருக்கிறதே! இதெல்லாம் சாதாரண மனித தர்மத்தில் நடக்கிற காரியமே யல்ல. காதலாவது, கதையாவது?

கமலா :—அலமூ! நீ பேசுவதுதான் ஒவ்வாததாக விருக்கிறது. காதல் என்ற பதமே உனக்குக் கேலிக் கூத்தாக விருக்கிறதாக்கும்? அன்று நமது பஜனை கோவிலில் ஒரு அம்மாள் பிரஸங்கித்தார்களே அவர்கள் சொல்லியது ஞாபகமில்லையா? அன்பு என்ற பதத்திற்குப் பொருள் காதல் என்றும், பிரேமை என்றும் பதங்கள் கூட ஒலிப்பது உண்டு என்று கூறவில்லையா? அதோடு நீ மனித இயற்கைக்கு மாறுபட்டதென்று கூறுவது முற்றிலும் பொய்யானது. நீ சற்று யோசனை செய்து பாரு.

ருக்மிணி, சாக்ஷாத் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவையே பதியாக அடைய வேண்டுமென்று காதல் கொள்ளவில்லையா? பராசக்தி சிவபிரானையே அடைய காதலுடன் தவம் செய்யவில்லையா? தமயந்தி நளனையும், ஸாவித்திரி சத்யவானையும், ஸ்ரீ ஆண்டாள் ஸ்ரீமங்

நாராயணனையும் காதல் கொண்டு கல்யாணம் செய்து கொண்டதாக நாம் புத்தகங்களில் படித்ததெல்லாம் பொய்யா ?

அலமு :—ஏதேது ! கமலா ! அந்தப் படகோட்டியே நம் கிராமத்து ஜனங்களுக்குப் புதுவழி காட்டி புத்தகப்படிப்பின் ருசியை ஊட்டி விட்டதில் அனேக புத்தகங்களைப் படித்து நீ அபாரமான புத்திசாலியாகிவிட்டாயே! அதனால்தான் நீ காதலுக்கு இத்தனை வலுவையும் சக்தியையும் கொடுத்து மனத்தில் வளர விட்டுவிட்டாய் ? இது ஒருதலைப் பக்ஷமாகவிருப்பதால் லாபமென்ன கமலா ! அவனுக்கும் உன்னிடம் அன்பு வேண்டாமா ? நான் முன்பு சொல்லியது போல் அவன் வேறு பெண்ணைக் காதலிப்பது உண்மையாயிருக்குமாயின், அப்போது என்ன செய்வாய் ?

கமலா :—(சற்று அழுத்தமான குரலில் பேசத்தொடங்கி,) " அலமு ! செய்வதா ! இரண்டு மார்க்கங்கள் உண்டு. ஒன்று உலகையே வெறுத்து வாழ்நாள் முழுவதும் கன்னிகையாகவே இருந்து உலகத்திற்கு உழைத்து நன்மார்க்கத்தைத் தேடிக்கொள்வது. அதற்கு மன வலிமை இடங்கொடுக்காது என்னை ஏய்த்து விடுமாயின், இதோ, இதே ஆற்றில் என்னுயிரைப் பலிகொடுப்பது.

அலமு :—சேச்சே !...பயித்தியம் போல் பேசுகிறாயே ! இப்படியெல்லாம் உளருதே ! சாவதும் பிழைப்பதும் உன் கையில் தான் இருக்கிறதா ?

மேற்குறித்த சம்பாஷணை முடிவதற்குள் கடைசி வார்த்தைகள் நம் படகோட்டியின் காதில் விழுந்ததும், கூரிய ஈட்டி பாய்ந்ததுபோல் அவனைத் தாக்கியது. "அடாடா ! கிரகசாரமே ! இப்படியும் ஒரு கொலைபாதகம் நம்மைச் சூழுவைத்து வேடிக்கை பார்க்கக் கடவுள் திருவுள்ளமா ? ஐயோ ! சோதனையே ! இந்தத் தர்ம சங்கடத்திற்கு என்ன செய்வேன் ?" என்று தனக்குள் இடிந்து போய் ஒன்றும் தோன்றாது அப்படியே நின்று விட்டான். விதி எந்தவிதம் ஆட்சிபுரியுமோ ! யாருக்குத் தெரியும் ?


உளுத்த இதயம்

இதைப் படிக்கும்போது உங்கள் இதயமும், மனமும், கண்களும் உங்கள் கட்டுக்கடங்காவென்பது திண்ணம். ஒவ்வொரு வரியிலும் உங்களைப் பரவசமுறச் செய்யும் சக்திவாய்ந்த நாவல் இது.

விலை அணா 4.

# இனம் இனத்தைச் சேரும்

ஸரஸ்வதி:—என்ன லக்ஷ்மீ! இவ்வளவு கவனமாகப் படிக்கிருய்; அதென்னது?

லக்ஷ்மி:—ஏன்! உனக்கும் வருகிறதே ஜகன்மோகினி அது தான். அதிலுள்ள நோட்டீஸைத்தான் மறுபடியும் படிக்கிறேன். நீ படித்துப் பார்த்தாயா? பணம் அனுப்பிவிட்டாயா?

ஸர:—படித்துப் பார்த்தேன் லக்ஷ்மீ! தீபாவளி, கார்த்திகை பண்டிகைகளால் அதிக செலவாகிவிட்டதால் டிஸம்பர் முதலில் அனுப்பப்போகிறேன். பொன்விழா நாவலைப்பற்றிப் படித்தாயா? அதற்கும் சேர்த்துத்தான் அனுப்பப்போகிறேன். நீ எப்படி?

லக்ஷ்மி:—கட்டாயம் அனுப்பவேண்டும். 'இப்போது தேசம் இருக்கிற நெருக்கடியான நிலைமையில் விலைவாசிகள்தான் நாளுக்கு நாள் ஜன்னி ஏறுவதுபோல் ஏறுகிறதே! ஒரு ரூபாய் விற்ற பேப்பர் நாலு ரூபாய் விற்கிறது. இதில் நிறைய கலர்ப் படங்களுடன், உயர்ந்த காகிதத்தில் அச்சிட்டு ஒரு தனிப் புத்தகம் போட்டுக் கேவலம் 8 அணுவுக்குக் கொடுப்பதென்றால் அது விற்பனையே யல்ல. சந்தாதாரரிடம் உள்ள பிரியத்திற்காகத்தான் கொடுக்கிருர்கள் போலிருக்கிறது' என்று என் கணவர்கூட நேற்றுக் கூறினர். லாபத்தையும் பார்க்காது அத்தனை குறைந்த விலைக்கு கொடுப்பவர்களை நாம் ஆதரித்து வாங்காவிட்டால், நன்றாகவே இருக்காது.

ஸர:—வாஸ்தவம். அவர்களுக்கு ஊக்கத்தையும், உத்ஸாகத்தையும் உண்டாக்குவதற்கும் நன்றிச் செலுத்துவதற்கும் அடையாளமாய் நாம் நம்ப கிளப்பில் உள்ள எல்லோரையும் சந்தாதாரர்களாகச் சேர்த்து, பொன்விழா நாவலையும் வாங்கும்படிச் செய்தால் தான் நல்லது என்று என் கணவர்கூடத் தெரிவித்தார்.

ல:—நேற்றுக்கூட நான் நமது கிளப்பில் தலைவியிடம் தெரிவித்தேன். அவரும் இப்படியேதான் அபிப்பிராயப்பட்டு, "என்ன பிரமாதம் எட்டு அணு கூடக் கொடுத்து நாம் நமது ஆதரவைக் காட்டி நம் சகோதரியை உற்சாகப்படுத்த வேண்டாமா? அவசியம் செய்யவேண்டும்" என்று கூறினர். டிஸம்பர் முதலிலேயே நாம் எல்லோரும் பணத்தை அனுப்பிவிட்டால், அவர்களுக்கு உத்ஸாகமாகவிருக்குமல்லவா? (லக்ஷ்மியின் புருஷன் வருகிருர்.)

அவர்:—இங்கேயும் இதுதான் பேச்சா! இத்தனை நேரம் ஆபீஸிலும் இதுதான் வார்த்தை. காகிதமும், அச்சிடும் மையும், பைண்டு செய்யும் நூல் முதல் சகலமும் விலை ஏறி யிருக்கும்பொழுதும் நமக்கு இதுவரையில் கொடுத்து வரும் கதையை அளவுக்குக் குறையாது கொடுக்கிருர்கள். இதில் தனிப் புத்தகம் போடுவதென்றால் எத்தனை செலவாகும் தெரியுமா? ஆகையால், எங்க ஆபீஸிலும் சில சந்தாதாரர்கள் இருக்கிருர்கள்; அவர்கள் எல்லோரும் இதைப்

பற்றிப் பேசிக்கொண்டு, டிஸம்பர் முதலிலேயே சந்தாவையும் பொன்விழா நாவலுக்கான 8 அணுவையும் தங்களுடையதை அனுப்புவதுபோல் சினேகிதர்களேயும் சேர்த்து அனுப்ப வேண்டுமென்று பேசிக்கொண்டார்கள். இனம் இனத்தைச் சேரும் என்பது பழமொழி. அதுபோல் உங்கள் சகோதரிக்காக நீங்களும் சில சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுத்து உதவ யோசிப்பது மிகவும் போற்றத்தக்கதே யாகும். அதோ உங்கள் கிளப்பு காரியதரிசி பார்வதியம்மாள் வருகிறுர்கள்.

பார்வதி :— என்ன விசேஷம்? லக்ஷ்மி, ஸரஸ்வதி ஆகிய இருவரும் ஒன்ருகப் பேசுகிறீர்களே! விஷயமென்ன?

லக்ஷ்மி :—பேஷ்! அப்படிக் கேளு. லக்ஷ்மியும் ஸரஸ்வதியும் இருக்கும்போது பார்வதி இல்லாமலிருப்பது மூளியாகவன்ருே இருந்தது. உன்னிடம் நாங்களே வர நினைத்தோம். நீயே வந்துவிட்டாய். ஜகன்மோகினிக்குப் பணம் அனுப்பிவிட்டாயா!

பார்வதி :—இன்னுமில்லை லக்ஷ்மீ! பண்டிகைகள் வந்தால் செலவுக்குக் கேட்கவேண்டுமா! டிஸம்பர் மாதத்தில் நாம் எல்லோரும் ஒன்ருகச் சேர்த்தனுப்பினுல் ஒரே செலவாகப் போய்விடும். என் சினேகிதிகளான மிஸஸ் மேரி ஜோஸப்பும், மிஸஸ் அப்துல்லாவும்கூட ஒன்ருக அனுப்பச் சம்மதித்துவிட்டார்கள். ஆகையால் 5 பேருடைய சந்தாவும் பொன்விழா நாவலுக்கான தொகையும் சேர்த்து (Rs. 10/-) பத்து ரூபாயை மணியார்டராகவோ, போஸ்டல் ஆர்டராகவோ அனுப்பி, நமது வாழ்த்தையும், மோகினிபால் கொண்ட அன்பையும் தெரிவித்துக் கடிதம் எழுதிவிடலாம். இந்த உபகாரம்கூடச் செய்யாவிட்டால் எப்படி?...நேரமாகிறதே. கிளப்புக்கு வரவில்லையா?—என்ருள்.

---

# பயமுறுத்துகிருர்கள்!

(V. M. ஸ்ரீனிவாஸன் M. A., B. L.)

லாவண்ய சர்மா :—என்ன மிஸ்டர் நித்தியானந்தம்! ஏது ஞாயிற்றுக்கிழமை கூட ரேடியோவுக்கு லீவு கொடுத்திருக்கிறீர்? ரிப்பேரா அல்லது அறுத்துப்போய் விட்டதா?

நித்தியானந்தன் :—அதை ஏன் கேட்கிறீர்? ரிப்பேரும் இல்லை. அறுப்பும் இல்லை. பயம்தான். வேறென்றுமில்லை.

லா :—என்ன...என்ன! பயமா? ரேடியோ கேட்க பயமா?-எனக்கு ஒன்றுமே விளங்கவில்லையே!

நி :—ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமே இல்லை. பயம்தான். அடிக்கடி என்னைப் பயமுறுத்துகிருர்கள்.

லா :—யார் உம்மை அப்படி சங்கீதம்கூடக் கேட்கக்கூடா தென்று பயமுறுத்துகிறார்கள் ?

நி :—யாரா ? பாடுகிறவர்களேதான். நீர் நல்ல புண்ணிய சாலி. உமக்கு இந்த உபத்திரவமே இல்லை.

லா :—விளங்கத்தான் சொல்லுமே ! எந்த பீரங்கிகள் உம்மை பயமுறுத்துகின்றன ?

நி :—பீரங்கிகள் மாத்திரமில்லை. "பிக் பென்" குரலுடைய வர்கள் சிலர், குழந்தைகள் சிலர் ஆக பலர் தங்களுடைய சங் கீதத்தைக் காற்றில் விட்டு, நமது ஸெட்டின் வாயிலாக நமக்கு அனுப்பி ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். "ரேடியோவை மரி யாதையாக நிறுத்திவிட்டுச் சௌக்கியமாக இருக்கப் பிரியப்படு கிறாயா ? அல்லது ஐந்தே நிமிஷத்தில் உனக்குத் தீராத தலைவலியை அனுப்பட்டுமா ?" என்று அவர்களுடைய சங்கீதம் பயமுறுத்து கிறது. பணத்தைக்கொட்டி ஒரு ஸெட்டை வாங்கி ஏதோ ஓய்வு நேரத்தில் நல்ல பொழுதுபோக்க இனிய சங்கீதம் கேட்கலாம் என்றால், நமக்கு அடிக்கடி வரும் இப்பேர்ப்பட்ட பயமுறுத்தல் களினால் நம் ஓய்வு நேரத்தை வீணாக்குவது போதாது, நமது ரேடியோ ரிஸீவரும் நீண்ட ஓய்வு எடுத்துக்கொள்ளவுந்தான் ஏற்படுகிறது. அல்லது நமக்குப் பரிச்சயமில்லாத சங்கீதத்தை வடக்கேயிருந்தும், அயல்நாடுகளிலிருந்தும் கேட்க வேண்டியிருக்கிறது.

லா :—அப்படி என்றால் நம் தென் இந்திய சங்கீதத்தில் ஒரு மாதத்திற்கு ஒரு பத்து கச்சேரிகூடவா சிறந்ததாக அமைவதில்லை ?

நி :—ஆமாம். அநேகமாக அப்படித்தான் நடக்கின்றது. இல்லாவிடில் வேறொரு விசித்திரம். ஒரே நாளில் ஒரே சமயத்தில் இரண்டு சிறந்த கச்சேரிகளை ஒலிபரப்புகிறார்கள். என்ன செய்வது?

லா :—குழந்தைகளுக்கு, பெண்மணிகளுக்கு என்றெல்லாம் தனி நிகழ்ச்சிகள் நடக்கின்றனவாமே, அவைகள் எப்படி ?

நி :—நான்தான் முதலிலேயே சொன்னேனே ! "குழந்தை களுக்குச் சக்தி குறைவு ; வயது வந்தவர்களுக்கே பலம் அதிகம்" என்றதெல்லாம் இப்போது பொய்யாகிவிட்டது. தலைவலியை உண்டாக்கும் சக்தி அவர்களுக்கும் அபரிமிதமாக விருக்கிறது. பெண்கள் ப்ரோக்ராமும் பெரும்பாலும் அதிருப்தியாக இருப்ப தாகவே அடிக்கடி சொல்லிக்கொள்கிறார்கள்.

லா :—நீர் சொல்வதைப் பார்த்தால், நான்கூட ரேடியோவில் பாடலாம் போலிருக்கிறதே.

நி :—தாராளமாய், எவ்வளவோ மேன்மையாய்ப் பாடலாம். ஒரு முழம் நீளம் பெயர் வைத்துக்கொண்டு கர்ணகடூரமாக சிலர் பாடுகிறார்களே அதைவிட நீர் என்ன குறைந்துவிட்டீர் !

லா :—ஆகையால் நீர் சொல்வதை யெல்லாம் பார்த்தால், மெஜாரிட்டி ப்ரோக்கிராம் அடாஸ் என்று ஏற்படுகிறது.

நி :—அதிலென்ன சந்தேகம்? இசைத்தட்டு சங்கீதம் ஒரு தலை வேதனை. போட்ட பிளேட்டுகளையே திரும்பித் திரும்பிப் போடுவது. வீட்டிலுள்ள ப்ளேட் உபத்திரவம் போதாதென்று அலுத்துப் போன பாட்டுகளைத் திரும்பத் திரும்பக் கேட்கவேண்டுமாம். இதில்லை யென்றால், நாடகம், விகட நாடகம் என்று பெயர் வைத்து சில அர்த்தமற்ற சரக்குகளை நம் தலையில் கட்டுகிறார்கள். கலைவிருந்து, இசைவிருந்து என்றெல்லாம் எதிர்பார்த்தால், அநேகமாக தலை வலிதான் விருந்து வைத்து அழைக்கப்படுகிறது. தென்னிந்திய இசை விருந்து ஒன்றுமில்லாத இந்த நிலையில் உண்மையில் ஆறுதலளிக்கும் விருந்தாக ஒன்று அமைந்தது.

லா :—அதென்ன அப்பேர்ப்பட்ட ஸ்பெஷல் விருந்து?

நி :—அதுதான் "பெண்டாங்குலர் கிரிகெட் நியூஸ்" பம்பாய் ரேடியோவின் கிரிக்கெட் ஒலிபரப்பு மிகவும் ஆனந்தத்தைக் கொடுத்தது. மிஸ்டர் டெலியார்கான் அவ்வப்போது வெகு விரிவாகவும், உணர்ச்சி ததும்பும்படியும், விமரிசையாக நமக்கு நிலைமையைத் தெரியப்படுத்தியது நாம் நேரே பார்ப்பது போன்ற மனத் திருப்தியை அளித்தது. சமீபத்தில் இனி அம்மாதிரி நிகழ்ச்சியுமில்லை. பத்து ப்ரோக்ராம் நடுவில் ஒன்றிரண்டு சிறந்ததாகத் தேறினால் உண்டு. இல்லையேல் எலக்ட்ரிக் சப்ளை கம்பெனிக்கு எதிர்பார்க்கும் வரும்படி வராது. நமக்கு ஒருவித ஏமாற்றமென்றால், அவர்களுக்கு ஒருவித ஏமாற்றம்!

லா :—அப்படியானால் உம் அபிப்பிராயம் எப்பொழுதும் பிரபலஸ்தர்களே பாடவேண்டும், பேசவேண்டும், நடிக்கவேண்டும்; அமெச்சூர்கள் முன்னுக்குக் கொண்டுவரப்படக் கூடாதென்பதா?

நி :—அப்படிக் கேளும். கலையுலகத்தில் புது நபர்கள் வருவதை வரவேற்கத் தயாராயிருக்கிறேன். ஆனால், உண்மையில் சரக்கு இருந்தால்தானே மதிப்பு? உண்மையில் வித்வத்திருந்தால் கலையை அலக்ஷியம் செய்ய நான் முன்வரமாட்டேன். ஏதோ சிலவற்றைத் தவிர அனேகம் அதிருப்திகரமாகவிருக்கின்றன என்பதே எனது குறை. இது நியாயமானதில்லையா?

லா :—சென்ற ஒரு மாதத்தில் மதராஸிலும், திருச்சியிலும் நல்ல ப்ரோக்ராம் ஒன்றுகூட இல்லையா?

நி :—வெகு குறைவுதான். நீர் கேட்பதைப் பார்த்தால் பெரிய வித்வான்கள் கச்சேரிகூட நன்றாயில்லை யென்று நான் சொல்வதாக நினைக்கிறீர்போலத் தோன்றுகின்றது. நான் இதுவரை குறிப்பிட்டது முழுதும் மற்ற ப்ரோக்ராம்களைப்பற்றிதான். இனிமேல் அவ்வப்பொழுது நான் கேட்கும் நிகழ்ச்சிகளைப்பற்றி என் அபிப்பிராயத்தைக் குறித்துவைக்கிறேன்; நாம் சந்திக்கும்போது உமக்குப் படித்துக் காட்டுகிறேன். அப்போது ஏதேனும் நிலைமையில் அபிவிருத்தியிருந்தால், நாம் சந்தோஷப்படலாமல்லவா?

# 10

சீதாவின் விடுதியிலிருக்கும் அலங்கோலத்தைக் கூறத் திறமன்று. மென்னியை இறுகப் பிடித்த அதிர்ச்சியில் சீதாவுக்குப் பேசவே முடியாது கண்கள் பிதுங்கியதுபோலாகித் தண்ணீர் பெருகுகிறது. நளினியின் ஆத்திரத்தில் அவள் அந்தச் சண்டாளனைக் காட்டிக் கொடுத்துவிடத் துணிந்துவிட்டதை யறிந்த சீதா பேச வாயெழாததால், சமிக்ஞையால் நளினியைச் சாந்தம் அடையும்படியும், சொல்லிவிடாதே என்றும் தெரிவித்தாள்.

சீதாவின் நாத்தனார்கள், “என்ன ஆபத்துடியம்மா! நளினீ! உன் சித்தப்பன்கூட ஊரிலில்லையே!” என்று கத்திக்கொண்டு ஓடி வந்தார்கள். இந்த வார்த்தைகள், ரகுநாதனின் காதில் விழுந்ததும் காளகோடி சர்ப்பத்தின் சீற்றத்தைக் கேட்டதுபோல் தவித்துப் போய் சீதாவின் கழுத்தைப் பிடித்திருந்த பிடியைவிட்டு ஒரே ஓட்டமாக ஓடி “நளினீ! இந்தக் கூண்டைவிட்டு நீ பறந்து போய்விட முடியாது. ஞாபகமிருக்கட்டும்” என்று கூறிக்கொண்டே மறைந்த பயங்கரம் நளினியின் மனத்தில் குண்டு பாய்வதுபோல் பாய்ந்தது.

சீதா மெல்லச் சமாளித்துக்கொண்டு பேச வாயெடுத்தாள். அவள் மனத்தில் பெரும் போராட்டம் நிகழ்கிறது. ‘உன் புருஷனைக் காட்டிக்கொடுத்தால் பதித்துரோகியாகிவிடுவாய். காட்டிக் கொடுக்காதே!’ என்று பயமுறுத்துகிறது. மற்றொருபுறம் ‘கணவனாயினும், பெற்ற மகனாயினும், தாயாராயினும் தவறு செய்தவர்களைத் தண்டிப்பதுதான் கடமை’ என்று கூறுகிறது. எதற்குத் தான் கட்டுப்படுவது என்று தோன்றாமல் சில விநாடிகள் தத்தளித்தாள்.

ஓடிவந்த ஆட்கள், பின்புறமாக ரகுநாதன் குதித்து ஓடுவதைப் பார்த்ததும் ‘திருடன் அதோ! அதோ! அதோ!’ என்று அவனையே துரத்திக்கொண்டு ஓட ஆரம்பித்தார்கள். ரகுவிற்கு என்ன செய்வதென்று தோன்றாமல், தனது நிலைமையும், தான் அகப்பட்டுக் கொண்டிருக்கிறதையும் எண்ணும்போது அவனை யறியாத பெருந் திகிலும், பயமும் திடும்திடும் என்று தோன்றி நடுங்கச் செய்தது. தன் வேலைக்காரர்கள் கையில் தான் அகப்பட்டுக்கொள்ளும் வயிற்றெரிச்சலைவிடத் தான் எங்காவது விழுந்து உயிரை விட்டுவிடலாமென்றுகூட நினைத்தான்.

ஆனால் தன்னை அவமானப்படுத்தி உதாசினம் செய்து திட்டிய தன் மனைவியைப் பழிக்குப்பழி வாங்கும்பொருட்டுத் தான் சாகக்

கூடாதென்கிற எண்ணமும் கூடவே உண்டாகியது. உடனே ஒரு யோசனையும் தோன்றியது. அம்மாதிரி செய்யத் துணிந்து ஒரு பள்ளமான புதருள்ள இடத்தில் விழுந்துவிட்டு, 'ஐயோ! அம்மா! அடித்துப் போட்டுவிட்டு ஓடுகிறார்களே! திருடனைப் பிடிப்பார் இல்லையா?' என்று தானே கத்திக்கொண்டு முனக ஆரம்பித்தான்.

மரங்கள் அடர்ந்திருக்கும் இடமாகையால் முன்பு ஓடுகிற ஆள் விழுந்தது சரியாகத் தெரியவில்லை. ஆனால் அவன் போடும் கூச்சலும் முக்கலும் முனகலும் நன்றாகக் கேட்டவுடன் அங்கு ஓடிப்போய் பார்க்கையில் தம் எஜமானே தாறுமாறாகக் கிடப்பதை யறிந்ததும் 'ஐயையோ! எஜமான்! இதென்ன அலங்கோலம்?' என்று கூறியவாறு தூக்கினார்கள்.

ரகு:—ஐயோ! ஐயையோ! மண்டை கிழிஞ்சு போச்சே! திருடன் என்று கூச்சல் கேட்டதும் நான் எழுந்து வருகையில், என்னையே மடக்கி அடித்துத் தள்ளிவிட்டு ஓடுகிறார்கள். பிடியுங்கள் பிடியுங்கள்—என்று கூறமுடியாது கூறினான்.

இதற்குள் ரகுவின் அக்காமார்கள் இந்த விஷயம் தெரிந்து இங்கு ஓடிவந்து, 'ஐயையோ! ரகு! இதென்ன கண்றாவி?' என்று பெரிய ஒப்பாரி வைத்து அழ ஆரம்பித்தார்கள். அங்கு, கும்பல் கூடிவிட்டது. சிலர் திருடனைத் தேடிக்கொண்டு ஓடினார்கள். சிலர் ரகுவைத் தூக்கிக்கொண்டு போய் அவனுடைய தனி அறையில் கிடத்தினார்கள். அப்போது நல்ல நடு நிசியாகையால் சிலர் உபசார வார்த்தைகள் கூறிவிட்டு, அவரவர் வீட்டிற்குப்போய் படுத்துவிட்டார்கள். ரகுவுக்குப் பலமாக ஒத்தடங் கொடுப்பதும் மருந்து கொடுப்பதுமாக சிகிச்சைகள் நடக்கின்றன.

தோட்டத்தில் கிடக்கும் சீதாவும் நளினியும் இவன் செய்துள்ள சாகஸத்தை யறிந்து பதறிப்போய், பின்னும் ஆத்திரமுண்டாகித் தவித்தார்கள். தாங்கள் என்ன செய்வதென்று தோன்றாது குழம்பிப் போய்விட்டார்கள். நளினிக்கு மட்டும் ஆத்திரம் அடங்கவில்லை. பொங்கிப் பொங்கி வருகிறது. சீதாவுக்கும் குமுறுகிறது. ஆனால், அவள் மனம் தன் புருஷனைக் காட்டிக்கொடுக்க இஷ்டமில்லாது தவித்தது. இருவரும் பகவானைப் பிரார்த்தனை செய்து கொண்டே இருந்தார்கள்.

நளினி அடித்த அடியின் பாதையும், சீதா திட்டிய அவமானத்தின் வேகமும் ஒன்று கூடி ரகுவை வதைத்துக்கொன்று கொண்டிருந்தது. எனினும் அவன் நடிக்கும் நாடகத்தில் எழுந்திருக்கக்கூடாத நிர்ப்பந்தம் உண்டாகிவிட்டதால், பேசாமல் கிடந்தான். மனம் மட்டும் பதைக்கிறது. அது, சீதாவைப் பழிவாங்கத் துடிக்கிறது.

மறுநாள் காலையில் மங்களம், வழக்கம்போல் விடிவதற்கு முன்பே ஆற்றுக்குக் குளிக்கப் போய்விட்டாள். குளித்து, காபி பலகாரம் தயார் செய்துகொண்டு சீதாவின் விடுதிக்குச் சென்றாள். அங்கு சீதாவைக் காணவில்லை. நளினியிடம் பேசிக்கொண்டிருப்பது உண்டாகையால் அங்கு சென்று பார்த்தாள். அங்கு இருவரையும் காணவில்லை. அவர்கள் வழக்கமாக இருக்கக்கூடிய எல்லா இடங்களிலும் போய்ப்பார்த்து விட்டாள். எங்கும் காணாததால் அவளுக்குத் திகில் பிடித்துக்கொண்டது.

உடனே ஓடி வந்து வீட்டிலிருப்பவர்களிடம் 'நளினி, சீதா இருவரையும் காணவில்லையே! எங்குச் சென்றிருப்பார்கள் ? நடக்கக்கூட முடியாத முடமாகிய அந்தம்மாள் எங்கே போயிருக்கக் கூடும் ?' என்றாள். இதைக்கேட்டதும் ரகு, தீயை மிதித்தவன் போல் திடுக்கிட்டான். நடிக்கும் நாடகத்தைக் கூட மறந்து எழுந்து சீதாவிருக்கும் தோட்டத்து விடுதிக்கு ஓட்டமாக ஓடினான்.

அங்கு நளினியும் சீதாவும் இருந்த இடங்கள் காலியாயிருந்ததுடன் துணிமணிகள் தாறுமாறாகக் கிடந்ததைப் பார்த்ததும் திடுக்கிட்டான். நளினியின் விடுதிக் கதவில் "தன்வினை தன்னைச் சுடும் ; ஓட்டப்பம் வீட்டைச் சுடும்." "இரக்கமற்ற த்ரோகிகளுக்கு இறைவனே கூலி கொடுப்பான்" என்ற வாக்கியங்கள் மட்டும் எழுதி இருந்தன.

அதைப் படித்ததும் ரகுவைத் தூக்கி வாரிப்போட்டது. "என்ன மாயம் இது ? இரு கால்களும் மொண்டியாகிய சீதா எப்படி மறைந்திருக்கக்கூடும் ? நளினி எங்கு போயிருப்பாள் ?" என்று பெரிய குழப்ப முண்டாகி விட்டது. அவள் முதல்நாள் சொல்லியபடி ஆற்றில் விழுந்து விட்டாளோ என்ற சந்தேகமும் தோன்றியதால் அவன் உண்மையிலேயே கலங்கிக் குழம்பி அதிர்ச்சியால் தாக்கப்பட்டு விட்டான்.

ஒரு வேளை ஆற்றங்கரையில் போய்ப்பார்க்கலாம் என்று ஓடினான். அங்கு ஒருவிதமான தகவலும் தெரியவில்லை. ஆற்றங்கரையில் இதுபற்றி எப்படி புலன் விசாரிப்பது என்று தெரியாது திகைத்துப் பின் வீடு வந்து சேர்ந்தான். "இருவரும் காணவில்லையே! எங்குச் சென்றிருக்கக் கூடும் ? இது ஏதோ விபரீதந்தான் நடந்திருக்கவேண்டும்" என்ற கலவரமும் குழப்பமும் மீண்டும் வீட்டைச் சுற்றிக்கொண்டன.

"ஏண்டா ரகு ! இதென்னடா அநியாயம் ? ராத்திரி வீட்டில் இருந்தவர்களைத் திடீரென்று விடியற்காலை எப்படி காணமல் போய் விடும் ? இது கண்கட்டு வித்தையாக வன்றோ இருக்கிறது ?

நாளையதினம் அந்த வடக்கத்தியார்கள் பெண்ணை அழைத்துக் கொண்டு வந்து விடுவார்களே! அது சமயம் சீதாவும் நளினியும் காணவில்லை என்கிற வதந்தி ஊரறிந்து விட்டால் காரியம் கெட்டு விடுமேடா! நொண்டியோ, முடமோ, அவள்பாட்டில் கிடந்தது கவலை இல்லாதிருந்தது. இப்போது என்ன செய்வது?" என்று ரகுவின் சகோதரிகள் நாக்கை இழுத்துப் பேசினார்கள்.

ரகு, தான் என்ன பதில் சொல்வது என்று தெரியாது விழித்தான். பிறகு, "சரி உங்கள் பெரியதனத்தை ஆரம்பித்து விட்டீர்களா? நான் இப்போது அவசரப்படாதே என்று முட்டிக்கொண்டேனே! அதைக் காதில் வாங்காது ஏன் இந்தப் பதட்டம்? எக்கேடாவது கெட்டுப்போங்கள். வடக்கத்தியார் வந்தால் நீங்கள் தெற்கத்தியார் சேர்ந்து கட்டியழுங்கள். நான் எங்காவது தொலைந்துபோய் விடுகிறேன்" என்று சிள்ளென்று அவர்கள்மீது சீறி விழுந்தான்.

அதே சமயம் வீதியில் தந்திப்பியூன் ஒருவன் வந்து "தந்தி" என்றான். ரகு அதைப் பயந்தவாறு வாங்கிப் படித்தான். 'நாளைய தினம் நாள் நன்றாக இல்லாததால் இன்று மாலையே அவ்விடம் வந்து சேருகிறோம்' என்று வடக்கத்தியார் அடித்திருப்பதைக் கண்டு ரகு வெறுத்தான். அவன் சகோதரிகளிருவரும் "ஐயையோ! இதென்னடா எழவாயிருக்கிறது! நீயோ இத்தனை நாள் இல்லாத பிடிவாதம் இன்று செய்கிறாய்! நாங்கள் என்னடா செய்வது?" என்று கல்யாணப் பேச்சை எடுக்கும் போதே மூக்கைச் சிந்திப் போட்டுக்கொண்டார்கள்.

ரகு :—இதென்ன தொந்தரவு? ஊரில் இந்த ரகஸியம் தெரியுமானால், அதற்கு என்ன பதில் சொல்வது? ஓடி விட்டார்கள் என்பதா! இறந்து போய் விட்டார்கள் என்பதா! இதற்கென்ன வழி? அதைச் சொல்லு பார்க்கலாம்.

சகோ :—ஐயோ! சொல்வதென்னடா இருக்கு? இன்று அவர்கள் வந்து பார்த்துவிட்டுப் போகும் வரையில் எப்போதும் போல் பேசாதிருந்து விடுவோம். பிறகு என்ன செய்ய வேண்டுமோ பார்த்துக்கொள்ளலாம். இப்போது தடங்கல் செய்யாதே! அந்தப் பெண்ணுடைய பங்குக்கு மட்டும் முப்பதாயிரம் (30,000) ரூபாய் வருகிறதாம். சற்று குரூபியானால் என்ன பிரமாதம்? நம்ப பிச்சு சரியான நல்ல இடமாகப் பார்த்துத்தான் சொல்லி இருக்கிறான். ஆகையால் சற்றுப் பேசாமலிரு—என்று அடக்கி அமர்த்தி விட்டார்கள். ரகுவும் மெல்லவும் போகாது, விழுங்கவும் மாட்டாது தவிக்கிறான். காணாமல் போன அகதிகளின் கதி என்ன வாகியதோ! யார் அறிவர்?

## 11

படகோட்டி, இந்த விஷயத்தை அறிந்த உடனே அவன் மனம் புது வேதனைகொண்டு பதைக்கின்றது. "என் மீது இத்தகைய பிரேமை கொண்டு இப்பெண்மணி இருப்பதை நான் ஜாடையால் கூட அறிய முடியாதவனாய், என் போக்காக இருந்துவிட்டேனே! எனக்காக உயிரையும் விடத் துணிந்திருக்கும் பெண்ணை நான் எப்படி காப்பாற்ற முடியும்? என் மனத்தினால் நான் என்ன பிரயத்தனம் செய்தாலும் அந்தப் பெண்ணை என் தங்கை போலத் தானே நெஞ்சு எண்ணுகிறது. இந்த விபரீத சோதனைக்கு நான் என்ன தான் செய்வேன்? என் மனத்தைப் பறிகொண்ட நளினியை நான் எப்படி மறப்பேன்? என் கடமையை எப்படிச் செய்வேன்?" என்று தவிக்கிறான்.

ஒன்றுமே தோன்றவில்லை. பிறகு அங்கு நிற்க மனமின்றி வீட்டிற்கு வந்தான். அப்போது பார்வதி, தன் மகனின் க்ஷேமத்தைக் கோரியும், அவனுக்கு விரைவில் விவாகமாகித் தான் கண்டு களித்துப் பின் தான் சாகவேண்டும் என்று பிரார்த்தித்தும் கடவுளின் படத்திற்கு முன்பு கண்ணீர் உதிர்த்தபடியே வேண்டிக் கொண்டிருப்பதைப் பார்த்தான்.

அன்னையின் களங்கமற்ற பேராவலின் இதய பூர்வமான உணர்ச்சியைக் கண்டதும் அவன் மனம் குழம்பியது. "சீச்சி! மாதா பிதாக்கள் இன்புறுவதும், சுகமடைவதும் தம்தம் மக்களாலன்றோ? என்னால் என் தாயார் அடைந்த பலன்தான் என்ன? அவள் இதயத்தின் வேகத்தை நான் உணர்ந்திருந்தும் அதைத் திருப்தி செய்யாது வருவது தருமமா? மகனின் கடமையாகுமா? ஒரு வேளை அவள் கண்ணை மூடி விட்டாளாயின், நான் பெற்ற தாயைத் திருப்தி செய்யாத மாத்ரு துரோகியாகவன்றோ ஆகி விடுவேன்?

மனித காயத்தை எப்படி நம்பமுடியும்? திரைப்படத்திலும், கோவிலிலும், நாடகத்திலும் ஒருத்தியைப்பார்த்து அன்பு கொள்வதற் கொப்ப, ஒரு தகவலும் தெரியாத நளினியை நான் எண்ணித் தான் பலனென்ன? அதைச் சொல்லித்தான் பலனென்ன? அவள் என்று கிடைப்பாள் என்று நான் காத்திருப்பது? என்னருமை அன்னையின் கண் மூடிய பிறகு நான் நளினியை ஒருகால் கண்டு பிடித்தால் கூட என் அன்னையைத் துரோகம் செய்த எனக்கு மனச்சாந்தி உண்டாகுமா? இல்லை. இல்லை. ஒரு நாளும் அந்த

வாழ்க்கை இன்ப வாழ்க்கையாக இருக்க முடியாது. என்னுல் எதிர்பார்க்கும் சந்தோஷத்தை என் தாயார் அனுபவிப்பதே இனி எனக்குப் பேரானந்தம். என் சுய நலத்தை நான் என்னருமைத் தாயாருக்காகத் தியாகம் செய்வது ஒரு பெரிதா! ஒருகாலும் பெரிதேயல்ல.''

என்றெல்லாம் தனக்குள் எண்ணியபடியே ஓர் தீர்மான மான முடிவைச் செய்துகொண்டு, தட தட வென்று உள்ளே போய், தன்தாயாரின் இரு பாதங்களிலும் சாஷ்டாங்கமாக விழுந்து காலைப் பிடித்துக்கொண்டு நமஸ்காரம் செய்தவாறு, "அம்மா! என்னை மன்னித்து விடு. இதுகாறும் நான் உன்னுடைய ஆவலை அறிந்திருந்தும் அதைப் பூர்த்தி செய்யாதிருந்துவிட்டதற்கு மனம் வருந்துகிறேன். அம்மா! உன் இஷ்டப்படியே நீ விரும்பியுள்ள பெண்ணை நான் மணந்துகொள்கிறேன்.''

என்று பசுபதி கூறும் கடைசி வாக்கியம் பார்வதியை ஆனந்த சாகரத்தில் மூழ்கிவிடச் செய்தது. அவளுடைய சந்தோ ஷத்தில் சிறு குழந்தையைப்போல் 'தா தை' என்று குதிக்கவும் மெய் மறந்து கூச்சலிடவும் கிளம்பிவிட்டாள். மகனைத் தூக்கி அணைத்துக்கொண்டு அவன் தலையில் தன் முகத்தைப்பதித்து "தம்பீ! தம்பீ! நான் ஆதிமுதல் பட்ட கஷ்டங்களெல்லாம் விடிந்துவிட்டது போன்ற ஆனந்தம் உண்டாகி என்னைப் பரவசப்படுத்துகிறதடா கண்ணே! உன் ஒருவனுலல்லவா நான் அடையவேண்டிய இன்பம் முற்றும் இருக்கிறது. உன்னுடைய கிராம சீர்திருத்தத்தினுலும் நீ செய்த உபதேசங்களினுலுமே அபிவிருத்தியடைந்து மகா புத்தி சாலியாய் விளங்கும் கமலாவை நான் மருமகளாய் அடைவதற்குப் பரம சந்தோஷப்படுகிறேன். உன் பதிலையே எதிர்பார்த்துக்கொண் டிருக்கும் அண்ணனுக்கு இப்போதே நான் சொல்லிவிட்டு வரு கிறேன்'' என்று கூறிக்கொண்டே குழந்தையைப்போல் ஓடினுள்.

தாயாரின் பூரிப்பைப் பார்த்ததும் பசுபதிக்குத் தன் கடமை யைச் செய்துவிட்டதற்குச் சந்தோஷமுற்றுனே யன்றி, நளினியின் நினைவுமட்டும் பளிச்சென்று தோன்றி வதைக்காமல் இல்லை. எனி னும், அதை மறந்துவிடவே அவன் மனம் பெரிதும் விரும்பி முடிவு செய்தது. தன் தாய் தோத்திரம் செய்த அதே கடவின் படத் தருகில் நின்று, ''என்னை ஏன் இம்மாதிரி சோதிக்கவேண்டும்? முதலில் அப் பெண்ணையும் அந்த ஆசையையும் ஏன் எனக்குக் காட்டி வதைத்து வேடிக்கைப் பார்க்கவேண்டும்? நீ எழுதி இருக்கும் சட்டம் ஒன்ருக விருக்க வேறு ஆட்டத்தை ஏன் ஆட்டி னுய்?'' என்று நிந்தாஸ்துதியாக நினைத்துக்கொண்டே இருந்தான்.

ஓட்டமாக ஓடிய பார்வதி, "அண்ணு! அண்ணு!" என்று பஜனை கோவிலை நோக்கிக் கூவிக்கொண்டே போனுள். அங்கு நாட்டாண்மைக்காரர் வழக்கம்போல் பத்திரிகை படித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார். பார்வதியின் அழைப்பைக் கேட்டுச் சந்தோஷத்துடன், "என்ன பார்வதி! தம்பி வீட்டிற்கு வந்துவிட்டாரு?" என்று அவர் முடிக்கு முன்பே, பார்வதி நடந்த விவரங்களைக் கூறிவிட்டு, "இதைத் தெரிவிக்கவே ஓடிவந்தேன். என்ன அண்ணு! நான் வரட்டுமா?" என்ருள்.

நாட்டாண்மைக்காரருக்கும் அபாரமான சந்தோஷமுண்டாகியது. பஜனைக் கோவிலில் ஸ்வாமியைத் தரிசனம் செய்துகொண்டு பார்வதியையும் கூடவே அழைத்துக்கொண்டு தன் வீட்டிற்குச் சென்று தன் மனைவியை அழைத்து விஷயத்தைத் தெரிவித்தார்.

அப்போதுதான் மாந்தோப்பில் தன் சினேகிதையுடன் பேசிக்கொண்டிருந்து வீடு திரும்பி வரும் கமலாவின் காதில் இந்தச் சந்தோஷ சமாசாரம் விழுந்த உடனே சாம்ராஜ்ய பட்டாபிஷேகம் செய்துகொண்ட சக்கரவர்த்தினியைப்போல் களித்தாள். கடவுள் தனக்குப் பெரும் கிருபை செய்துவிட்டதை எண்ணி உள்ளம் பூரித்தாள். சந்தோஷத்துடன் உள்ளே கதவின் பின்னுல் நின்ருள்.

நாட்டாண்மைக்காரர் தன் மனைவியை அழைத்து, "நாகம்மா! முதலில் உன் சம்மந்தியம்மாள் சுப செய்தியைத் தெரிவித்ததற்காக கற்கண்டு கொண்டுவந்து கொடு" என்ருர்.

உடனே அந்தம்மாள் உள்ளே சென்று பழம் தாம்பூலம் முதலியவை வைத்துத் தட்டுடன் திரும்பிவந்து பார்வதியம்மாளிடம் கொடுத்து நகைத்தாள். நாட்டாண்மைக்காரரும் நகைத்துக் கொண்டே "ஓகோ! சம்மந்திக்கு நிச்சய தாம்பூலமே கொடுத்து விட்டாயா! பேஷ்! ரொம்ப சந்தோஷம்" என்ருர்.

பார்வதி, தன் மனத்திற்குள் பொங்கி வரும் ஆனந்த உணர்ச்சியுடன், "குழந்தை கமலா எங்கே?" என்ருள். நாகம்மாள் கமலாவை அழைத்தாள். 'ஆடும் மயிலோ, அன்னப் பேடோ!' என்று வியக்கும்படி கமலா பூரிப்பே மயமான முகத் தோற்றத்துடன் வந்து, ஒருவரும் சொல்லாமலேயே தனக்கு மாமியாகப்போகும் பார்வதிக்கு நமஸ்காரம் செய்து பின்னர் பெற்ரேரையும் வணங்கினுள்.

பார்வதி கட்டுமீறிய சந்தோஷத்துடன், கையிலிருக்கும் தட்டை கமலாவிடம் கொடுத்து விட்டு அவளை அன்போடு தட்டிக் கொடுத்துத் தடவி, திருஷ்டிகழிப்பதுபோல் கையை அவள் கன்னத்

தில் வைத்துச் சுடுக்கினாள். பார்வதியின் அன்பைக் கண்டு எல்லோரும் பூரித்தார்கள். பிறகு பார்வதி விடைபெற்றுக்கொண்டு தாம்பூலத்தட்டுடன் வீட்டிற்கு வந்தாள். "தம்பீ! இதோ பாத்தியா! நிச்சய தாம்பூலம் வாங்கிக்கொண்டு வந்து விட்டேன்" என்று காட்டினாள். பசுபதி கஷ்டப்பட்டுப் புன்னகையை முகத்தில் வரவழைத்துக்கொண்டு தாயாரை மகிழ்விக்க ஒரு கல்கண்டையும் எடுத்து வாயில் போட்டுக்கொண்டான். அன்னையின் மனம் அபாரமாய்ப் பொங்கியது. மேலே இனிப்பும் உள்ளே கசப்புமாக அவன் மனம் இருப்பதை யார் அறிவார்கள்?

## 12

பின்னும் சில தினங்களுக்குள்ளேயே அந்தக் கிராமத்தின் சகலருடைய ஒத்துழைப்புடனும் ஆடம்பரத்துடனும் பசுபதிக்கும் கமலத்துக்கும் கல்யாணம் நிறைவேறிவிட்டது. தன் தாயாரைத் திருப்தி செய்ததாகவும், தனக்குப் பலவிதங்களிலும் உதவி புரிந்துவரும் நாட்டாண்மைக்காரருக்கும் தன்மீது அன்பு கொண்டு உயிரையும் விடத் தயாராயிருந்த கமலாவுக்கும் தான் செய்யவேண்டியக் கடமைகளைச் செய்துவிட்டதாகவும் மனத்தில் ஒரு சந்தோஷமும், சாந்தியும் அடைந்தானேயன்றிப் பரிபூர்ணமான திருப்தியையோ, ஆனந்தத்தையோ அவன் அடையவில்லை.

"ஒரு மனிதனுடைய வாழ்க்கையையும் ஒரு படகையும் ஒப்பிட்டுப் பார்த்தால், வித்தியாசம் என்ன இருக்கிறது? மனிதனும் காடு முரடான தன் வாழ்க்கையைக் கடமையுடன் நடத்திச் செல்கிறான். எந்தெந்த சமயம் யார் யாரைத் திருப்திசெய்யவேண்டுமோ அப்படி திருப்தி செய்வதில் தன் சுயநலத்தை வெறுத்தும், விரும்பியும் பல வகையில் செய்கிறான்.

அதேபோல் படகும் பயங்கரமான கடலிலும் ஆற்றிலும் பலவிதமான நீர்வாழ் ஜந்துக்களுக்கும், காற்று மழைக்கும் மத்தியில் சென்று தன் கர்த்தனுகிய படகோட்டி விதியின்படி இறக்குகிறவர்களை இறக்கி, ஏற்றிக்கொள்ளவேண்டியவர்களை ஏற்றிக்கொண்டு இக் கரைக்கும் அக் கரைக்கும் கொண்டு விடுகிறது. அதில் மனித வாழ்க்கையில் காணும் தன்னலக் கலப்பற்று, பிற நலத்திற்காகவே அது உழைக்கிறது. அத்தகைய படகையோட்டும் நானும் ஏன் பிற நலத்திற்காகவே உயிர் வாழக்கூடாது?" என்றெல்லாம் பசுபதி

எண்ணித் தன் மனத்திற்குச் சற்றுச் சாந்தியை உண்டாக்கிக் கொண்டான்.

கமலாவின் மனம் எண்ணியபடி முடிந்ததற்காகக் களிக்கும் களிப்பையும், தன் தாயார் தன்னையும் கமலாவையுங் கண்டு பொங்கி வரும் ஆனந்த உணர்ச்சியுடன் சந்தோஷப்பட்டுப் பூரிக்கும் பூரிப் பையும் கண்டு அவன் என்ன எண்ணினான்? பயங்கரமான பெரிய ஆற்றைக் கடந்து, அக்கரை சென்றுவிட்ட பிரயாணிகள் எப்படி சந்தோஷித்துக் குதிக்கிறார்களோ அதைப்போல, தன் தாயாரையும் மனைவியையும் எண்ணினான். படகு, தன் கடமையைச் செய்து விட்டதாகச் சந்தோஷப்படுவதுபோல் தானும் ஒரு படகுதான் என்றும் எண்ணினான்.

தன் மனத்திலுள்ள அந்த ரகஸ்யம் அவன் இதயத்துடன் மறைந்தது. அதைத் தன் தாயாருடனாவது, மனைவியுடனாவது மூச்சு விடவில்லை. அந்த ஒரு பரம ரகஸ்யமான பாறை நெஞ்சை அழுத்திய போதிலும் அவன் அதை ஒரு அணுவளவும் வெளிக் காட்டாமலும் கமலாவிடம் வித்தியாச மில்லாமலும் சமயோசிதமாக நடந்து வருவதைத் தவிர வேறு என்ன செய்யமுடியும்?

விவாகமாகி ஒருமாத காலமாயிற்று. அன்று வானம் காலை முதல் கண் திறக்கவே இல்லை. மப்பும் மந்தாரமும் சிலுசிலுப்பான காற்றும், அதன் ஆரவாரமும் பலமாக விருந்தது. சூரிய பகவானே கிளம்பவில்லை. படகோட்டி வழக்கம் போல் காலை ஆகாரத்தை முடித்துக்கொண்டு கிளம்பினான்.

பார் :—(மெல்ல மகன் முன்பு வந்து) தம்பீ! இன்னிக்குக் கூட படகு ஓட்டப் போகிறாயா? வானம் சரியாயில்லையே! இன்று போகாமலிருக்க முடியாதா?—என்பதற்குள், கமலா அங்கு வந்து, "அம்மா சொல்லுகிறபடி நீங்க இன்று போகாவிட்டால் என்ன? மழை கட்டாயம் வரும் போலிருக்கிறதே!" என்று அடக்கமாய்க் கூறினாள்.

படசு :—கமலா! என்னை நிறுத்தும்படி அம்மாவிடம் நீ சொல்லி யனுப்பியதையும் நான் கேட்டுக்கொண்டு தான் இருந்தேன். அம்மா! ஒரு மனிதனுக்கு, தான் கொடுத்த வாக்கைப் பரிபாலிப் பது தான் முக்கிய கடமை. இன்று ஒருவர் மிகவும் அவசரமான ஆபீஸ் காரியமாய்ப் போகவேண்டுமாம். நேற்றிரவே பேசி அட் வான்ஸூம் கொடுத்துவிட்டார். ஆகையால், அவரைக் கொண்டு போய் விட்டுவிட்டு வந்துதான் ஆகவேண்டும். தடங்கல் சொல்லா தீர்கள். மழையும் வராது; ஒன்றும் வராது. கடவுள் இருக்கிறார்—என்று கூறிவிட்டுப் போய்விட்டான்.

அதற்குமேல் என்ன செய்வார்கள் பாவம்! ‘வானத்தைப் பார்த்தால் பயங்கரமாக விருக்கிறது. மழை வராமலிருக்க வேண்டுமே! மழையில் அகப்பட்டுக் கொண்டால் உடம்புக்கு ஆகாதே!’ என்று வருந்தியவாறு கடவுளை வேண்டித் துதித்தபடியே மாமியும் மருமகளும் உள்ளே சென்றார்கள்.

ஆற்றங்கரைக்குச் சென்ற படகோட்டி படகை விடத் தயாராக வைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான். பேசியிருந்த ஆஸாமியும் வந்து சேர்ந்தார். படகோட்டியை நோக்கி, “ஏண்டாப்பா! காற்றும் கருமேகமும் பயப்படுத்துகின்றதே! சௌகரியமாகப் போய்ச் சேருவோமா, உனக்கென்ன தோன்றுகிறது? நானோ அவசரமாகப் போய்ச் சேரவேண்டும். மழை வருமா?” என்றார்.

பட:—ஐயா! ‘மழைபெய்வதும் குழந்தை பிறப்பதும் மகா தேவனுக்குக்கூடத் தெரியாது’ என்பார்கள். கடவுள் மீது பாரத்தைப் போட்டுவிட்டு நாம் செல்வோம். பிறகு அவன் இருக்கிறான். படகில் ஏறுங்கள். உங்களைக் கொண்டுபோய் விட்டுவிட்டு நான் திரும்பி வருவதற்கு வெகு நேரமாகிவிடும்—என்றான்.

பிறகு பிரயாணியும் சாமான்களும் ஓடத்தில் ஏற்றப்பட்டதும் கடவுளைத் தோத்திரம் செய்தவாறே படகை ஓட்டத்தொடங்கினான். அவன் வழக்கம்போல் கவியரசர் பாரதியார், பக்திப் பெருக்கால் மனங் குழைந்து, “கண்ணம்மா—என் காதலி” என்று பாடியுள்ள பாடல்களில் ஒன்றாகிய,

சுட்டும் விழிச்சுடர் தான், — கண்ணம்மா!
சூரிய சந்திரரோ?
வட்டக் கரிய விழி, — கண்ணம்மா!
வானக் கருமை கொல்லோ?
பட்டுக் கருநீலப் — புடவை
பதித்த நல் வயிரம்
நட்ட நடு நிசியில் — தெரியும்
நக்ஷத் திரங்க ளடீ!

என்ற பாட்டை வெகு இனிமையாகப் பாடிக்கொண்டே படகை யோட்டினான். பிரயாணியும் படகோட்டி பாடும் பாட்டை ஆனந்தமாகக் கேட்டுக்கொண்டே சென்றார். நேரம் செல்லச் செல்ல வானத்தில் இருந்த சிறிது வெளிச்சமும் மறைந்து இருள் கப்பிக்கொண்டதுடன் பயங்கரமான இடியும், பகல் வேளையிலேயே கண்களைப் பறிக்கும் மின்னலும், பெரிய இரைச்சலுடன் ‘புஸ் புஸ்’ என்று சர்ப்பத்தின் கொடிய சீற்றத்தைப் போன்ற சப்தத்துடன் காற்றும் சுழற்றிச் சுழற்றி அடிக்க வாரம்பித்தது.

படகு வெகுதூரம் சென்றுவிட்டது. காற்று, பலமாக ஆரம்பித்தபிறகு படகு நிலைக்காமல் ஆட்டங் கொடுத்துவிட்டது. சுழன்று சுழன்று தத்தளிக்க வாரம்பித்ததைப் பார்த்ததும் படகிலுள்ள பிரயாணிக்குக் குலைநடுக்கம் எடுத்துக்கொண்டது. ஏதோ பேராபத்துத் தனக்கு வந்துவிட்டதாகவே எண்ணி நடுங்கியவாறு "படகோட்டி! என்னப்பா செய்வது? படகு கவிழ்ந்து விடுமா? பலமான மழையும் வந்து விட்டதே! எனக்கு மிகவும் பயமாக விருக்கிறதே! என்ன செய்வது?" என்று கேட்டான்.

படகோட்டிக்கும் உண்மையில் குலைநடுக்கம் எடுத்துக் கொண்டது. 'ஆண்டவனே! ஒரு ஆபத்துமில்லாது எங்களைக் காப்பாற்று. உலகத்திலேயே பிரளயம் வந்து விடுமோ என்று நடுங்கும்படி ஓயாது பெய்த பெரும் மழையைக் கோவர்த்தன கிரியைக் குடையாகப் பிடித்துக் காத்த கோபாலா! இச் சமயம் இவ்வேழைக்கு இரங்கி, ஒரு மணி நேரம் இந்தப் பயங்கரங்களை நிறுத்தி, எங்களை ஒரு கரையில் சேர்த்துவிட உன்னால் முடியாதா? வழியே தெரியவில்லையே! வெள்ளங்கூட வந்துவிடும்போல விருக்கிறதே! சர்வலோக சரண்யா! தீனபந்தோ! தயாஸிந்தோ!" என்று வாய் ஓயாது தோத்திரம் செய்துகொண்டே 'எங்காவது ஒரு துறை அகப்படுமா?' என்று பார்த்தான்.

கண்ணுக்கு எட்டிய வரையில் ஒன்றுமே புலப்படவில்லை. எங்கும் இருள் சூழ்ந்திருப்பதுடன், 'ஜோ' வென்று கொட்டும் மழையில் வழியே மறைத்து விட்டதுபோலாகிவிட்டது. பிரயாணி கேட்பதற்கு என்ன பதில் சொல்வான் பாவம்? "ஐயா! பகவான் இருக்கிறான். அவனை நம்பி இருக்கிறோம். அவன் நம்மைக் கைவிடமாட்டான். காப்பாற்றுவான். தைரியத்தை இழக்காமல் அவனைப் பிரார்த்தனை செய்யும்" என்று கூறினனே யன்றி, அவன் மனத்தில் நம்பிக்கையே சிறிதுமின்றி அடியோடு அற்றுவிட்டது.

காற்று நாலா புறமும் சுற்றிச் சுற்றி அடிப்பதால் படகு நிலைப்பதற்கு வழியே அற்றுவிட்டது. படகோட்டி என்ன சாமர்த்தியமாகச் சமாளித்துப் பார்த்தும் பயன் படாமல் போய் விட்டது. 'எந்த க்ஷணத்தில் படகு கவிழ்ந்து விடுமோ! என்ன ஆபத்து வருமோ!' என்று தவிக்கிறான். 'நடுக்கடலில் அகப்பட்ட மரக்கலம் போல் தவிக்கிறேன்' என்று பல நாவல்களில் படித்த வசனங்கள் படகோட்டியின் கண்முன்பு பிரத்யக்ஷமாகத் தெரிந்தன. இடைவிடாது பகவானைத் துதி செய்தவாறே தவிக்கிறான். "இரு கையும் விட்ட திரௌபதியின் கதியைப்போல் என் கதி ஆகிவிட்டதே! ஏ கிருஷ்ணா! தருணியின் மானத்தைக் காத்த ரக்ஷகா! இவ்வேழையின் படகை நம்பி ஏறியுள்ள பிரயாணியின் பிராணனைக்

காப்பாற்று. என்னைச் சோதிக்காதே! என்னைக் கைவிடாதே!" என்று மெய்ம்மறந்து வேண்டிக்கொண்டே இருக்கையில், தடா ரென்று ஒரு ஓசை கேட்டது. அவ்வளவுதான்; படகு முற்றிலும் ஜலம் நிறைந்து அப்படியே கவிழ்ந்துவிட்ட கோரக் காட்சியைக் கூறவேண்டுமா? அந்தோ! பரிதாபம்! பரிதாபம்!

படகோட்டிக்கு நன்றாய் நீந்தத் தெரியும். படகிலிருப்பவருக் குத் தெரியாது. படகோட்டி தைரியத்தை இழக்காமல் பிரயாணி யைக் கெட்டியாக முதுகில் தொத்தச்செய்து கட்டிக்கொண்டான். புரட்டி யடிக்கும் காற்று மழையில் இவ் விள வாலிபன் பெரிய ஆளைத் தூக்கிக்கொண்டு எத்தனை நேரந்தான் நீந்தலடிக்க முடியும்? கை சோர்ந்தது. கண்கள் இருண்டுவிட்டன. அந்தப் பிரயாணிக்கு மூர்ச்சையே போட்டுவிட்டது.

படகோட்டிக்கு நினைவு தன் உடம்பிலிருக்கும் வரையில் நீந்தினான். பிரளய காலத்து வெள்ளம்போல் உள்ள நிலைமையில் அதை எதிர்த்துப் போராட எங்ஙனம் முடியும்? தானும் தன் படகை நம்பிய பிரயாணியும் அந்த ஆற்றுக்கு அர்ப்பணந்தான் என்று முடிவு செய்துகொண்ட படகோட்டி நம்பிக்கை இழந்த நிலையில் அப்படியே சவம்போலாகிவிட்டான்.

## 13

பிறகு என்ன நடந்ததென்று அவனுக்கு என்ன தெரியும்? அவன் கண்ணைத் திறந்து பார்க்கும் போது, "நாம் எந்த உலகத்திலிருக்கிறோம்?" என்கிற பெரிய சந்தேக வுணர்ச்சி யுண் டாகி, பிரமித்துப் போய், சுற்று முற்றும் பார்த்தான். "அந்தோ! என்ன ஆச்சரியம்! அவன் மனத்தையும் அவன் கண்களையும் நம்ப முடியாது திகைத்துப்போய்விட்டான்.

சற்றுச் சமாளித்துக்கொண்டு...நான்...நான்...காண்...ப...து ...நீ...ங்களா...நீங்...க...ள்...தானா?...என்று தேகமே நடுங்கிய வாறு நாத் தடுமாறக் கூறினான்.

வெகு சாந்தமும், கம்பீரமும், அன்பும் தொனித்த உணர்ச்சி யுடன் கூடிய குரலில்..."ஐயா! படகோட்டியே! ஆமாம். நீங்கள் காண்பது பொய்யல்ல! கனவல்ல! வெறும் பிரமையல்ல! நானே தான். நீங்கள் படகில் ஏற்றமாட்டேனென்று வெறுப்புற்றும்,

அலக்ஷியமாயும், உதாசீனமாகவும் பேசி நிராகரித்து விட்டுச் சென்ற அதே—பெரிய வியாதியால் பீடிக்கப்படும் கர்மப் பிறவி—மனிதன்தான். வேறு யாரும் இல்லை. நீர் சற்று நிம்மதியடையும். உடம்பை அலட்டிக்கொள்ளாதேயும். சாந்தி பெறும்" என்றான்.

இந்த வார்த்தைகளைக் கேட்ட உடனே படகோட்டியின் உள்ளம் வியப்பினாலும் ஆனந்தத்தினாலும் நெக்குருகியது. பட பட வென்று தேகம் நடுங்கி வெயர்வை வெள்ளம் குபீரென்று பொங்கி வழிந்தோடியது. நாக்குக் குளறுகிறது. அவன், பல நூல்களில் படித்திருக்கும் பாட்டுக்களிற் சில அவனது ஞாபகத்திற்கு வந்தன.

சிறியவ ரொருபிழை செய்யின் மேலவர்
பொறையொடும் பின்னரும் போற்ற லல்லதை
யிறையதும் வெகுள்வரோ யானும் செய்பிழை
யறிவனீ யன்றியே யார தாற்றுவார். —கந்தபுராணம்.

தன்னை யொருவ னிகழ்ந் துரைப்பிற் றானவனைப்
பின்னை யுரையாப் பெருமையோர்—முன்னை
வினைப்பயனு ஞயிற்று வென்றதன்கண் மெய்ம்மை
நினைத்தொழிய நெஞ்சநோ யில். —அறநெறிச்சாரம்.

அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
இகழ்வாரைப் பொறுத்தல் தலை.

மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தான்றன்
தகுதியான் வென்று விடல். —திருக்குறள்.

அத்தனையும் அவன் காணும் சுவர்களில் எழுத்துக்களாகக் கண்ணுக்குத் தெரிவதுபோல் தோன்றின. அப் பாடல்களை வாய் முணுமுணுத்தது. கண்ணீர் ஆறாய்ப் பெருகுகிறது. ஆயாசம் அடிக்கடி வாட்டுகிறது. "ஐயனே! நான் செய்த அபசாரத் திற்குத்தான் கடவுள் இத்தகைய விபத்தைக்கொண்டு புகுத்திச் சோதித்தான். என்னை மன்னிக்கவேண்டும். க்ஷமிக்கவேண்டும்" என்று பேசமுடியாது இழுத்து இழுத்துக் கூறியபடியே, நமஸ் கரிப்பதற்காக எழுந்திருக்கப் போனான்.

பெரியவியாதிக்காரர் படகோட்டியைத் தடுத்து, "அடாடா! எழுந்திருக்காதேப்பா! எழுந்திருக்காதே! உனக்கு உன் சுய நினைவு வர மூன்று நாளாகியதே. இன்று உடம்பை அலட்டிக் கொண்டால், ஆபத்தாக வன்றோ முடியும். உனக்கு ஜுரங் காய் கிறது. சற்று ஓய்வெடுத்துக்கொண்டு மௌனமாக இரு. உன் வாய் பலவித பாட்டுக்களைப் பொழிவதை நான் அறிவேன். என் னிடம் மன்னிப்பதற்கு என்ன சக்தி இருக்கிறதப்பா! எனக்கு உன்மேல் கோபமே இல்லை. என் கர்மாவுக்கு யார்மீது கோபித்து என்ன பயன்?

உள்ளங் கவர்ந்தெழுந் தோங்கு சினங்காத்துக்
கொள்ளுங் குணமே குணமென்க—வெள்ளந்
தடுத்த லரிதோ தங்கரைதான் பேர்த்து
விடுத்த லரிதோ விளம்பு. —நன்னெறி.

என்ற பாட்டையும் நினைத்துப் பாரு. அப்பா! படகோட்டி! வெறும் ஜலத்தை மட்டும் நீந்திப் படகோட்டி மனிதர்களை அக் கரைக்கும் இக் கரைக்கும் சேர்க்கிறான். பகவானாகிய படகோட்டியோ, பயங்கரமான பிறவிக் கடலின் சுழல் காற்றையும் இடியும் படையும் கூடிய பெரு மழையையும் ஜெயித்துப் பிறவிக் கடல் கடந்து மக்களை அக்கரையுடன் அக் கரை சேர்க்கிறான். அவனுக்கு உன் வந்தனங்கள் உரித்தாகட்டும். படகோட்டி! இந்த நிலைமையில் நீ இப்படி பேசுவது கூடாது. பேசாமலிரு" என்று வெகு சாந்தமாகக் கூறினர்.

இதைக் கேட்டதும் பசுபதிக்கு இன்னும் மனம் உருகியது. அம் மனிதரைத் தான் வெறுத்து நிராகரித்ததையும், அவராலேயே தான் காப்பாற்றப்பட்டதையும் அறிந்து உள்ளம் உவகை பூத்தது. ஆயாசத்தால் மௌனமாக விருந்தான். சற்று நேரத்திற்கெல்லாம் மீண்டும் கண் திறந்தான். "ஐயா! நான் எப்படி இங்கு வந்தேன்? என் தாயார்...என் படகு...என்னுடன் வந்த மனிதர்...

பெரிய :—அப்பா, படகோட்டி! பெரும் மழையிலும் வெள்ளத்திலும் எத்தனையோ படகுகள், குடிசைகள், கால் நடைகள் மனிதர்களெல்லாம் அடித்துக்கொண்டு போய்விட்டதப்பா! இயற்கையின் தாண்டவம் விபரீதமாக ஆட்சி புரிந்ததன் அலங்கோலத்தில் நீயும் அடித்துக்கொண்டு வந்து எங்கள் கிராமத்துக் கரையில் ஒரு கொடியில் சுற்றிக்கொண்டிருந்தாய். எங்க தோட்டக்காரன் தான் கண்ணால் பார்த்த ஒவ்வொருவரையும் காப்பாற்றி வந்தான். அவர்களை நான் பார்க்கையில், நீ இருப்பதைக் கண்டு நான் உன்னை மட்டும் என் வீட்டில் கொண்டுவந்து வைத்துக் கொண்டேன். உன் படகு என்னவாயிற்றோ தெரியாதப்பா! உன் தாயாரைப் பற்றிக் கவலைப்படாதே!

பட :—ஆ! என் படகு முழுகிப்போய் எங்கு அடித்துக் கொண்டு போயிற்றோ? உடன் வந்த மனிதர் என்னவானரோ? ஐயா!...நான் வந்து மூன்று நாட்களா ஆகின்றன? ஐயோ! என் தாயார் என்னவானளோ? நான் இப்போது போய்ப் பார்க்க வேண்டுமே!

பெரிய :—ஐயோ! நீ இப்போது போவதாவது? உனக்கு ஜுரம் கடுமையாகக் காய்கிறதே! உன்னுடைய உடம்பைப் பார்த்துக்கொண்டுதானே நீ கிளம்பவேண்டும். அப்பா! பதறாதே.

நீ ஸ்மரணையற்றுக் கிடக்கும் பொழுதும் "அம்மா! அம்மா!" என்று வாய்பிதற்றியதை நான் அறிந்தேன். உன் தாய் உன்னைக் காணுது என்ன தவிப்பாளோ என்றதை நினைத்துத் தான் நான் உன் ஊருக்கு ஒரு ஆளை அனுப்பி உன் தாயாரையே இங்கு அழைத்துக் கொண்டு வரும்படியாகச் சொல்லி இருக்கிறேன்.

பட:—அடாடாடா! இத்தகைய நல்ல மனிதர்கூட உலகத்தில் இருப்பதனுல்தான் மழை பெய்கிறது. க்ஷேமம் நிலவி இருக்கிறது. ஐயா! உமக்கு நான் எப்படித்தான் கைம்மாறு செய்வேன்? என் சரீரத்திலுள்ள தோலைச் செருப்பாகத் தைத்து உமக்குப் போட்டாலும் எனக்குத் திருப்தியாகாதே!

பெரிய:—அப்பா! வீணுக மனத்திற்கு அதிர்ச்சி கொடுக்காதே! கொஞ்சம் கஞ்சி சாப்பிடு. காலை முதல் இன்னும் நீ ஒன்றும் சாப்பிடவே இல்லையே...குழந்தாய்! கஞ்சி கொண்டுவா!— என்றார். உடனே இரண்டு க்ளாஸ் கோப்பைகளில் ஆற்றிய கஞ்சியை எடுத்துக்கொண்டு மின்னல்கொடி வருவதுபோல் வரும் ஒரு பெண்மணியைப் பார்த்ததும் பசுபதி திடுக்கிட்டுப் பிரமிப்படைந்து "யாரு...நளினியா?...நளினி!...நளினி!" என்று மெல்ல இழுத்தாற்போல் தனக்குள் சொல்லிக்கொண்டு இமைகொட்டாது அவளையே பார்த்தான். உடனே தான் விவாகம் செய்துகொண்டு தன்விதி ஒருமாதிரியாக முடிந்துவிட்ட விஷயம் அவனுடைய ஞாபகத்திற்கு வந்ததும் அவனைச் சித்திரவதை செய்து கண்ணில் பிரவாகப் பெருக்கெடுத்துக்கொண்டது போலாகிவிட்டது.

ஒரு க்ஷண நேரத்திற்குள் எண்ணுததும் எண்ணிப் புழுவாய்த் துடித்துத் தவிக்கிருன். நளினியின் பரிசுத்தமான இதயத்துடன் கூடிய முகத்தைப் பார்க்கப் பார்க்க அவன் இதயம் புழுங்கியது. அயர்ச்சியினுல் அப்படியே கண்ணை மூடி விட்டான்.

நளினி பயந்துபோய் "ஐயா! படகோட்டி! கண்ணைத் திறவும். என் இதயத்தில் அமிருதத்தை வார்த்து என்னுயிரைப் புதுப்பிக்கச் செய்த எம்பெருமானுக்கு எனது வந்தனங்களை லக்ஷந்தரம் சமர்ப்பித்தாலும் போதாது. ஐயா! வாயைத் திறவுங்கள். இந்தக் கஞ்சியை மெல்லச் சாப்பிடுங்கள்?" என்று தானே அன்புடன் கஞ்சியை அவன் வாயருகில் கொண்டு வைத்தாள்.

படகோட்டியின் தர்மசங்கடமான நிலைமையும், கடலின் அலைகளைப் போட்டியிடும்படியான பலவிதமான எண்ணங்களும் அவன் மனத்தில் பெரிய மல் யுத்தம் செய்கின்றன. நளினியின் அன்பு மயமான இதயத்தில் கூரிய வேலைப் பாய்ச்சுவதுபோன்ற தன் ரகஸியத்தை அவன் எப்படித் தெரிவிப்பது? "ஐயோ! என்ன செய்

வேன்! இதுகாறும் என் கண்ணில் காட்டாதிருந்தது போல் இனியும் அப்படியே செய்திருக்கலாகாதா? இந்தப் புனிதவதிக்கு நான் என்ன பதில் சொல்வேன்!" என்று தவிக்கிறான். கண்ணும் வாயும் இறுக மூடிவிட்டன. இதைப் பார்த்த நளினிக்கு மிகவும் பயமாகிவிட்டது.

பின்னும் சில விநாடிகள் சென்று, படகோட்டி கண்ணைத் திறந்து பார்த்தான். நளினியின் கண்ணில் நீர்த்தாரைகள் பெருக நின்று தன்னையே நோக்குவதைக் கண்டதும், மீண்டும் பழைய உணர்ச்சிகள் வெள்ளம் போல் பொங்கி, "நளினி! கலங்காதே! நான் உனக்குத் துரோகம் செய்துவிட்டேன். மகாபாவி. நான் மன்னிக்க முடியாத பரம அபராதி. என்னைப்பற்றி நீ நினைக்கவே நினைக்காதே! நான் உண்மையற்றவனாக ஆகிவிட்டேன்" என்று பின்னும் ஏதேதோ சொல்வதற்குள், நளினி தடுத்து, "ஐயா! முதலில் கஞ்சியைச் சாப்பிடும்" என்று கூறிப் பருகச் செய்தாள்.

அந்த ஆயாஸம் தீர்ந்த பிறகு வெயர்வையை நளினியே துடைக்கும் போது அவன் தேகமே சிலிர்த்து நடுங்கியது. "நளினி! வேண்டாம்! நீ என்னைத் தீண்டவேண்டாம். நான் உனக்குத் துரோகம் செய்துவிட்ட பாவி. என்னை விட்டு விடு" என்று அவன் புலம்பிக்கொண்டே கூறினான்.

நளினி:—ஐயா! நீங்கள் துரோகியும் அல்ல. பாவியும் அல்ல. வீணாகக் கவலைப்படாதீர்கள். உங்கள் விஷயங்கள் பூராவும் நான் உங்களுடன் கூடப் படகோட்டும் உங்கள் ஊர் ஆசாமியால் அறிந்தேன். நான் அதற்காகச் சந்தோஷமே படுகிறேன். பொறாமைப் பட்டு நான் வயிறு எரிய வில்லை.

பசு:—என்ன நளினி! நீ எல்லா விஷயமும் அறிவாயா? ஐயோ! என் கல்யாணம்...

நளினி:—ஆம். உமது கல்யாணத்தை மட்டு மன்றி, அதன் கட்டாயத்தையும், உமது மனைவியின் காதலையும், அவள் தகப்பனாரின் விருப்பத்தையும், உமது தாயாரின் பேராவலையும் சகலமும் நான் அறிவேன். ஐயா! உமது கடமையை நீர் தப்பாது செய்து முடித்ததற்காக நான் பெருமையுடன் சந்தோஷப்படுகிறேன். உமது மனைவியைப் பார்க்கவும் அவளுடன் பேசவுங்கூட ஆவல் கொண்டிருக்கிறேன். எனக்கு விஷயத்தைச் சொன்ன அதே படகோட்டியைத்தான் உமது தாயாரையும் உமது பாக்யசாலியான மனைவி கமலாவையும் அழைத்து வரும்படியாக நானே சொல்லியனுப்பி யிருக்கிறேன்.

பசு :—நளினி! நளினி! நீ சொல்வதெல்லாம் உண்மையா?... நான் உண்மையில் உனக்குத் துரோகம் செய்தவ னல்லவா? இத் தகைய துரோகிக்கா நீ பரிந்து பேசுவது?

நளினி:—ஐயா! திரும்பத் திரும்பச் சொல்லுகிறேனே! நீர் ஒருவருக்கும் அணுப்பிரமாணமும் துரோகம் செய்யவில்லை. நீர் இக்காரியம் செய்யாதிருப்பீரானல் பெத்த தாய்க்கும், உபகாரம் செய்த நாட்டாண்மைக்காரருக்கும், உம்மையே எண்ணித்தவிக்கும் உமது மனைவிக்கும் செய்யவேண்டிய கடமையை விட்டு விட்டுப் பெருந் துரோகம் செய்தவராயிருப்பீர். என்னுடைய பாவத்திற்கு நீர் என்ன செய்ய முடியும்? கடவுள் என்னைத் தற்கொலையிலிருந்து காப்பாற்றி என் மாமாவினுல் இங்கு வந்து உங்களைப் பார்க்கும்படி யான பாக்யமாவது உண்டாக்கினரே! அதுவே போதும்.

பசு :—என்ன! தற்கொலையா? என்...எதற்காக தற்கொலை?

நளினி:—எதற்காகவா! உம்...என் கதையே ஓர் தனிக் கதை. பெற்ற பெண்ணைப் போல் வளர்த்த சித்தப்பனே என் கற்பை உரிஞ்ச வந்தான். அக் கொடுமையைச் சகியாது நானும் என் சிறிய தாயாரும் ஆற்றில் விழுந்து உயிர்விடத் துணிந்து, நொண்டி யாகவுள்ள சிறிய தாயாரை மெல்லத் தூக்கிக்கொண்டு நான் ஆற் றுக்கு வந்தேன்.

என் விதி அங்கு எமனுக மாய்க்க வராது காப்பாற்றும் பட கோட்டியாகவே வந்தது. நான் முன்பு தெரிவித்த மனிதன் பட குடன் போய்க்கொண்டிருந்தான். வீணுக அநாயாஸ மரணம் எய்து வதில் பின்னும் பாபம் அதிகமேயன்றி, வேறு லாபமில்லை யாகை யால், என் மாமன் வீட்டிற்குச் சென்று பொதுஜன சேவை செய்து காலத்தைக் கடத்தலாமே என்று என் மனம் துணிந்தது.

உடனே படகில் ஏறி இங்கு வந்து விட்டோம். அந்தப் பெரியவியாதிக்காரர்தான் என் மாமன். ஏதோ கர்மவியாதி அனு பவிக்கிறுரே யன்றி, அவரைப்போல் அவருக்குச் சரிசமமாக நல்ல வரும், குணவானும், படித்த விவேகியும் உலகிலேயே வேறு இல்லை எனலாம். ஆகையால் அவரிடமே அடைக்கலம் புகுந்தோம். சமீ பத்தில்தான் அவருடைய மற்றொரு சகோதரியும் இறந்து விட்ட தால் அவ் விசனத்தை எங்கள் மூலம் ஆற்றிக்கொள்கிறுர். நீங்கள் இனிக் கவலையே கொள்ளவேண்டாம். உங்கள் தாயாரும் மனை வியும் வரட்டும். உங்கள் உடம்பும் குணமாகட்டும். நீங்கள் உங்கள் ஊர் போய்ச் சேர்ந்து சுகமாக விருக்கலாம். இந்த மூன்று நாட்களாக உங்களுக்குப் பணிவிடை செய்யும் புண்ணியம் எனக்குக் கிடைத்ததே என் பாக்யமாகும்—என்று கூறும்போது அவளது கண்களில் கண்ணீர் மளமளவென்று பெருகியது.

இந்தக் கதையைக் கேட்ட படகோட்டிக்கு ஒன்றுமே பதில் கூற முடியாது துக்கம் தொண்டையை அடைக்கிறது. நாத் தடு மாறுகிறது. "நளினீ! உன்னையா உன் சித்தப்பன் பெண்டாள நினைத்தான். பிறகு உங்களை அவன் தேடவில்லையா? நீங்கள் இங் கிருப்பது அவனுக்குத் தெரியுமா?" என்றான்.

நளினி:—அவன் எங்களைத் தேடிப் பழிவாங்கத்தான் எண்ணி னான். ஆனால், பகவானுக்கு அது பொறுக்கவில்லை. ஒரு நிரப ராதியைக் கலங்க வைக்க விரும்பாதது போல் அக் கடவுள் அந்தச் சண்டாளனையே தண்டித்துப் புத்தி கற்பித்துவிட்டார். அவ னுக்குத் திடீரென்று பக்ஷவாதம் உண்டாகி, விழுந்து விட்டானும். அவனது அலங்கோலத்தை அவனுக்குப் பெண் கொடுக்க வந்த வர்கள் கண்டு சிரித்துவிட்டுப் போனார்களாம். அவன் கதையும் அதோடு ஒருவாறு முடிவுக்கு வந்து விட்டது.

பசு:—அடாடா! கலிகாலக் கடவுள் கைம்மேல் பலனைக் காட்டி விட்டார். உன்னை வதைசெய்ய நினைத்தது வீண்போகுமா? முற்பகல் செய்யின் பிற்பகல் விளையு மல்லவா?

இடுக்கண்வந் துற்ற காலை யெரிகின்ற விளக்குப் போல
நடுக்கமொன் றானு மின்றி நகுகதா னக்க போழ்தவ்
விடுக்கணை யரியு மெஃகா மிருந்தழு தியாவ ருய்ந்தார்
வடுப்படுத் தென்னை யாண்மை வருபவந் துறுங்க ளன்றே.

—சீவகசிந்தாமணி.

என்று பெரியார் கூறும் வாக்குப் பொய்யாகுமா? உன் சித்தி எங்கே இருக்கிறாள்?

நளினி:—இங்கேதானிருக்கிறாள். என்னைவிட்டுப் பிரிந்தால், அவள் உயிர் போய்விடும். அவளொரு பரதேசி. நான் ஒரு பரதேசி. ஐயா! ஏதோ பேச்சுப் போகும் வேகத்தில் ஏதேதோ வந்து விட்டது. உங்களுடைய இந்த நிலைமையில் நீங்கள் வெகு ஜாக்கிரதையாக விருக்கவேண்டும். மாமா ஸ்நானத்திற்குச் சென்ற வர் அதோ வந்து விட்டார். அவர் கோபிப்பார். நீங்கள் மனச் சாந்தியாக தூங்குங்கள்—என்றாள். அதே சமயம் அந்த மனி தரும் வந்து விட்டார். படகோட்டியும் வெளிப்பார்வைக்குக் கண்ணை மூடினனே யன்றி, உண்மையில் தூக்கம் பிடிக்குமா? எண்ணாததும் எண்ணித் தவித்தவாறு புரளுகிறான். நளினியின் பொறுமையும் அன்பும் அவனைப் பிரமிக்கச் செய்தன. மாமன் வந்து விட்டதால், நளினியும் பேச்சை நிறுத்தி விட்டாள்.

# 14

படகோட்டியை வெளியில் அனுப்பிவிட்டு உள்ளே சென்றபின் நேரம் ஏற ஏற வானம் இருக்கும்நிலையானது, கமலாவையும் பார்வதியையும் திகில் கொள்ளச் செய்து விட்டது. அவ் விருவரும் கடவுளை வேண்டியபடியே இருக்கை கொள்ளாது தவித்தார்கள். இவர்களைப் பின்னும் தூண்டிவிடுவதே போல் பேரிடியும் மின்னலும் காற்றும் மழையும் வந்து விட்டதும் அவர்களது பிராணன் நிலையில் நிற்காது துடிக்க வாரம்பித்தது.

"ஏதோ பெரிய விபத்துத்தான் மழை ரூபமாக வந்து மூண்டு விட்டது. இந்த ஆபத்திலிருந்து காப்பாற்று என்னப்பனே!" என்று கண்ணீர் விட்டுக் கலங்குகிறார்கள். பொழுது ஏற ஏற முற்றும் கொடிய நரக வாழ்க்கையை நடத்துவதுபோல் நடத்தினார்கள்.

மறுதினம் இயற்கை யன்னை சற்றுச் சாந்த மடைந்தும், படகோட்டி வாராததால், பார்வதியின் சந்தேகம் அதிகரித்தது துக்க சாகரத்தி லாழ்ந்தாள். அவனைப் பற்றித் தகவல் ஒன்றுமே தெரியவில்லை. அன்று செல்ல மறுநாளும் உதயமாகிவிட்டது. படகோட்டியின் வரவு சூனியமாகியது.

"என் மகனுக்கு ஏதோ ஆபத்துத் தான் வந்து விட்டது. அதனால் தான் அவன் வரவில்லை. இனி நான் எதற்கு உயிர்வாழ வேண்டும்? என் பிராணனை மாய்த்துக்கொண்டு இறந்தால்தான் என் மனம் நிம்மதி யடையும்" என்று பார்வதி பிடிவாதமாகக் கதற வாரம்பித்து விட்டாள். நாட்டாண்மைக்காரர் முதலிய பலர் எத்தனை சமாதானங் கூறியும் பயன்படாது போய்விடும்போலிருக்கிறது.

கமலா, குப்புறப்படுத்துப் புலம்புவதை விட்டு எழுந்திருக்கவே இல்லை. இச் சமயத்தில் "கண்டேன் சீதையை, ராகவா" என்று ஸ்ரீ ஆஞ்சநேய ஸ்வாமி கூறியதுபோல், முன் அத்தியாயத்தில் நளினி தெரிவித்த மற்றொரு படகோட்டி வந்து, பசுபதி உயிர்ச் சேத மின்றி க்ஷேமமாயிருப்பதாயும் யாரோ ஒரு குஷ்டரோகியின் பாதுகாப்பில் அவன் தேறி வருவதாயும் அவர்களை அழைத்து வரும்படிச் சொன்னார்களென்றும் கூறியதைக் கேட்ட பிறகே பார்வதிக்கும் கமலத்திற்கும் உயிர் வந்தது.

உடனே அதே படகோட்டியின் படகில் கமலா, பார்வதி, நாட்டாண்மைக்காரன், அவன் மனைவி ஆகிய நால்வரும் பிரயாண

மாகி இங்கு வந்து சேர்ந்தார்கள். பசுபதி கண்களை மூடிக் கணக் கற்ற எண்ணங்களுடன் போராடுகிறான். "கமலாவும் கட்டாயம் வருவாள். அவளைப் பார்த்தால் நளினிக்கு மனம் பதைக்காதா ? உள் ரகஸ்யத்தைக் கமலா அறிந்தால் அவளுக்கு என்ன தோன்றுமோ ? ஏற்கெனவே அவளுடைய சினேகிதை இந்த மர்மத்தைச் சொல்லியிருப்பதால் அவள் என்ன விபரீதம் நினைப் பாளோ ! ஐயோ ! இப்படிப்பட்ட சோதனையை ஏன் கடவுள் காட்டிவிட்டார் ?" எனக் கலங்கியவாறே இருக்கையில், நளினியின் மாமன் போஜனத்திற்குச் சென்றிருந்ததால், நளினி மீண்டும் அங்கு வந்தாள். "ஐயா ! என்ன யோசனை செய்கிறீர்கள் ? உங்க ளுக்கு நான் இன்னொரு சந்தோஷ சமாசாரம் கொண்டுவந்திருக் கிறேன் " என்றாள்.

பசுபதி ஆவலே வடிவாய், "என்ன சமாசாரம் நளினி ! சீக் கிரம் சொல்லு. என் தாயார் வந்தாளா ?" என்று கேட்டான்.

நளினி :—ஐயா ! உங்கள் தாயார் இன்னும் வரவில்லை. வந் தால் அந்தச் சந்தோஷத்தைப் பிறகு தெரிவிப்பேன். இப்போது என்ன செய்தி தெரியுமா ! உங்களுடன் படகில் வந்த பிரயாணி யையும் எங்கள் தோட்டக்காரன் காப்பாற்றி யிருக்கிறான். அவர் தோட்டத்து விடுதியில் இருக்கிறார். அவருக்கு நான் ஆகாரம் கொடுக்கப் போகையில் பார்த்து விசாரித்து உம்முடைய படகில் வந்தவர் என்பதைத் தெரிந்துகொண்டேன். நீங்கள் இங்கு சௌக் கியமாக இருப்பதாக அவரிடம் கூறினேன். அவர் உங்களைப் பார்க்க வேண்டுமென்று விரும்பினார்.

பசு :—ஆ !...அவர் பிழைத்துக்கொண்டாரா ? ஹா ! எத்தனை சந்தோஷமான விஷயம் தெரிவித்தாய் நளினி ! உனக்கு நான் எப்படித் தான் கடமைப்பட முடியும். அவரை நானும் பார்க்க வேண்டுமே !...என் படகு ?...

நளினி :—ஐயா ! உமக்குச் சற்று குணமாகட்டும். பிறகு எல்லோரையும் பார்க்கலாம். உமது படகுதான் என்னவாயிற்றோ ! தகவலே தெரியவில்லை. நீர் நன்றாக இருந்தால், ஆயிரம் படகு செய்து கொள்ளலா மல்லவா ?

பசு :—நளினீ !...நளினீ !...நீ ஏதோ தைரியமாய்ப் பேசு கிறாய். என் மனத்தி லென்னவோ சலடைப்போட்டுச் சலிக் கிறது. நளினீ ! என்மீது கோபித்துக் கொள்ளாதே ! உன் வாழ்க் கைக்குத் துணைவன் ஒருவன் வேண்டாமா ? நீ விவாகம் செய்து கொள்ளவேண்டாமா !

நளினி இதைக் கேட்டதும் சோகம் நிறைந்த தன் கண்களில் நீர் பெருக ஒரு சிரிப்புச் சிரித்தாள். "அன்பரே ! துணைவன்

இல்லாதிருப்பவர்களன்றோ துணைவனைத் தேடவேண்டும். எல்லோரையும் ரக்ஷிக்கும் பரந்தாமன் எனக்குப் பெருந் துணைவனாக விருக்கையில், கல்யாணம் எதற்கு? அந்த உபத்திரவம் எதற்கு? எண்ணிய ஆசை நிராசையாயிற்று. இனி, எனக்கு அக் கவலையே இல்லை. இதைக்கொண்டுதானே நான் ஒரு பரதேசி என்று கூறினேன். அதை மறந்தீர்களா?'' என்றாள்.

பசுபதிக்கு இவ் வார்த்தைகள் கண்ணீரைப் பெருகச் செய்து விட்டன. "நளினீ! நீ சந்நியாசினியா! நீயா!...நீ ஒரு பால சந்நியாசினியா! ஐயோ! சகிக்க முடியவில்லையே! இதற்கு நானல்லவா காரணம். நளினீ! உனக்குத் தகுந்த கணவன்...

நளினி:—சரி! சரி! இனி, அந்த வார்த்தையே வேண்டாம். எனக்குத் தகுந்த கணவன் இனி சாக்ஷாத் ஈசன்தான். அவனைத் தான் நான் மாலையிட்டு விட்டேன். நீர், தயவுசெய்து என் விவாகப் பேச்சை இனி எடுக்கவே வேண்டாம். இம்மாதிரி சொல்வதற்கு என்னை மன்னிக்கவும்.

பசு:—நளினீ! முடிவாகப் பேசிவிடுகிறாயே! வேறு வழி இல்லையா?....நீ மனம் வைத்தால்......

நளினி:—(இடைமறுத்து) ஐயா! மீண்டும் என்னை க்ஷமிக்க வேண்டுகிறேன். உங்கள் கருத்தை யறிந்தேன். நீங்கள் இரண்டு பெண்டாட்டிக்காரன் வாழ்க்கையில் அவதியுற நான் சகியேன். என் மனதுக்கும் அது ஒவ்வாது. ஒருவர் பாக்யத்தை யொருவர் மாற்றவோ, அபகரிக்கவோ முடியாது. என் விதி இவ்வளவு தான். என்னை இது விஷயத்தில் என் இஷ்டப்படியே விட்டு விடுங்கள். இனி நான் பந்தமற்றப் பரதேசி. நமது ரகஸியம் நம்முடன் மறையட்டும். எக்காலத்திலும் வெளியிடவேண்டாம்.... ஆ...அதோ மூன்று ஸ்திரீகளும் ஒரு ஆடவரும் வருகிறார்கள். அவர்கள்தான் உங்கள் தாயாரும் மனைவியுமோ!...நான் போகிறேன்.

பசு:—வேண்டாம். வேண்டாம்...நளினீ! நீ இங்கேயே இரு...என்றான்.

இதற்குள் பார்வதி ஆனந்தக் கண்ணீர் பெருக ஓட்டமாக ஓடிவந்து, "என்னப்பனே! பசுபதி! என் வயிற்றில் பாலைக் கறந்தாயா? என்னுயிரைப் பிழைக்க வைத்தாயா?'' என்று கூறிக் கொண்டே அவனைக் கட்டித் தழுவினாள்.

கமலமும் ஆனந்தக் கண்ணீர் பெருக, பசுபதியின்மீது வைத்த விழியை வாங்காது ஊமையைப்போல் நின்றாள். பசுபதியும் "அம்மா! உன் பாக்கியந்தான் இந்த கண்டத்தில் நான் தப்பியது. அந்தப் பிரயாணியும் தப்பிப் பிழைத்து விட்டாராம். எல்லாம் கடவுளின் திருவருள்தான். அம்மா! இன்னொரு முக்கிய சமாசாரம்.

எந்த மனிதரை நான் இகழ்ந்தேனே அதே மனிதரால் காப்பாற்றப் பட்டு உயிர் பிழைத்தேன். நீ அன்று சொல்லியதுபோல் அவரிடம் நான் மன்னிப்பும் பெற்றுவிட்டேன்" என்று கூறி, அந்தப் பெரு வியாதி மனிதனைக் காட்டினன்.

பார்வதியும் கமலாவும் அம் மனிதனுக்கு நமஸ்காரத்தைச் செய்து, "ஐயா! குழந்தை தெரியாத்தனமாக முன் செய்துவிட்ட குற்றத்திற்குப் பிராயச்சித்தமாக இந்த விபத்தை அனுபவித்துவிட்டான். உம்முடைய கையினலேயே அவன் பிழைக்கும்படியாகக் கடவுள் செய்துவிட்டார். தாங்கள் மன்னிக்கவேண்டும்" என்று பார்வதி வேண்டினள்.

அம் மனிதன் சாந்தமாகப் பேசத் தொடங்கி, "அம்மணீ! என் மனத்தில் நான் வித்தியாசமாகவே நினைக்கவில்லை. உங்கள் மகனுக்கு ஒரு குறைவும் இல்லை. பகவான் காப்பாற்றுவார்" என்று கூறினர். பார்வதியின் மனம் பூரித்தது.

பெரியவர், "அம்மணீ! நீங்கள் முதலில் போய் ஆகாரம் செய்து விட்டு வாருங்கள்....சுப்பையா! இவர்களுக்குச் சாப்பாடு போடு" என்றார். எல்லோரையும் அவரே உள்ளே அழைத்துச் சென்றார்.

பசுபதியின் மனம் துக்கத்தால் பொங்குகிறது. அவன் நளினி எங்கிருக்கிறாள் என்று சுற்றுமுற்றும் பார்த்தான். அவள் மனம் என்ன பதைக்கிறதோ? என்ன நினைக்கிறாளோ! என்ற கவலையால் குழம்பிப்போய்த் தவிக்கையில், நளினி அங்கு தோன்றி, ஓர் தேவதையைப்போல் அவன் முன்பு நின்றாள்.

அவள் முகத்தில் ஒருவிதமான கலக்கமோ, பொறுமையோ ஒன்றுமில்லாது அன்புருவாய்ப் பிரகாசித்த தெனினும் கண்ணீர் மட்டும் குளம்போல் தேங்கிக் கிடந்ததை அவளால் தடுக்கமுடியவில்லை. பசுபதி சற்றும் எதிர்பாராதவிதம் நளினி அவனது இரு கைகளையும் பிடித்துக்கொண்டு, "அன்பரே! இதுவே கடைசிதரம்; ஆகையால், மன்னிக்கவேண்டும். உங்கள் மனைவி வெகு லக்ஷணமாயும் லக்ஷ்மீகடாக்ஷம் நிரம்பிய முக தேஜஸுடனும் இருப்பதைக் காண வெகு சந்தோஷமா யிருக்கிறது. அந்தப் பாக்கியசாலியின் தரிசனம் இன்று எனக்குக் கிடைத்ததே எனது பாக்கியமாகும்.

ஐயா! நான் உம்மிடம் வேண்டுவது ஒரே ஒரு வரன்தான். நமக்குள் ஏற்பட்ட இந்த பந்தத்தின் ரகஸ்யத்தை எந்தக் காலத்திலும் எவரிடத்திலும் நீர் சொல்லவே கூடாது. நம்முடைய இதயத்துடன் அது வெந்து சாம்பராகட்டும். அவ்வளவுதான் நான் பிரார்த்திப்பது. இந்த ஊரிலேயே நான் இருந்தால், எப்போதேனும் துறையில் உம்மைப் பார்க்கும் பாக்கியம் கிடைத்தால், அப்போது என் ஆத்மா சாந்தி யடையட்டும். இல்லையேல் அதுவும் வேண்டாம்.

நீங்கள் உமது மனைவியிடம் வெகு அன்யோன்யமாய் அன்பாய் இருங்கள். இந்தப் பாவியை அடியோடு மறந்துவிடுங்கள்" என்று கூறியபடியே அவன் கைகளைக் கண்ணில் ஒற்றிக்கொண்டு சில விநாடிகள் பதுமைபோல நின்றாள்.

பசுபதிக்குப் பேசமாட்டாது வாயடைத்துவிட்டதுபோல் கண்ணீர் பெருகத் திணறினான். நளினியின் வார்த்தை அவன் நெஞ்சை அள்ளித் தின்று அவனைச் சித்திரவதை செய்தது. மெல்லச் சமாளித்துக்கொண்டு நளினியின் மோவாயைப் பிடித்துக்கொண்டு "நளினீ! இதுதான் முடிவா! இதற்குமேல் ஒன்றுமில்லையா?... நளினீ! நளினீ! நான் இப்படி சொல்வதற்குக் கோபிக்காதே... ஒரு வேளை கமலாவே இதற்கு முனைந்து...

என்று முடிப்பதற்குள், "அன்பரே! போதும்; போதும். நிறுத்தும். பகவானே வெறுத்துத் தள்ளியபிறகு வேறு முயற்சியா? இனி அதைப்பற்றிக் கனவு காணவேண்டாம். ஒருத்தியின் வாழ்வைக் குலைக்கவோ, பங்கெடுக்கவோ நான் தயாராக இல்லை. தயவு செய்து இனிமேல் அப் பேச்சை எடுக்கவே வேண்டாம். என் கோரிக்கையையும் மறுக்கவேண்டாம். என் விதி என்னை எம்மட்டும் கொண்டு போகிறதோ போகட்டும். இதற்காக நான் என் மனத்திற்கு விரோதமாயும், உலகிற்கு நகைப்பாயும் போட்டி விவாகத்தில் ஒருபோதும் பிரவேசிக்கவே மாட்டேன்.

பசு:-நளினீ! இதோ பாரு. மனித இயற்கையின் தன்மையையும், யௌவனமென்கிற அரக்கன் ஆட்டிவைக்கும் விபரீத போக்கையும், இந்தப் பாழும் உலக மனிதர்களின் வம்பு, வசை, கொடுமை முதலிய பாணங்களையும் நீ அறியாது பேசுகிறாயே! உன்னால் மனத்தை...

நளினி:—ஹா... அன்பரே...'நீ மனத்தை யடக்கியாள சக்தி பெற்றிருக்கிறாயா?' என்றுதானே கேட்க வந்தீர்கள். ஐயோ! என் பரிசுத்தத்தை நீங்கள் நம்பவில்லையா! சோதிக்கிறீர்களா! சந்தேகிக்கிறீர்களா! (கண்ணீர் மளமள வென்று ஓடுகிறது.)

பசு:—(திடுக்கிட்டுப்போய்) ஐயோ! நளினீ! நளினீ! நெருப்பையும் சந்தேகித்துச் சோதிப்பது உண்டா! நான் அம்மாதிரி எண்ணவே இல்லை. அப்படி கனவிலும் எண்ணமாட்டேன். நளினீ! வருந்தாதே. சத்தியமாக நான் ஹிருதய வேகத்தை அறிவேன். ஒரு அணுப்பிரமாணமும் சந்தேகங்கொண்டு நான் பேசவில்லை. இந்த பாழும் உலகில் நீ அறியாச் சிறுமி...

நளினி:—அன்பரே! நான் முதலிலேயே சொல்லியதை மறந்தீரா! நான் ஓர் சந்நியாசினி. என் சிறிய தாயார் ஓர் சந்நியாசினி. எங்களுக்குத் துணை பகவான்தான். என் மன உறுதி பிறழும்படி என்னைக் கடவுள் சோதிப்பாரானால் அடுத்த நிமிடம் என் சவத்தை

எந்த மூலை முடுக்குகளிலாவது காணலாம். இதுவே எனது வைராக்கியத்தின் முடிவு. நீங்கள் என்னைச் சந்தேகிக்காமல் பரிபூர்ணமாக நம்பினால் அதுவே போதும். அதுவே என் ஜென்மத்திற்கு சாபல்யமாகும்—என்று கூறமாட்டாது கூறியவாறு, தேம்பித் தேம்பி அழுதுவிட்டாள்.

"ஹா!...என் இதய ராணீ! என் அன்பு தேவதையே! உன்னை நான் விகல்பமாக எண்ணினால், உடனே நான் அழிந்துவிடுவேன். நளினீ! அழாதே; அழாதே! என்னால் இந்தக் கண்ணீரைக் கண்டு சகிக்கவே முடியவில்லை. என் உயிர் தவிக்கிறது. நளினீ! என் இதயம் பிளந்துவிடும்போல் இருக்கிறதே. நான் என்னசெய்வேன்!" என்று தன்னை மறந்து கூறியபடியே பசுபதி ஒரே தாவாகத்தாவி நளினியின் முகத்தோடு முகம் பதித்து ஆனந்த உணர்ச்சியில் தோய்ந்துவிட்டான். நளினியும் தன்னை விடுவித்துக் கொள்ளமாட்டாது குழம்பிப்போய் அப்படியே சில விநாடிகள் மெய்ம்மறந்து போய்விட்டாள்.

பிறகு ஒருவாறு சமாளித்துக்கொண்டு, "ஹா! இதென்ன தப்பு செய்துவிட்டோம். அன்பரே! க்ஷமிக்கவும், புத்தியின் மாறுபாட்டம். அன்பின் புசல் காற்று சுழற்றி அடித்துவிட்டது. அதோ! அவர்கள் வருகிறார்கள்போலிருக்கிறது. நான் போய்விடுகிறேன். இதுவே நமது கடைசி சந்திப்பாகவும் ஆகிவிட்டது. இனி, உமது பணிவிடைகளை உமது தாயாரும் மனைவியும் செய்வார்கள். ஆதலால், அந்தப் பாக்கியமும் இதோடு முடிவாயிற்று. நான் போகிறேன்" என்று கூறிக்கொண்டே, க்ஷணநேரத்தில் மாயமாய் மறைந்து போய்விட்டாள்.

பசுபதிக்கு எங்கும் இருள் அந்தகாரம்போல் சூழ்ந்து சூன்யமாகத் தோன்றியது. கண்ணீரைத் துடைத்துக்கொண்டு குப்புறப் படுத்துவிட்டான். அவன் தாயார் முதலியோர் போஜனத்தை முடித்துக்கொண்டு வந்தார்கள். அவர்கள், பசுபதி ஆயாஸத்தால் தூங்குகிறான் என்று எண்ணிப் பேசாதிருந்தார்கள். அவன் மனத்திலுள்ள போராட்டத்தையும் வேகத்தையும் யார் அறிவார்கள்? பகவானுக்குத்தான் வெளிச்சமன்றோ?

ஒரு ரூபாய்க்கு 3 நாவல்கள்

| | |
|---|---|
| உளுத்த இதயம், | தனி விலை ரூ. 1-6-0 |
| மகிழ்ச்சி உதயம் | முன்பண மனுப்பினால் |
| வத்ஸகுமார் | தபால் செலவு இனாம் |

# எனது நன்றியறிதல்

அன்புமிக்க சகோதர சகோதரிகளுக்கு,

சென்ற இதழில் தெரிவித்ததுபோல், நமது பொன்விழா நாவல் வெகு துரிதமாக அச்சாகிக்கொண்டு வருகிறது. "ஆத்மசக்தி" என்று பெயர் கொண்ட அந்த நாவல், அடுத்த 17-வது ஆண்டு ஆரம்ப (1940 ஜனவரி) சஞ்சிகையுடன் விற்பனைக்குத் தயாராகி விடும் என்பதைச் சந்தோஷத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

புது வருடத்தில் மோகினிச் செல்வி, உங்களை மகிழ்விக்க "உணர்ச்சி வெள்ளம்" என்ற நாவலைத் தாங்கி வருவாள்.

எற்கெனவே, புது வருஷச் சந்தாவுடன் பொன்விழா நாவலுக்கும் சேர்த்துப் பணமனுப்பியதோடு, வாழ்த்துக் கடிதங்களும் அனுப்பியுள்ள பல அன்பர்களுக்கு, எனது மனப்பூர்வமான நன்றியறிதலுடன் கூடிய வந்தனத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

17-வது ஆண்டில் பல புதிய அம்சங்களுடன் நமது மோகினியை வெளியிடத் தீர்மானித்திருக்கிறோம்.

மற்ற அன்பர்களும் அடுத்த இதழுக்குள், தம்தம் ஆதரவைக் கொடுத்து மோகினியை ஆசீர்வதிக்கவேண்டுமாய்க் கோருகிறேன்.

நன்றியுள்ள,

**வை. மு. கோதைநாயகி**

---


## "ஆத்மசக்தி" என்னும் பொன்விழா நாவலில்

## சில அதிகாரங்களின் தலையங்கங்கள்.

1. ஒப்பிலாப் பக்தியும், ஒற்றுமைக் குடும்பமும்.
2. அன்புக்குமுன்பு அனைத்தும் துரும்பு.
4. உண்மைக்குத் தாழ்வும், உலோபிக்கு வாழ்வும்.
5. நீதியற்றோருக்குப் பரிசு பாதரக்ஷை.
7. ஆத்திரத் தீயின் ஆரம்ப விதை.
8. புகழ் தேவதையின் புனித தரிசனம்.
17. வஞ்சக நேசமும், லஞ்சத்தின் பாசமும்.
18. பிரேமைக் கயிற்றில் பிணைத்த பக்ஷிகள்.
19. சந்தேக மேகம்—சந்தோஷ மாரி.

**விலை ரூ. 1—4.** **சந்தாநேயருக்கு எட்டே அணாதான்.**

# ஆத்ம சக்தி



உத்தமமான ஈச்வர பக்தியும், ஆத்மசக்தியும், பரிசுத்த சித்தமும், ஒருவனுக்கு நிரம்பி இருக்குமாயின், அவன் எத்தகைய சத்ரு பயத்தையும் ஜெயிக்கலாம். த்ரோக புத்தி கொண்டு செய்யும் எந்தச் சதியாலோசனைக் காரியங்களும் அவனை அண்டுவதற்கே அஞ்சும். மனிதனை உலகம் போற்றச் செய்வது பணமா? அல்லது ஒழுக்கம் நிறைந்த தூய குணமா? பணத்தினால் அடையும் பெருமை பாசி போன்றதாகும். உத்தம குணத்தினால், பார புத்தியினால், சத்தியத்திற்குக் கட்டுப்பட்டு உழைக்கும் உழைப்பினால் அடையும் பெருமை கல்லின்மேல் எழுத்திற்கு நிகராகும். இந்த உண்மை தத்துவத்தையே ஆத்மசக்தி என்கிற நாவல் விளக்கிக் காட்டுகிறது.

# படகோட்டி

வை. மு. கோதைநாயகி அம்மாள்

எழுதிய

49-வது நாவல்

" ஜகன்மோகினி " ஆபிஸ்,

26, தேரடித் தெரு,

திருவல்லிக்கேணி, சென்னை.

காபிரைட்.] [விலை அணா 8.

# ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள்

## எழுதிய நாவல்கள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| **1925** | | |
| 1. வைதேகி | 2 | 8 |
| **1926** | | |
| 2. பத்மசுந்தரன் | 2 | 8 |
| **1927** | | |
| 3. சண்பகவிஜயம் | 1 | 12 |
| 4. ராதாமணி | 2 | 8 |
| **1928** | | |
| 5. கௌரீமுகுந்தன் | 1 | 12 |
| 6. நவநீதகிருஷ்ணன் | 2 | 0 |
| **1929** | | |
| 7. கோபாலரத்னம் | 0 | 14 |
| 8. மாதவமணி | 0 | 3 |
| 9. சாருலோசனா | 2 | 8 |
| **1930** | | |
| 10. சுகந்தபுஷ்பம் | 1 | 0 |
| 11. வீரவஸந்தா | 0 | 8 |
| 12. சாமளநாதன் | 2 | 0 |
| 13. ருக்மிணிகாந்தன் | 2 | 0 |
| **1931** | | |
| 14. ஸாரமதி | 1 | 12 |
| 15. நளினசேகரன் | 0 | 8 |
| **1932** | | |
| 16. பரிமளகேசவன் | 1 | 4 |
| 17. மூன்று வைரங்கள் | 0 | 8 |
| 18. உத்தமசீலன் | 1 | 4 |
| 19. கதம்பமாலை | 0 | 12 |
| **1933** | | |
| 20. காதலின் கனி | 2 | 8 |
| 21. சோதனையின் கொடுமை | 1 | 8 |
| 22. படாடோபத்தின் பரிபவம் | 0 | 8 |
| **1934** | | |
| 23. தியாகக் கொடி | 2 | 0 |
| 24. ஜெயஸஞ்சீவி | 0 | 4 |
| 25. பக்ஷமாலிகா | 0 | 6 |
| 26. புத்தியே புதையல் | 0 | 14 |
| **1935** | | |
| 27. மங்களபாரதி | 2 | 0 |
| 28. பட்டமோ பட்டம் | 0 | 10 |
| 29. சுகுணபூஷணம் | 0 | 4 |
| 30. பிச்சைக்காரக்குடும்பம் | 0 | 8 |
| 31. ஆனந்தஸாகர் | 0 | 8 |
| 32. அம்ருததாரா | 0 | 4 |
| **1936** | | |
| 33. இன்பஜோதி | 1 | 4 |
| 34. ராஜமோஹன் | 1 | 4 |
| 35. அனாதைப் பெண் | 1 | 4 |
| 36. ப்ரேமப்ரபா | 0 | 8 |
| **1937** | | |
| 37. அன்பின் சிகரம் | 0 | 4 |
| 38. சாந்தகுமாரி | 1 | 0 |
| 39. மாயப்ரபஞ்சம் | 1 | 0 |
| 40. சந்திரமண்டலம் | 1 | 0 |
| **1938** | | |
| 41. வாழ்க்கையின் நாதம் | 1 | 4 |
| 42. உளுத்த இதயம் | 0 | 4 |
| 43. மகிழ்ச்சி உதயம் | 0 | 10 |
| 44. ஜீவியச் சுழல் | 1 | 4 |
| 45. மாலதி | 0 | 8 |
| 46. வத்ஸகுமார் | 0 | 8 |
| **1939** | | |
| 47. கஸ்தூரி திலகம் | 1 | 4 |
| 48. கானல் நீர் | 1 | 4 |
| 49. படகோட்டி | 0 | 8 |
| 50. ஆத்மசக்தி | 1 | 4 |

**“ஜகன்மோகினி” ஆபீஸ்,**

**26, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.**

# 15

படகிலிருந்து தப்பிய மனிதர் மெல்ல எழுந்து நடக்கும் சக்தி பெற்றுவிட்டார். அதற்கு முன்பே அவர் தந்தி மூலம் தன் விபத்தையும், ஆபீஸ் கட்டுகள் ஆற்ரோடு போய்விட்டதையும் சர்க்காருக்குத் தெரிவித்துவிட்டார். படகோட்டியைப் பார்க்க அவர் இங்கு வந்தார். இங்கு பார்வதி உட்கார்ந்திருப்பதைப் பார்த்ததும் அம் மனிதர் சற்றுத் திகைப்பும் பிரமிப்பும் அடைந்து நின்ருர். அவரைப் பார்த்ததும் பார்வதிக்கும் ஒன்றும் தோன்ருமல் ஏதோ ஒரு பழய முகத்தைப் பார்ப்பதாகத் தோன்றியதால், உற்று உற்றுக் கவனித்துப் பார்த்தாள்.

அம் மனிதரும் அதே மாதிரியான சந்தேகத்துடன் பார்த்த படியே, "அம்மா! நீங்கள்...ஸ்ரீராமநகர் பிச்சுமணியின் குடும்பத்தைச் சேர்ந்த பார்வதி...

பார் :—ஆமாம்...நான் பார்வதிதான். இவன், என் மகன் பசுபதி......தங்களை......எங்கேயோ......நீங்கள் கிருஷ்ணபுரத்து, குருமூர்த்தியின்...என்று முடிப்பதற்குள், "ஹா...ஐயோ! நான் குருமூர்த்தியின் மகன் கோபாலன்தான்...பார்வதி!...பார்வதி!... என்னை மன்னித்துவிடு...என்னப்பா! பசுபதி! பசுபதி! தனயனின் கடமையை நீ உன்னை யறியாமலேயே செய்துவிட்டாய். நான்தான் மகாபாவியாய் உங்களைக் கைவிட்டுத் திரிந்தேன். என்னை மன்னித்துவிடு. என்மீது கோபிக்காதே. என்னப்பனே!"—என்று பசுபதியின் மீது பாய்ந்து அன்பு ததும்பக் கட்டித் தழுவி ஆனந்தக் கண்ணீர் பெருக்கினுன்.

பார்வதியின் மனம் எப்படித்தான் பொங்கிப் பூரித்தது என்று கூறவேண்டுமா! வெகு காலத்திற்கு முன்பு இழந்துவிட்ட தம் நிதியை மீண்டும் பெறுவார்கள் என்று யார் கனவு காண முடியும்? அவள் முற்றிலும் புதிய மனுஷியாக மாறிவிட்டது போன்ற தோற்றம் உண்டாகியது. தன் கணவனின் காலில் விழுந்து வணங்கிப் பின்..."இப்போதும் நீங்கள் மனப்பூர்வமாக எங்களைப் பார்க்கவேண்டுமென்று நினைத்திருக்கவே மாட்டீர்கள். ஏதோ எதிர்பாராது நாங்கள் அகப்பட்டு விட்டோம். இதோ! உங்கள் மருமகள். சம்மந்திகள்" என்று கமலாவையும் அவளுடைய பெற்ருேரையுங் காட்டினுள்.

கோபாலன் நெஞ்சில் அவ் வார்த்தை இடித்துக் காட்டுவது போலிருந்தது. "பார்வதி! நான் ஆதியில் மிகவும் கொடிய மிருகம் போலிருந்து திரிந்ததும், ஊரை விட்டே ஓடி விட்டதும் உண்மை

தான். அந்தப் புதிய திமிர் அடங்கிய பிறகு நான் தவித்ததும், தாய்நாடு திரும்பிய பிறகு உங்களைத் தேடி அலைந்ததும், விவரம் தெரியாது மனமுடைந்து மீண்டும் பித்தன்போல் ஊர் ஊராய்ச் சுற்றியதும், ஒரு பெரியவரின் உபதேசத்தினால் ஒரு உத்தியோகம் பெற்றும் மனம் நிம்மதியடையாது துடிப்பதும் அந்தப் பகவானுக்குத்தான் வெளிச்சம்.

பார்வதி! உங்களைப்பற்றிக் கேள்விப்பட்ட விஷயம் என்ன தெரியுமா? இப்போது அதைச் சொல்லவும் கூசுகிறது. நீ குழந்தையுடன் ஓடிவிட்டதாக ஒரு வதந்தி. இறந்துவிட்டதாக ஒரு வதந்தி. இவைகள் என் மனத்தை முறியடித்துவிட்டதால், அப்படியே நான் தனியாகவிருக்க நேர்ந்துவிட்டது. பார்வதி! போனதைப்பற்றி இனி நினைத்துப் பலனில்லை. என் பாபம் தொலைந்தது. என் சாபமும் விலகியது. என் தாபமும் தீர்ந்தது. இனி, பழைய கதைகளைப் பேசாதே. பசுபதி! என் செல்வா!" என்று அவன் முகத்தைத் திருப்பிப் பார்த்தான்.

அவன் மனத்தில் ஏற்கெனவே போராடும் துக்கத்துடன் தன் தந்தையே அந்த மனிதன் என்பதை யறிந்ததும் அவன் மனம் சந்தோஷத்தால் குழம்பிப்போய்விட்டது. வாய் ஊமையாகியது. சற்றுச் சமாளித்துக்கொண்டு தன் பிதாவை இறுகத் தழுவிக் கட்டிக்கொண்டான். ஒரே ஆனந்த மயமாக மாறிவிட்ட குடும்பத்தின் சுவையைக் கூறவேண்டுமா?

பின்னும் இரண்டு நாட்கள் சென்றன. பசுபதியின் கண்ணில் நளினி படவே இல்லை. அவள், கமலாவையும், பார்வதியையும் வெகு பக்ஷத்துடன் விசாரிப்பதும், உபசரிப்பதும், பேசுவதுமாக வித்தியாசமே இல்லாத களங்கமற்ற இதயத்துடன் நடந்து வந்தாள். உடம்பு முற்றிலும் குணமாகிவிட்டதால், ஊருக்குப்போக வேண்டுமென்று எல்லோரும் கிளம்பினர்கள்.

பசுபதிக்குத் தன் படகு எங்காவது சிதறிப்போய் விட்டதோ என்ற கவலை மட்டும் தீரவே இல்லை. சில செம்படவர்கள், அந்தப் படகு ஒதுக்குப்புறமாகக் கிடந்ததைக் கண்டு, அது பசுபதியின் படகுதான் என்பதை யறிந்து, அவன் போவதற்கு முன்பு அதை இங்கு கொண்டுவந்து சேர்த்தார்கள். தன் படகே கிடைத்துவிட்ட சந்தோஷம் பசுபதியைப் பூரிக்கச் செய்தது. அதை ரிப்பேர் செய்து, அதிலேயே ஊருக்குப் போவதற்கும் தயாராகிவிட்டான்.

எல்லாம் சந்தோஷகரமாயும் மங்களகரமாயும் முடிந்துவிட்டன. எனினும், நளினியின் விஷயம் இவனை உள்ளுக்குள் எரிக்கும் நோயைப்போல் எரித்துக்கொண்டே இருப்பதை யார் அறிய முடியும்?

மீண்டும் சில தினங்களாயின. எல்லோரும் கிளம்பிவிட்டார்கள். பெரியமியாதிக்காரரும் அன்புடன் பிரிவுபசார விருந்து நடத்தி, அவர்களை வழியனுப்பும்போது அவர் கண்களில் நீர் வழிந்தது. இத்தனை நாள் கண்ணில் படாது இருந்த நளினி, கமலாவின் தோள்மீது கையைப்போட்டுக்கொண்டு ஆற்றங்கரைக்கு வந்து படகில் ஏற்றிவிட்டு, பார்வதியிடம் பேசி வழியனுப்பினுள். இதைக் கண்ட பசுபதியின் இதயம் துடித்தது. அவனை யறியாது அவன் தேகம் படபடத்து ஓர் மின்சாரத்தினுல் தாக்கப்பட்டுச் சித்திரவதை யடைந்தது.

பலபேர் மத்தியில் வாய் திறப்பதும் பிசகு. நளினியின் வேண்டுகோளின்படி அவளிடம் பேசாதிருப்பதும் கடினமாகத் தோன்றியது. ஆனுல் என்ன செய்வான் பாவம்! நளினி ஆற்றங்கரையிலுள்ள ஓர் ஆலமரத்தடியில் அதன் விழுதைக் கையில் பிடித்தவாறே பதுமைபோல் நின்றுள். கண்களில் நீர் சொட்டுகிறது. தன் அத்தையின் ஊரிலிருக்கையில் நடந்த பழங்கதைகள் முற்றும் இருவர் மனத்திலும் ஏக காலத்தில் போராடின. ஏக காலத்தில் இருவருடைய ஆத்மாக்களும் தவியாய்த் தவிப்பதைப் பகவானையன்றி வேறு யாரால் அறிய முடியும்?

"போய் வருகிறேன்...போய் வருகிறேன்"...என்ற சப்தம் ஒவ்வொருவருடைய வாயிலிருந்தும் த்வனித்தது. நல்லது; க்ஷேமமாகப் போய்ச் சேர்ந்ததும் கடிதம் போடுங்கள்" என்று கரையிலுள்ளவர்கள் பதில் கூறினுர்கள். ஆனுல், படகோட்டியின் வாய் அடைத்துவிட்டது. கண்ணீரின் பிரவாகத்தால் கண்ணும் தெரியவில்லை; மப்பாகிவிட்டது. அவன், தான் படகை ஓட்ட வேண்டும் என்பதையும் மறந்தான். 'போய் வருகிறேன்' என்பதைத் தலை அசைப்பினுலேயே கூறினுன்.

எங்கும் ஆனந்தமாக பக்ஷிகள் கும்பல் கும்பலாகப் பாடிக்கொண்டு பறந்து செல்கின்றன. பிரிந்து கிடந்த மனிதர்களெல்லாம் கும்பலாக ஒரே படகில் பிரயாணம் செய்யும் சந்தோஷத்தில் படகுக்குள் இருப்பவர்கள் தம்மையே தாம் மறந்து விட்டார்கள் எனலாம். படகும் நகர்ந்தது. பசுபதியின் கண்ணீரும் உருண்டு ஆற்றில் விழுந்து கரைந்தது. மரத்தடியில் நிற்கும் தேவதையைப் போன்ற பெண்மணியின் கண்ணீரால் பூமாதேவி அபிஷேகம் செய்யப்பட்டாள். நான்கு விழிகளும் தங்கள் ஏக்கச் சுடரால் எரிந்து கொண்டு சண்டை பிடிப்பதுபோலிருந்தன. அப்போது மாலை நேரமாகையால் ஆகாயத்தில் நிஷ்களங்கமாக சந்திரனும் கீழ்த்திசையில் உதயமாகிப் பால்போன்ற தனது குளிர்ந்த கிரணத்தை அள்ளி வீசினுன்.

திருப்பதிக்குச் சென்று மொட்டை யடித்துப் பிரார்த்தனை செலுத்தி விட்டுத் திரும்பும் ஒரு குடும்பத்தார் மற்றொரு படகில் 'கோவிந்தா! கோவிந்தா! வெங்கட்ரமண கோவிந்தா! கோவிந்தா! ஏழுமலை வெங்டேசப் பெருமாளுக் கொரு கோவிந்தம் போட்ரு! கோவிந்தா! கோவிந்தா! அலமேலு ஆதிலக்ஷிமிக்கு ஒரு கோவிந்தம் போட்ரு! கோவிந்தா! கோவிந்தா!' என்று குழந்தை முதல் பெரியவர்கள் வரையில் ஆனந்தமாக 'கோவிந்தா! கோவிந்தா!' என்று எம்பெருமானின் நாமத்தைப் பஜிக்கும் சப்தம் வெகு இனிமையாய் இவர்கள் செவியில் விழுந்ததும், எல்லோருடைய மனமும் சந்தோஷத்தினுல் பூரித்துப் புளகாங்கிதம் அடைந்தது. பார்வதியின் மனத்தில் "கோவிந்தா! ஏழுமலைவாஸா! அடுத்த வருடத்திற்குள் என் மகனுக்குத் தீர்க்காயுஸுடன் ஓர் குழந்தையை அளித்து, என் குறையைத் தீர்த்து விடு. உன் சன்னிதானத்திற்குக் குழந்தையுடன் வந்து ஆனந்தமாக தரிசித்துக் களிக்கிறேன்" என்ற ஒரு உணர்ச்சி எழுந்து தாண்டவமாடியது. அந்த வேகத்தில் ஒரு குழந்தை அப்போதே தன் மடியில் விளையாடுவது போன்ற உருவெளித் தோற்றமும், அளப்பரிய சந்தோஷமும் அவளுக்கு உண்டாகியது. சுபம்!

முற்றிற்று.

ஆவணக் காப்பக
183039
600 008

## 1939-வது வருஷத்திய நாவல்கள்



| | | |
|---|---|---|
| கஸ்தூரீதிலகம் அல்லது காறும்ருதம் | ரூ. | 1—4 |
| கானல் நீர் அல்லது கபட உலகம் | „ | 1—4 |
| படகோட்டி | „ | 0—8 |
| பொன்விழா நாவல் | „ | 1—4 |

ரூ. 3/- முன் பணம் அனுப்புகிறவர்களுக்கு, மேற்கண்ட 4 நாவல்களும் தபாற் செலவின்றி அனுப்பப்படும்.


" ஜகன்மோகினி " பிரஸ், திருவல்லிக்கேணி. (ககக௯௩௯)